# மார்க்கம்

சமூக பொருளியல் பண்பாட்டு ஆய்வுச் சஞ்சிகை

## சூழலும் அபிவிருத்தியும்


- சூழலும் அபிவிருத்தியும்
  *கொட்பிரே குணதிலக*
- சூழல் முகாமைத்துவம்
  *யோகா இராசநாயகம்*
- பூகோள வெப்பமயமாதல்
  *க. றொபேட்*
- இலங்கையின் வரிஅமைப்பு
  *பா. சிவாஜி*
- பெருந்தோட்டத் துறையின் சமூக - பொருளாதார உருமாற்றம்
  *வி. நித்தியானந்தன்*
- சீராக்கல் கொள்கையும், வறுமை தணிப்பும்
  *சி. அம்பிகாதேவி*
- தனியார் மயமாக்கல்
  *தேவராஜன் ஜெயராமன்*
- சுவாமி விபுலானந்தரும் அறிகைச் செயல்முறையும்
  *சபா. ஜெயராசா*
- வைஷ்ணவமும் விசிட்டாத்துவைதமும்
  *நா. ஞானகுமாரன்*


கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்திற்கு
திரு. ... குமரன்
அவர்கள் நன்கொடையாக அளித்தது

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
12 SEP 2003
நூலகம்

5
R

மார்கா நிறுவக வெளியீடு    இதழ் - 1, மலர் 2 & 3    1992

# மார்க்கம்

330-S
மார்க்
SLPR

சமூக பொருளியல் பண்பாட்டு ஆய்வுச் சஞ்சிகை

மார்கா ஆய்வு நிறுவகத்தின் ஆய்வுச் சஞ்சிகையான இது மூலச் சொல்லின் தமிழ் வடிவமாக "மார்க்கம்" எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. மார்க்கம் என்பது "வழி" "பாதை" யைச் சுட்டுவதாகும் "மார்க" என்னும் வடமொழியிற் சுட்டப்பெறும் பன்மைப் பொருள் "மார்க்கம்" என்னும் தமிழ் வடிவத்தினுள் தொக்கு நிற்கும். மார்க்கம் பால் பகா அஃறிணைப் பெயராகும். எனவே இங்கு நாம் ஒரு "வழியை" மாத்திரம் சுட்டாது உண்மையின் தேடலுக்கான பல்வேறு மார்க்கங்களையே சுட்டுகின்றோம். இந்தியக் கலை மரபில் "மார்க்க" என்பது செந்நெறிக் கலைகளைச் சுட்டும் என்பதையும் நாம் நாட்டிய சாஸ்திரம், சிலப்பதிகார உரைகள் வழியாக அறிகிறோம். மார்க்கத்தின் உள்ளடக்கம் இந்தச் செந்நெறிப்பாட்டை உறுதி செய்வதாக இருத்தல் வேண்டும். இது கட்டுரையாளர்களுக்கான கடமையாகவும் வாசகரின் உரிமையாகவும் அமைதல் வேண்டுமென்பது எமது அவா.

ஆசிரியர்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
12 SEP 2003
நூலகம்

கட்டுரைகளில் காணப்படும் கருத்துக்கள் மார்கா நிறுவகத்தின் கருத்துக்கள் அல்ல, அவை கட்டுரையாசிரியர்களின் கருத்துக்களே.

மார்க்கம்

மலர் - 1, இதழ் 2 & 3 1992

வெளியீடு

மார்கா நிறுவகம்
அபிவிருத்தி ஆய்வுக்கான
இலங்கை மையம்
த.பெ. இல. 601
61, இசிப்பத்தன மாவத்த,
கொழும்பு - 5.
தொ. இல. 581514, 585186

**வாசகரின் கவனத்திற்கு................!**

மார்கா நிறுவகத்தின் காலாண்டு இதழான மார்க்கம் சஞ்சிகையின் இவ்விரண்டாவது வெளியீடு "சூழலும் அபிவிருத்தியும்" என்னும் கருப்பொருளை மையமாகக் கொண்டு பெரும்பாலான கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகிறது. மார்க்கம் வாசகர்கள் இதன் மூலம் பயனடைவர் என நம்புகிறோம்.

எமது அடுத்த இதழ் "இலங்கைப் பொருளாதாரம்" என்னும் கருப்பொருளைச் சார்ந்து மலர இருக்கின்றது. இலங்கையில் ஏற்பட்டு வரும் பொருளாதார மாற்றங்களைக் கவனத்திற் கொண்டு, இக்கருப் பொருள் சார்ந்த கட்டுரைகளின் அவசியத்தைப் பலர் கடிதம் மூலம் எமக்கு அறிவுறுத்தியதின் பேரில் மூன்றாவது இதழை இப்பொருள் சார்ந்து வெளியிடவிருக்கிறோம்.

மாணவர்களின் நன்மை கருதி "மாணவர் பக்கம்" என்னும் புதிய பகுதியையும் இவ்விதழில் ஆரம்பித்துள்ளோம். வாசகர்களிடமிருந்து அபிப்பிராயங்கள், ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன.

★★★★

# MARKAM

A Journal for the study of Society, Economy and Culture

Vol. 1, No. 2 & 3 - 1992

ADVISORY COMMITTEE

Mr. Godfrey Gunatilleke
Dr. V. Kanesalingam
Mr. Newton Fernando
Prof. K. Sivathamby
Prof. V.Nithiyananthan
Mr. R. Sivachandran

EDITOR

S.Antony Norbert

EDITORIAL ASSISTANTS

Miss. Narmada Kamalanathan
Miss. Jayaluxmi Ponniah

TYPE SETTING

New Greens
2/3, Plaza Complex,
33, Galle Road,
Colombo 6.

PRINTING

Unie Arts (PVT) Ltd.,
48 B, Bloemendhal Road.
Colombo 13.

PUBLICATION

Marga Institute
(Sri Lanka Centre for
Development Studies),
61, Isipathana Mawatha,
Colombo 5.

## CONTENTS

* Environment and Development — 4
Godfrey Gunatilleke

* Some Aspects of Environmental Management — 6
Yoga Rajanayagam

* Global Warming: North - South Contraversy in Environmental Problems. — 10
G.Robert

* Tax Systems in Sri lanka — 15
P.Sivagi

* Socio - Economic Transition of the Plantation Sector in Sri Lanka since the Natesa Iyer Era (1920 - 1947): An Overview — 23
V.Nithiyanandan

* Structural Adjustment Policies of the World Bank and poverty alleviation — 32
S.Ambihadevy

* Privatization — 37
T.Jeyaraman

* Swamy Vipulananda and the Congnitive Process — 40
Saba Jeyarajah

* Vaisnavism and Visistadvaita — 44
N.Gnanakumaran

* Student's Page — 49

# மார்க்கம்

சமூக பொருளியல் பண்பாட்டு ஆய்வுச் சஞ்சிகை

இதழ் - 1, மலர் 2 & 3 1992

**ஆலோசனைக்குழு**

திரு. கொட்பிரே குணதிலக,
கலாநிதி வ. கணேசலிங்கம்,
திரு. நியூட்டன் பெர்னாண்டோ,
பேரா. கா. சிவத்தம்பி,
பேரா. வி. நித்தியானந்தன்,
திரு. இரா சிவச்சந்திரன்.

**ஆசிரியர்**

எஸ். அன்ரனி நோபேட்

**ஆசிரிய உதவியாளர்**

செல்வி நர்மதா கமலநாதன்,
செல்வி ஜெயலஷ்மி பொன்னையா

**கணணி அச்சமைப்பு**

நியூ கிறீன்ஸ்
2/3 பிளாசா கட்டிடம்
33, காலிவீதி,
கொழும்பு - 6

**அச்சிடுதல்**

யுனி ஆர்ட்ஸ்
(பிரைவேட்)லிமிடெட்
48 பி, புளுமெண்டால் வீதி,
கொழும்பு - 13

**வெளியீடு**

மார்கா நிறுவகம்
61, இசிப்பத்தன மாவத்த,
கொழும்பு - 5

## பொருளடக்கம்

* சூழலும் அபிவிருத்தியும் — 4
  கொட்பிரே குணதிலக
* சூழல் முகாமைத்துவம் பற்றிய சில அம்சங்கள் — 6
  யோகா இராசநாயகம்
* பூகோள வெப்பமயமாதல்: சுற்றுச்சூழல் குறித்து வடக்கு, தெற்கு நாடுகளின் முரண்பாட்டு வாதம். — 10
  க. றொபேட்
* இலங்கையின் வரிஅமைப்பு முறை. — 15
  பா. சிவாஜி
* நடேசய்யர் காலம் முதல் இலங்கையில் பெருந்தோட்டத் துறையின் சமூக - பொருளாதார உருமாற்றம்: ஒரு கண்ணோட்டம். — 23
  வி. நித்தியானந்தன்
* உலக வங்கியின் அமைப்பு ரீதியான சீராக்கல் கொள்கையும், வறுமை தணிப்பும் — 32
  சி. அம்பிகாதேவி
* தனியார் மயமாக்கல் — 37
  தேவராஜன் ஜெயராமன்
* சுவாமி விபுலானந்தரும் அறிகைச் செயல்முறையும் — 40
  சபா. ஜெயராசா
* வைஷ்ணவமும் விசிட்டாத்துவைதமும் — 44
  நா. ஞானகுமாரன்
* மாணவர் பக்கம் — 49

# சூழலும் அபிவிருத்தியும்

**கொட்பிரே குணதிலக**

இலங்கையின் சூழல் பிரச்சினையானது தனியே சூழலைப் பாதுகாப்பது மாத்திரமல்லாமல் வேலை வாய்ப்பை வழங்குதல், வறுமையை ஒழித்தல் ஆகியவற்றினை விரைவாக அடைந்து கொள்வதற்கும் உதவுவதாக இருக்கவேண்டும். கடந்த காலங்களில் செய்தது போன்றல்லாமல் மிகத் திறமையாக மனித, இயற்கை வளங்களைப் பயன்படுத்தி இந்நோக்கத்தினை உயர்வான வீதத்தில் அடைந்து கொள்ள வேண்டும். இதன் கருத்து என்னவெனில் சூழல் பாதுகாப்பும், விரைவான அபிவிருத்தியும் ஒன்றுடன் ஒன்று இணைந்து செல்ல வேண்டும் என்பதேயாகும். எமது அபிவிருத்தியானது இத்தகைய இரு நோக்கங்களையும் ஒரே நேரத்தில் அடைந்து கொள்வதற்கான ஒன்றாக இருக்க வேண்டும். மனித வரலாற்று காலத்தினூடாக இது மிகவும் கஸ்டமான விடயமாக இருந்ததை அறிய முடிகின்றது.

மனித சூழலை உருவாக்கும் நோக்கில், மனிதன் இயற்கைச் சூழலை மாற்றியும், திரும்ப ஒழுங்குபடுத்தியும் வந்துள்ளான். இயற்கையுடனான இத் தொடர்புகள் நாகரீகத்தின் பாற்பட்டதாக, விசேடமாக மனித முயற்சியின் பிரதிபலிப்பாக இருந்துள்ளது. இந்த நோக்கத்தை அடைந்து கொள்ளும் வண்ணம் மனித வர்க்கம் எப்போதும் மனிதனுக்கும் இயற்கைக்குமிடையில் இருக்கக் கூடிய சமநிலையை அலட்சியப்படுத்தியே வந்துள்ளது. இயற்கையை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தை அலட்சியப்படுத்துகின்ற அல்லது புறக்கணிக்கின்ற அபிவிருத்தியின் மூலம் ஒரு நன்மையையும் அடைந்து விடவில்லை. இயற்கையானது எப்போதும் மனிதனுடன் ஒத்ததாக இருக்கவில்லை. அமைப்பு ரீதியான மாற்றச் செயல்முறைகளும், உள்ளார்ந்த சீரமைப்புகளும் எல்லாக் காலத்திலும் இயற்கையில் ஏற்பட்டு வந்திருப்பதைக் காணமுடிகின்றது. ஆனால் இங்கு குறிப்பிடத்தக்கது என்னவெனில் புவிச் சரிதவியல் மாற்றங்கள் அல்லது இயற்கை அழிவுகள் மனிதனுக்கு ஓர் அச்சுறுத்தலாகவே இருந்துள்ளன என்பதே. இவற்றினை விட காடுகளின் தேய்வு, வளமான நிலங்கள் வரண்டுபோதல், கரையோர நிலங்களில் அரித்தல், ஆற்றுப்படுக்கைகளின் மாற்றங்கள் என்பனவெல்லாம் மனிதனின் தலையீடு இன்றி இயற்கையினுள் இடம் பெறும் செயற்பாடுகளினூடாக இடம் பெறக் கூடியவையாகும். எனவே இயற்கையுடன் இடம் பெறும் நீடித்த போராட்டம், மனித தேவைகளுக்காக இவற்றினை மாற்ற எடுக்கும் முயற்சி என்பன தவிர்க்க முடியாதபடி மனித இருப்புகளின் அத்தியாவசிய அம்சங்களாகக் காணப்படுகின்றன.

இயற்கையுடனான மனித தொடர்புகள் அபிவிருத்தி செயற்பாட்டுடன் இணைந்தவை. அபிவிருத்தியுடனான இத்தொடர்புகள் மறுக்க முடியாதவை. இத்தொடர்புகளை இயற்கையில் பெருமளவில் காணப்படும் உயிரணுக்களுக்கு ஒப்பிடமுடியும். இவை ஒரு வாழ்வுக் கலமாக இருக்கின்றன. இவ்வுயிரணுக்கள் தன்னளவில் பெரியனவாகி தமது உயிர் வாழ்வுக்கான மூலாதாரத்தையே அழிக்கின்றன. அதாவது உயிர் வாழ்வதற்குத் தமது சொந்த வாழ்வின் இருப்பிலுள்ள உயிரணுக்களையே அழிக்கின்றன. இதே போன்று தான் மனித வர்க்கம் பூமியில் இத்தகைய உயிரணுக்கள் போல செயற்படுகின்றன.

இயற்கையை மாற்றுவதும், அதனை மனித நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதற்குமான மனிதனின் இயலளவில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க வளர்ச்சியின் காரணமாக சூழலியல் சமநிலையுடன் தொடர்பான பிரச்சினையானது இன்று புதிய வடிவமெடுத்துள்ளது. இப்பிரச்சினை பற்றிய தெளிவான வித்தியாசத்தையும் இங்கு அவதானிக்க முடிகிறது கைத்தொழில் மயமாக்கப்பட்ட சமூகங்களில் அடைந்து கொள்ளப்பட்ட தொழில்நுட்ப நிலையானது இக்கோளம் முழுவதையும் அபாய நிலைக்கு உள்ளாக்கியுள்ளது. இத்தகைய அபாயகரமான நிலையைக் கட்டுப்படுத்தவும் வெற்றி கொள்ளவும் அதே தொழில்நுட்ப இயலளவை அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதுடன் அதனை உருவாக்கும் தகுதியையும் கொண்டிருக்கின்றது. மறுபுறமாக நோக்கில் வளர்முக நாடுகள் இதே தொழில்நுட்ப பிரயோகத்துடன் உயர்வான வாழ்க்கைத் தரத்தை அடைந்து கொள்வதற்கு முயற்சிக்கின்றன. இது உலகளாவிய சூழல் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றதுடன் அவை கைத் தொழில் நாடுகளை எதிர்நோக்கிய முன்னைய பிரச்சினைகளின் வடிவமாகவும் உள்ளன.

இத்தகைய பிரச்சினைகளுக்கு இலகுவான தீர்வு காண்பதரிது. பூமி முழுவதற்குமான சூழலியல் சமநிலையானது, பெரும்பான்மையான மனித இனத்தை கவனத்தில் எடுக்காது விடுவதன் மூலமோ, மூன்றாம் உலக நாடுகளின் வறுமைச் சமூகங்களையும், கைத் தொழில் மயப்பட்ட சமூகங்களில் இருப்பது போன்ற உயர்வான வாழ்க்கைத்தர இயலளவையும் உரிமையையும் மறுப்பதன் மூலமோ அடைந்து கொள்ள முடியாதென்பது குறிப்பிடத்தக்கது. மறுபக்கம் மிகத் தெளிவான ஆதாரங்கள் உள்ளன. அதாவது செல்வந்த நாடுகளின் தற்போதைய வாழ்வுமுறைகள் ஏனைய நாடுகளில் திரும்ப நிகழுமானால் அது சூழலியலில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பது மட்டுமன்றி முழுப் பூமிக்குமே அழிவை ஏற்படுத்துவதாக அமையும்.

புதிய உலக ஒழுங்கு பற்றிய சர்ச்சை இன்று நடைபெற்று வருகின்றது. கடந்த நான்கு தசாப்தங்களாக நாங்கள் வாழ்ந்து

**திரு. கொட்பிரே குணதிலக**
**நிறைவேற்றுப் பணிப்பாளர்**
**மார்கா நிறுவகம்**

வருகின்ற "உலக ஒழுங்கின் பவிப்போரை" வெற்றி கொள்ள வேண்டும். இப்புதிய உலக ஒழுங்கின் மையப் புள்ளியாக சூழலையும், மனிதனுக்கும் இயற்கைக்குமிடையிலான சமநிலையைத் தொடர்புபடுத்துகின்ற பூகோள கவனமானது அமைந்திருக்க வேண்டும். அறிவு பூர்வமான புதிய உலக ஒழுங்கானது செல்வந்த நாடுகளுக்கும் வறிய நாடுகளுக்குமிடையிலான பிரிவுச்சுவராக இருக்கக் கூடாது. பூகோள சூழலியல் சமநிலையானது பூகோள மனித வாழ்க்கைமுறையில் குறிப்பாக ஒவ்வொரு சமூகமும் இயற்கையுடன் இயக்க சமநிலையை அடைந்து கொள்ள வேண்டும் என்பதைக் குறித்து நிற்கிறது. அத்துடன் அச்சமூகமானது தன் இயலளவை அபாயத்துக்குள்ளாக்காமல் வாழ்க்கைத் தரத்தைப் பேணுவதனையே நோக்காகக் கொண்டிருக்க வேண்டும். இதற்கு இடைவிடாத முயற்சி அவசியமாகும்.

உலக சமூகம் ஒன்றாகச் செயற்பட வேண்டியதன் அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது. தனிப்பட்ட சமூகங்கள் தமது அபிவிருத்தி உபாயங்களின் மையப்புள்ளியாக சூழல் சம்பந்தமான விடயங்களைக் கொண்டிருக்க வேண்டும். உயர்வான வாழ்க்கைத் தரத்தை விரைவாக அடையவும், மக்களின் பொருள்நலனில் (Material well-being)அபிவிருத்தி எற்படவும், இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும், அதனைப் புதுப்பிப்பதற்கான இயலளவைப் பாதுகாக்கவும், தொடர்ச்சியான அபிவிருத்திச் செயற்பாடுகளை நிலைக்கச் செய்யவும் உறுதி செய்யவேண்டும். இதன் மூலம் செல்வந்த, வறிய சமூகங்களின் வாழ்க்கை முறையில் நீண்டகால மாற்றங்களை அடைவதற்கான முக்கியத்துவத்தை வலியுறுத்த முடியும். அத்துடன் இத்தகைய பிரிவினருக்கிடையில் காணப்படும் சவால்களும் வித்தியாசமானவை.

இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் அபிவிருத்திப் போக்குகளும் வாழ்க்கை முறைகளும், தொடர்ச்சியான தொழில்நுட்ப முன்னேற்றங்களையும், விஞ்ஞான அறிவின் நன்மைகளையும் முன்னெடுக்காமல் செல்வந்த சமுகங்களின் உபரிகளையும் சமநிலையின்மையையும் தவிர்த்துக் கொள்வதாகவே உள்ளது. 1990 இன் பின் மனித சமூகத்தைப் பாரிய சவால்கள் எதிர் நோக்கியுள்ளன. விவசாயத்துறையில் கடந்த காலங்களில் மேற் கொள்ளப்பட்ட உபாயங்களின் மூலம் குறிப்பாக காடு அழித்தல், பயிர்ச்செய்கை நிலங்களின் விஸ்தீரணத்தை விரிவுபடுத்தல் என்பவற்றினால் உள்ளார்ந்த வளமானது சுரண்டப்பட்டுவிட்டது. நிலம் நீர் ஆகியவற்றின் திறமையான பயன்பாட்டின் மூலமும், உயர்வான உற்பத்தித்திறன் நடவடிக்கைகளினாலும் விவசாய வளர்ச்சியானது அடையப்பட்டது. இதனைச் செய்வதற்கு நிலத்தைச் செறிவாகப் பயன்படுத்த வேண்டும். உயர் விளைச்சல் தரும் இனங்கள், விஞ்ஞான தொழில்நுட்ப உள்ளீடுகள் எல்லாம் சூழலில் புதிய அழுத்தங்களை எற்படுத்தின. அத்துடன் புதிய விவசாய ஒழுங்கினை வேண்டி நிற்கின்றனவாகவும் காணப்படுகின்றன.

நாம் வறுமையையும், வேலையின்மைப் பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டுமாக இருந்தால் கைத்தொழில் மயமாக்கலுக்கு அதிக முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். இதன் அர்த்தம் என்னவெனில் நகரத்துறை கடந்த காலங்களிலும் பார்க்க மிக விரைவாக விரிவடைய வேண்டும் என்பதே. இவ்வாறு இடம் பெறும் போது அவை கைத் தொழில் நகரவளர்ச்சியுடன் சூழல் அபாயங்களையும் கொண்டு வருகின்றன. விவசாய அபிவிருத்தி உபாயங்களின் மூலம் மக்கள் ஈரவலயத்தில் நெருக்கமான சனத்தொகை கொண்ட கிராமியப்பகுதிகளிலிருந்து, அடர்த்தி குறைந்த வரண்ட வலயத்துக்கு இடம் நகர்த்தப்படுகின்றார்கள். கிராமத்திலிருந்து நகரத்துக்கான இடப் பெயர்வும், 1990 இன், பின் வளர்ந்து செல்லும் போக்கு காணப்படுகின்றது. நகரப்பகுதிகளில், மாகாணங்களின் கைத்தொழில் பரம்பலை முன்னெடுப்பதற்கான பொருத்தமான கைத்தொழிற் கொள்கைகள் இல்லாவிட்டால் அவை சூழல் பிரச்சினைகளை ஏற்படுத்தலாம்.

நாம் இயன்றளவு விரைவாக அபிவிருத்தியை மேற்கொள்ளவும், அதே வேளை சூழல் பற்றிய கவனத்தை எடுப்பதற்கும், சமூகம் என்ற முறையில் புதிய ஒழுங்குகளையும், விழுமிய முறைகளையும் விருத்தி செய்ய வேண்டும். வளங்களின் ஒவ்வொரு அலகினையும் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். சேதங்களைத் தவிர்ப்பதற்கும், வளத்தினைப் பாதுகாத்து பேணல் மூலமும் இந்நோக்கங்களை அடைந்து கொள்ள முடியும். உயர்வான உற்பத்தி திறனுண்டியதாக நாடு மாறவேண்டுமாக இருந்தால் விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் மிக அவசியம். மனிதனுக்கும் இயற்கைக்குமிடையிலான சமநிலையானது ஒரு நிலையான சமநிலையைக் குறிக்கிறது. ஒரு இயக்க சமநிலையாக இருக்க வேண்டும். இவ்வியக்கச் சமநிலையானது உயர்வான தொழில்நுட்ப மட்டத்தில் படிப்படியான உயர்ந்த வாழ்க்கைத்தர மட்டத்தை அடைந்து கொள்வதாக இருத்தல் வேண்டும். எனவே சூழல் அழிவுகளைத் தவிர்க்கவும், சூழல் பராமரிப்புக்கும், விஞ்ஞான தொழில்நுட்ப உபயோகத்தின் அதிகரிப்பானது சூழலை மையமாகக் கொண்ட அபிவிருத்திக்கு மிக அவசியமாகும்.

இறுதியாக சூழல் பராமரிப்புடன் கூடிய விரைவான அபிவிருத்தியானது மனித வாழ்க்கை முறையுடனும், விழுமியங்களுடனும் சமநிலையடைய வேண்டும். பொருள் நலனில் திருப்தியின்மையை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்திச் செயற்பாடானது நீடித்து நிலைக்காது என்பது குறிப்பிடத்தக்கது. வாழ்க்கைத் தரத்துக்கும், பொருட்களின் அளவுரீதியான அதிகரிப்புக்குமிடையிலான சமநிலையானது பொருள் சார்பற்ற திருப்தியின் அடிப்படையாக அமைந்துள்ளது. ஆகையால் எல்லாமட்டங்களிலும் நிலைத்த அபிவிருத்தியானது தவிர்க்க முடியாததாக மாறியுள்ளது. ஒவ்வொரு நாடும் நிலைத்த அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கான உபாயங்களை வகுக்கும் போது "ஆரோக்கியமான வாழ்க்கையின்" அளவுரீதியான மற்றும் தரரீதியான விடயங்களை மனதில் கொள்ள வேண்டும். சமூகத்தின் கலாச்சாரமானது விழுமியங்களை உருவாக்குவதில் முக்கிய பங்கினை வகிக்கிறது. இயற்கையுடனான இசைவாக்கத்தினை அடைந்து கொள்வதற்கான வாழ்க்கை முறைகளை முன்னெடுக்க வேண்டும். இதனால் அர்த்தமுள்ள ஆன்மீக வாழ்க்கை முறையினுக்கிடையில் பொருள் நலனை அடைந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

# சூழல் முகாமைத்துவம் பற்றிய சில அம்சங்கள்

யோகா இராசநாயகம்

மனிதனுக்கும், சூழலுக்கும் இடையில் காணப்படும் இடைவீடுகளின் பரஸ்பர, பலவீனமான தாக்கமானது சூழல் விஞ்ஞானத்தின் ஒரு பகுதியான வளங்களின் முகாமைத்துவம் மற்றும் அவற்றினைப் பேணிப் பாதுகாக்கும் விஞ்ஞானத்தின் அறிவுபூர்வமான ஒரு விடயமாக விளங்குகின்றது. மக்கட்தொகையின் அதிகரிப்பு, விரைவாக வளர்ச்சியடையும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள், சமூக ஒழுங்கமைப்பில் ஏற்பட்டு வருகின்ற, அதிகரித்து வரும் நவீனத்துவம் என்பவற்றின் கூட்டுவிளைவானது சூழலில் மனித தாக்கங்களை செறிவாக்கியும், துரிதப்படுத்தியும் வருகின்றது. இத்தகைய தாக்கங்களானது சமூக கலாச்சார மற்றும் நடத்தைப் போக்குகளின் பல்வேறு தன்மைகளுக்கேற்ப பிரதேசரீதியான வேறுபாடுகளைக் கொண்டிருக்கின்றன.

சூழல் என்னும் பதமானது விபரணரீதியாக இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும். ஆனால் அதனை வரையறை செய்வது மிகவும் கடினமானது. இத்தகைய வரையறை செய்யும் பிரச்சினையானது குறிப்பாகச் சூழலைக் கருத்தியல் ரீதியாக கட்டுப்படுத்த முயற்சிக்கும் போது அல்லது அளவீடு செய்யும் போது, அல்லது சூழலில் காணப்படும் இயற்கையம்சங்களையும், மனிதனால் உருவாக்கப்பட்டவைகளையும் வேறுபடுத்திக் காட்டமுயற்சிக்கும் போது எழுவது குறிப்பிடத்தக்கது. மரபு ரீதியான சூழல் பற்றிய வரையறைகள் யாவும் இயற்கையையும் மனிதனால் உருவாக்கப்பட்ட சூழலையும் சார்ந்ததாகவே இருந்தது. இயற்கைச் சூழலானது நிலவுருவங்கள், தாவரங்கள், காலநிலை வேறுபாடுகளையும், மனிதனால் உருவாக்கப்பட்ட பண்பாட்டுச் சூழல்களானது நகரங்கள் குடியிருப்புக்கள், தெருக்கள் ஆகியனவற்றையும் கொண்டிருக்கின்றன. சுருங்கக் கூறின் "புவிமேற்பரப்பில், குறிப்பிட்டகாலத்தில் மனிதனைச் சூழ்ந்து காணப்படும் அம்சங்களின் மொத்த நிலமைகளே சூழல்" என அழைக்கப்படுகின்றது.

ஆரம்பகால மக்களின் வாழ்க்கை நிலமைகளானது உள்ளூர் காலநிலை, நிலவமைப்பு, தாவரம், மண் ஆகியவற்றினை உள்ளடக்கிய முறையில் இயற்கையோடிணைந்தவையாகக் காணப்பட்டன. காலஞ் செல்ல செல்ல சூழலின் ஒருங்கிணைந்த பகுதியாக மனிதன் மாறினான். இதனடிப்படையில் நோக்கின் மனித சூழல் தொடர்புகளானது இரு வழி ஒழுங்கைக் கொண்டிருப்பதை அவதானிக்கலாம். (1) மனிதனில் சூழலின் தாக்கம் (2) சூழலில் மனிதனால் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள். சூழலில் மக்களின் சார்புரீதியான தாக்கங்களையும், மக்கள் மீது சூழலால் ஏற்படுத்தப்படுகின்ற பாதிப்புகளையும் அவதானிக்கும்போது எதற்கு எது காரணமாகிறது என்பதை நிர்ணயிப்பது கடினம். எவ்வாறு இருப்பினும் இதனை ஒரு ஒழுங்கமைப்பின் அடிப்படையில் வைத்து நோக்கும் போது அவற்றுக்கிடையிலான தொடர்புகள் மிகவும் கருத்துடையவையாக அமைவதைக் காணலாம். இதனை ஒரு ஒழுங்காக (System), குறிப்பிட்ட சில விடயங்களைக் கொண்ட பிரிவாகக் கருத முடியும். அல்லது வரையறை செய்யப்பட்ட எல்லைக்குள் குறிப்பிட்ட சில தொடர்புகளின் ஒரு பகுதியாகக் கருத முடியும், (Haggett, 1979). எமது நோக்கில் காரணிகளின் கூட்டுமொத்தமான நடத்தையிலும் சூழலில் காணப்படும் பல வகையான அமைப்புகளின் இடைத் தொடர்புகளின் மீதும் கவனம் ஈர்க்கப்படுகின்றதென்பது குறிப்பிடத்தக்கது.

மனித வர்க்கமானது, சக்தி, பொருள்பாச்சல் எனும் உபஒழுங்கின் சிக்கல் வாய்ந்த ஒழுங்கின் ஊடாக சூழலுடன் இணைந்துள்ளது. உபஒழுங்கானது "சூழல் தொகுதி" என வரையறை செய்யப்படுகின்றது. அதில் தாவரவகைகள், மிருகங்கள் தமது சூழலின் பல தொடர்புகளினூடாக இணைந்துள்ளன. "சூழலியல்" என்ற பதம் ஜேர்மனியைச் சேர்ந்த உயிரினவியலாளரான "ஏர்னஸ் ஹேகக்கில்" என்பவரால் 1868 இல் "தாவரங்களும்" சூழலுடனான அவற்றின் தொடர்புகளும்" என்ற ஆய்வில் முதன் முதலாகப் பயன்பட்டது. இச் சொல்லானது Oikos என்ற கிரேக்கச் சொல்லில் இருந்து பெறப்பட்டதுடன் அதன் கருத்து "வாழ்வதற்கான வீடு அல்லது இடம்" என்பதைக் குறிப்பதாகவும் இருந்தது.

மனித சூழலானது உயிரின சூழலையும், வளி, நீர் மண்டலம் ஆகியவற்றைக் கொண்ட வாழமுடியாத பகுதிகளையும் கொண்டுள்ளது. இவ்விரு சூழல்களும் வலைப்பின்னல் தொடர்புகளினடிப்படையிலும் பின்னூட்டு முறையிலும் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருப்பதுடன் சூழலின் ஒழுங்காகவும் உருவாகியது. இத்தகைய சூழல் கொண்டிருக்கும் இயற்கை வளங்களைப் பேணிப் பாதுகாத்தலும், முகாமைப்படுத்தலும் மிகவும் அவசியமானது. சூழலில் ஏற்படும் சீரழிவுகளை கட்டுப்படுத்தவும் அகற்றவும் இது அவசியமாகும். பேணிப்பாதுகாத்தல் என்ற கருத்தியலானது அறிவு பூர்வமான பயன்பாட்டின் அடிப்படையில் புவியில் காணப்படும் வளங்களைத் தொடர்ச்சியான நடவடிக்கையின் மூலம் பாதுகாத்தல் என்பதைக் குறிக்கும். உயிரினச் சூழலின் பொருத்தமான செயற்பாட்டில் தான் மனிதனின் வாழ்க்கை தங்கியிருப்பதினால் அவற்றைப் பேணிப்பாதுகாத்தல் அவனின் மீள் வாழ்வுக்கு மிக அவசியமாகும்.

சூழலில் காணப்படும் இயற்கை வளங்கள் புதுப்பிக்க முடியாதவை, புதுபிக்கக் கூடியவை என இரு வகையாகப் பாகுபடுத்தலாம். ஆனால் இவை நடைமுறையில் திருப்திகரமானவையன்று. வளங்களைப் பேணிப் பாதுகாத்தல் என்பதற்கான முக்கிய தேவை முகாமைத்துவமாகும். இயற்கை வளங்களின் ஒழுங்கமைக்கப்பட்ட பயன்பாட்டினை

யோகா இராசநாயகம்
B.A (Hons); Ph. D (Camb.); F.R.G.S.
புவியியல் பேராசிரியை, புவியியல்துறை
கொழும்புப் பல்கலைக்கழகம்

உறுதிப்படுத்தும் ஒரு செயற்பாடாக முகாமைத்துவம் அமைந்துள்ளது. வளங்களைப் பேணுதல், நிர்வகித்தல் என்பதில் "நீண்டகாலப் பயன்பாடு" என்னும் அம்சம் முக்கியமானது. அபிவிருத்தி என்பது "மனிதனின் பொருளாதார நலனுக்கான சூழல் மாற்றம் என்பதாக வரையறை செய்யலாம். ஒரு செயற்பாடாக இது அமைந்துள்ளதுடன் அதில் மனிதன், நிதி, வளப்பிரயோகம் என்பன அடங்குகின்றன. மனித வாழ்வினையும் மேன்படுத்துகின்றது. அபிவிருத்தியானது நிலைத்த அபிவிருத்தியாக அமைய வேண்டுமாயின் சமூக, சூழலியல் காரணிகள் கணக்கிலெடுக்கப்பட வேண்டும். பொருளாதார அபிவிருத்தி என்பது சூழலைப் பேணிப் பாதுகாத்தல் என்பது போல் மக்களுக்கானது. மனித தேவைகளைப் பெரும்பாலும் இயற்கை வளங்களின் அல்லது சூழலின் பயன்பாட்டின் மூலம் அடைந்து கொள்வதையே இலக்காகக் கொண்டது. அதே வேளை இப்பயன்பாட்டின் முடிவற்ற தன்மைபற்றி சூழல் முகாமைத்துவம் மற்றும் பாதுகாத்தல் முறைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். சூழல் முகாமைத்துவமும், அதனைப் பேணிப் பாதுகாத்தலும் பொருளாதார விருத்தியுடன் நெருக்கமற்ற இணைப்பையே கொண்டிருக்கின்றன. கிராமிய சமூகங்கள் பெரும்பாலும் நேரடியாகவே இயற்கை வளங்களில் தங்கியிருக்கின்றன. எதிர் காலத்துக்கான பேணிப் பாதுகாத்தல், திட்டமிடுதல் என்பன இத்தகைய மக்களுக்கு மிகவும் கடினமானதாக இருக்கும். நீடித்த அபிவிருத்தியானது சூழல் பாதுகாப்புடன் தொடர்பானது, அதுவின்றி வறுமை, சூழலியல் சீரழிவுகள் ஏற்படலாம். பொருளாதார அபிவிருத்தியானது தொழில் நுட்பத்தில் ஏற்படும் முன்னேற்றங்களினால் பெருமளவு சாத்தியமானது. ஆனால் சூழலின் யதார்த்த நிலைகளுக்குப் பொருந்துமாறு பயன்படுத்தப்படவில்லை. தொழில்நுட்ப ரீதியாக ஏற்பட்ட மாற்றங்கள், சூழலியல் ரீதியாக ஒன்றுடனொன்று தொடர்புபடுத்தப்படும் இயற்கைச் சூழலில் மனித - சூழல் ஒழுங்கு முழுவதையும் சீர்குலைத்து விட்டது. குறிப்பிட்ட சில கைத் தொழில்களின் மாசுபடல் தாக்கங்களையும், நீர்பாசனத் திட்டப் பகுதிகளில் நீருடன் தொடர்பான நோய்களின் பரவல்களையும் இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

## தாவரமும் மனிதனும்

அபிவிருத்தி எனும் நோக்கில் சூழலில் மேற் கொள்ளப்படும் மனித செயற்பாடுகள் அநேக சூழல் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளதுடன் இயற்கை வளங்களின் தேய்விற்கும் காரணமாகி வருகின்றது. இத்தேய்வானது அபிவிருத்திக்கான ஒரு சுய தோல்வியாகவும் அமைந்துள்ளது. தாவரப் போர்வைகளில் மனித செயற்பாடுகள் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. மனித நடவடிக்கைகளினூடான மாற்றங்கள் மண், காலநிலை, நிலவுருவியல், நீரின் தரம், அதன் அளவு ஆகியனவற்றையும் பாதிக்கின்றன. சுருங்கக் கூறின் மனிதனால் தூண்டப்படும் இத்தகைய தாவரப்போர்வை மாற்றங்களினால் நிலவுருவங்களின் இயற்கைப் போக்கு உருமாற்றத்துக்குட்படுகின்றது. இத்தகைய உருமாற்றம் ஏற்படுவதற்கு காடுகளின் அழிவு, மேய்ச்சல் என்பன தூண்டுதல்களாக இருக்கின்றன. காடுகளை அழித்தல் என்பது சூழலில் மனிதனால் தோற்றுவிக்கப்படும் மாற்றங்களுள் ஒன்று. விவசாய நடவடிக்கைகளுக்காகவும், வீட்டு எரிபொருள், கட்டிடத்தேவைகளுக்காவும் அழிக்கப்படுகின்றன. இக்காடுகள் மிருகங்கள், பறவைகளின் உயிர் வாழ்வுக்கான பிரதான வளமாகக் காணப்படுகின்றது. பெரும்பாலான காடுகளும் அடர்த்தியான தாவரப் போர்வையுள்ள பகுதிகளிலும் உள்ள மண்ணானது ஒப்பீட்டளவில் வளம் குறைந்தவையாகவே உள்ளன. இவற்றை அழித்து வெளியாக்கும்போது மண்அரிப்பு தூண்டப்படுவதுடன் குறைவான பயிர் விளைவுக்கும் காரணமாக அமைந்து விடுகின்றது. இலங்கையில் சேனைச் செய்கையின் காரணமாகவும், சூழல் தாக்கம் பற்றிய போதிய கவனமில்லாமல் எடுக்கப்பட்ட அரசாங்க அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் காரணமாகவும் காடுகள் அழிக்கப்பட்டு புல்நிலங்களும் அருகிவிட்டன (SLFI,1978 and CEA.1983) சதுப்புநிலத் தாவரங்கள் தம்மைத்தாமே புதுப்பித்துக் கொள்ளக் கூடிய இயலளவை இழந்து விட்டன. கைத் தொழில் அசுத்தமாக்கிகளினால் தாவர வளர்ச்சி மறைமுகமாகப் பாதிக்கப்படுகின்றது. வடக்கில் காங்கேசன் துறையில் அமைந்திருந்த சீமேந்துத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறிய தூசித்துணிக்கைகள் அயலிலுள்ள வெற்றிலைத் தோட்டப் பகுதிகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின. பரந்தனில் உள்ள இரசாயன கைத்தொழில் கூட்டுத்தாபனத்திலிருந்து வெளியேறிய இரசாயன வாயுக்கள் அயலிலுள்ள தாவரப்போர்வைகளில் பாதிப்பை ஏற்படுத்தின. நவீன விஞ்ஞான தொழில்நுட்ப, கைத்தொழில் பிரயோகங்களினால் குறிப்பாக செயற்கை உரங்கள், விவசாய இரசாயனங்கள் என்பவற்றின் பாவனைகளினால் விவசாயத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் அண்மைக்காலத்தில் ஏற்பட்டு வந்துள்ளதைக் காணலாம்.

## விலங்குகளும் மனிதனும்

மனிதன் தனது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு விலங்குகளைத் தனது வீட்டுத் தேவைகளுக்குப் பயன்படுத்துகிறான். வருமானம், பொழுதுபோக்கு மற்றும் அழகியல் காரணங்களுக்காக விலங்குகளைப் பயன்படுத்தும் அதேவேளை, புதிய இனங்களையும் விருத்தி செய்து வருகிறான். ஆனால் தாவரங்களைப் போலன்றி, வீட்டு விலங்குகள் மனிதனின் உதவியின்றி உயிர்வாழமுடியாது. இவற்றின் தொகையிலும், பரம்பலிலும் ஏற்படும் குறைவுக்கு மனிதன் காரணமாக இருக்கிறான். உணவுக்காகவும், வியாபார நோக்கங்களுக்காகவும் இவற்றைக் கொல்வதினால் இவற்றின் எண்ணிக்கை குறைவடைகின்றதுடன் மறைமுகமாக சூழல் மாசுபடலுக்கும் காரணமாக அமைகிறது. மக்கள் தொகை அதிகரிப்பு, தொழில்நுட்ப விருத்தி என்பவற்றினால் பறவைகள், விலங்குகள் தம் எண்ணிக்கையில் குறைவடைந்து செல்வதைக் காணலாம். இலங்கையில் ஏறக்குறைய இருநூற்றுக்கும் மேற்பட்ட தாவரவகைகள் அழிவின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. இயற்கையான வாழிடப்பகுதிகள் அழிக்கப்பட்டு வருவதும் பறவைகள், விலங்கினங்கள் அருகுதலுக்கான பிரிதொரு காரணமாகும். இதற்கு வனவிலங்குப் புகலிடங்கள் உருவாக்கப்படுவது அவசியம்.

## நீர் - மண் - மனிதன்

மனிதன் பயன்படுத்தும் வளங்களில் மண்ணும் ஒன்று. மண்அமைப்பு மாற்றம், வடிகால் பிரச்சினைகள், செயற்கை உரப்பாவனை, அமிலத்தன்மையடைதல், உவர்நீர் உட்புகுதல்

என்பனபோன்ற விளைவுகள் மனிதனால் உருவாக்கப்பட்டுள்ளன. மண்ணில் ஏற்படும் அளவுக்கதிகமான உவர்நீரின் தாக்கம் தாவரப் போர்வைகளின் இழப்புக்குக் காரணமாக அமைகின்றதுடன் மண் அரிப்பையும் தூண்டுகிறது. விவசாய இயந்திரங்களின் பயன்பாடு, நீர்பாசனம், உரப்பாவனையின் பாதிப்புக்களினால் இரசாயனக் கூட்டின் மாற்றம் என்பவற்றால் மண்ணின் அமைப்பு மனிதனால் மாற்றப்படுகின்றது. இத்தகைய முறைகள் மண் அமைப்பில் தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதனை விட, நீரை மாசுபடச் செய்வதன் மூலம் சூழல் பிரச்சினைகளையும் தோற்றுவிக்கின்றன. மனிதனால் உருவாகும் சூழல் பிரச்சினையானது குறிப்பாக காடழிப்பினால் ஏற்படும் மண்அரிப்பு,விவசாயநடவடிக்கைகள், கட்டுமானங்கள், நகராக்கம் போன்றவற்றினால் ஏற்படுத்தப்படுகின்றன.

இலங்கை போன்ற விவசாயத்தை முக்கியமாகக் கொண்ட சிறிய நாடுகளுக்கு மண் வளப் பாதுகாப்பு மிக அவசியமாகும். இலங்கையில் மண்வளப் பாதுகாப்பு செயற்றிட்டத்துக்கான அவசியத் தேவை பல காரணிகளை அடிப்படையாகக் கொண்டது. மகாவலித்திட்டத்தில் இது பற்றிய போதிய கவனம் ஈர்க்கப்படவில்லை. மகாவலியின் நீர் ஊற்றெடுக்கின்ற மூலப் பகுதியானது குறிப்பாகக் காடடர்ந்த குன்றுச் சரிவுப் பகுதிகளில், மண் வளப் பாதுகாப்பு புறக்கணிக்கப்பட்டுள்ளது. மிக முக்கிய உற்பத்தி நடவடிக்கைகளைக் கொண்ட இப்பகுதியின் ஏறக்குறைய 70 வீதமான நிலம் விவசாயத்தின் கீழ் உள்ளது. இங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் புகையிலை, காய்கறிச் செய்கைகளின் காரணமாக மண் அரிப்பு தூண்டப்பட்டு வருகின்றது. மண் அரிப்பைத் தடுக்கக் கூடிய முற்பாதுகாப்பு முறைகளான "வரம்புகள் அமைத்தல்" போதிய கவனத்துடன் செய்யப்படவில்லை. புகையிலைச் செய்கையானது ஒரு குறுகிய கால நடவடிக்கையாகும். மண்ணின் வளத்தை அதிகளவில் உறிஞ்சும் தன்மையும் கொண்டது. இதனைவிட நிலச்சரிவுகளும், மண் மணல் தன்மையடைதல் தாக்கங்களும் அச்சுறுத்தலாக உள்ளன. சட்டபூர்வமற்ற கனிப்பொருள் அகழ்தல் நடவடிக்கைகள், மரம் வெட்டுதல் ஆகியனவும் பிரச்சினைகளை மேலும் அதிகரிக்கின்றன. நுவரெலியா ஏரியில் தோன்றும் மணல் தடைகள், மண் அரிப்பின் தாக்கத்தினைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இவ் ஏரியினை நிரப்புவதினால் நீண்டகாலப் போக்கில் மகாவலித்திட்டம் பாதிக்கப்படலாம். ஏனெனில் மகாவலியின் கிளை நதிகளில் ஒன்றான நானுஓயா நுவரெலியா ஏரியிலிருந்து ஆரம்பமாகின்றதென்பது குறிப்பிடத்தக்கது.

அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட மனித நடவடிக்கைகளினால் ஆறுகள், நதிகள் ஆகியவற்றின் நீர் பாதிக்கப்படுகின்றன. நீரேந்து பிரதேசத்தினை மாற்றியமைத்தல், நகராக்கம், மாசுபடல் ஆகியனவும், நிலத்தடி நீரை அளவுக்கதிகமாக உபயோகிப்பதால் நீர்ப்பீடத்தில் ஏற்படும் பாதிப்பு என்பனவும் நீரின் தரத்தினைப் பாதிக்கலாம். நீர் அசுத்தமடைதலின் காரணங்களும் அமைப்பும் வேறுபட்டவை. கைத் தொழிலாக்கம், நகராக்கச் செயற்பாடுகளினால் கைத்தொழிற்சாலைகலிருந்து வெளியேறும் அசுத்தங்கள் நீர் நிலைகளை மாசுபடச் செய்கின்றன. இத்தகைய கைத்தொழில் கழிவுகளினால் ஏற்படுகின்ற பாதகமான தாக்கங்களைக் குறைப்பதற்கான வழிகளைக் காணுதல், நீர்மாசுபடுதலைக் குறைத்தல் ஆகியவற்றுக்கு மேலாக " நீர் வழங்கல் முகாமைத்துவம்" மனித உயிர் வாழ்வுக்கு மிக அவசியமானது. மனிதனால் வகுக்கப்படும், சூழலைப் பேணிப்பாதுகாத்தல் தொடர்பான உபாயங்களில், நீர் வளத்தின் உத்தமப் பயன்பாடு பற்றிய அம்சம் மிகவும் பிரதானமான விடயமாகும். இலங்கையில் நீரை திறமையாகவும், சமமாகவும் நிர்வகிப்பதிலுள்ள பிரச்சினைகள் ஒரு பிரதான கொள்கையாகவும், ஆய்வு விடயமாகவும் அண்மைக்காலத்தில் மாறிவருகின்றன. இதற்கு உதாரணமாக மகாவலி அதிகார சபையினால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் "நீர் முகாமைத்துவ பிரிவு" (Water Management Panel) என்னும் கொள்கை வகுப்பு அமைப்பு குறிப்பிடத்தக்கது. மகாவலித்திட்டத்தின் கீழ் உள்ள நீர்பாசன மின்சக்தி உருவாக்கத்திலிருந்து உத்தம நன்மைகளை அடைந்து கொள்வதற்குப் பொறுப்பாக இது விளங்குகிறது. அத்துடன் இச் செயற்றிட்டத்தின் கீழ் உள்ள பகுதிகளின் முழுப் பயிர்ச் செய்கைத் திட்டத்துக்கும் பொறுப்பாக இருக்கிறது.

## மனிதனும் நிலவுருவச் செயற்பாடுகளும்

மனிதனின் அபிவிருத்தி நடவடிக்கைகளினால் வானிலையழிதல், அரித்தல் போன்ற செயற்பாடுகள் மாற்றியமைக்கப்படுகின்றன. அபிவிருத்தி நடவடிக்கைகளின் காரணமாகவோ அல்லது யுத்த நடவடிக்கைகளினாலோ சில அகழ்வுகள் மேற்கொள்ளப் படுகின்றன. கனிப் பொருள் அகழ்தல், கட்டுமான தேவைக்கு கற்களை அகழ்ந்தெடுத்தல் ஆகியவற்றினால் ஏற்படும் திறந்த கிடங்குகள் சூழலில் மனித தாக்கத்திற்கான சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும். உயிர்ச்சுவடுகளின் எரிவின்போது வளிமண்டலத்தில் சல்பர் டி ஒக்சைட் வெளியேற்றம் அதிகரிக்கின்றது. இது பல கைத்தொழில் பகுதிகளின் மேலாக மழை நீரில் சல்பியூரிக் அமிலத்தின் அளவை அதிகரிக்கக் காரணமாக இருக்கிறது, சல்பர் டி ஒக்சைட்டுடன் தொடர்பான இரசாயன எதிர்விளைவுகளால் கல்சியம் சல்பேற், மக்னீசியம் சல்பேற் போன்ற உப்புக்களை உருவாக்குகின்றதுடன், அவை வானிலையழிதல் பொறிமுறையினூடாக பாறைகளின் பௌதீக அழிவுகளுக்கும் காரணமாக இருக்கின்றது. இதே போல் வளிமண்டல காபனீரொட்சைட் மட்டமானது உயிர்ச்சுவட்டு எரிபொருளினாலும், நிலையான முறையில் அதிகரித்து வருகின்றது. காபனீரொட்சைட் குறைவான வெப்பநிலையின்போது நீருடன் இணையக்கூடியதுடன், அதன் பின் ஏற்படும் தாக்கம் குறைந்த காபனிக் அமிலத்தினை உற்பத்தி செய்வதுடன் அவை சுண்ணக்கற்கள், டொலமைற், மாபிள் கற்களினைக் கரைக்கக்கூடிய தன்மையையும் கொண்டது.

நீர்பாசனத்தின் காரணமாக தரைக்கீழ் நீர்மட்டத்தில் ஏற்படும் மாற்றங்களினால் வானிலையழிதல் விரைவுபடுத்தப்படுகின்றது. நீர்ப்பாசனம் சில பகுதிகளில் நீர்ப் பீடம் உயர்வதற்குக் காரணமாக இருக்கின்றதுடன் ஆவியாக்கம், உவர் நீர் கசிவினையும் ஏற்படுத்துகின்றது. கரையோரப் பகுதிகளின் அரித்தல் நடவடிக்கைகளுக்கு அளவுக்கதிகமான குடியிருப்புகள் , கைத்தொழில்கள், போக்குவரத்து வசதிகள், பொழுது போக்கு வசதிகள் ஆகிய மனித நடவடிக்கைகள் பொறுப்பாக இருக்கின்றன. கரையோரப் பகுதிகளில் காணப்படும் மணல், சுண்ணக்கற்கள் மனிதனால் அகற்றப்படும் போது கரையோரமும் உள்நோக்கிப் பின்வாங்குகிறது. இலங்கையின் பிரதான இயற்கை வளங்களுள் ஒன்றான இது விரைவாக அழிந்து வருகின்றது. சுண்ணக் கற்கள் இலங்கையின் தென்மேல், கிழக்குக்

கரையோரங்களில் பெரும்பாலும் காணப்படுவதுடன், கடலின் அரித்தல் செய்முறைகளுக் கெதிரான ஒரு உறுதியான சுவராக அமைந்துள்ளது. அத்துடன் தம் அமைப்பில் காணப்படும் சிற்றறைகளில் பலவர்ண மீனினங்களைப் பாதுகாத்தும் வருகின்றன. இச் சுண்ணக் கற்களும், கற்பார்களும் கட்டிடக் கைத்தொழில்களில் பயன் படுத்துவதற்கான சுண்ணாம்பு உற்பத்திக்காக அகழ்ந்தெடுக்கப்படுகின்றன. இவ்வளத்தினை அழிப்பதன் மூலம் அவை தம்மைப் புதுப்பித்துக் கொள்வதற்கான இயலளவினையும் அழிப்பதாகின்றது. அத்துடன் கரையோரப் பகுதிகளின் கடலரிப்பையும் தூண்டக் காரணமாகின்றது. புயல் அலைகளின் தாக்கமும், கடுமையான கடல் அரிப்புக்களும் இலங்கையின் தென் மேல் கரையோரப் பகுதிகளில் இடம் பெறுகின்றது.

## காலநிலையும் மனிதனும்

வளிமண்டல மாற்றங்களுக்குக் காரணமாக இருப்பது இயற்கைச் சக்தியா அல்லது மனிதனின் செல்வாக்கா என்பதனை அனுமானிப்பது மிகவும் கஸ்டமானது. எனினும் வளிமண்டலத்தில் ஏற்படும் சில மாற்றங்களுக்கு மனிதன் பொறுப்பாக இருப்பது குறிப்பிடத்தக்கது. வளிமண்டலத்தில் காபனீரொட்சைட் அளவின் மாற்றம் பல பாதகமான விளைவை ஏற்படுத்தியுள்ளது. புளோரோ காபன் வளிமண்டலத்தில் ஓசோன் படையை அழிக்கின்றதுடன் பச்சைவீட்டுத்தாக்கத்தை ஏற்படுத்தி வாழ்வுக்கு அச்சுறுத்தலாக அமைகிறது. கைத்தொழிலாக்கமும், விவசாய நடவடிக்கைகளும் இதற்குக் காரணங்களாகும். வளிமண்டலத்திலுள்ள காபனீரொட்சைட் மட்டமானது சக்தி சமநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. உள்வரும் சூரிய கதிர் வீசலை காபனீரொட்சைட் கடத்தும் தன்மை கொண்டதுடன் வெளிச் செல்லும் புற ஊதாக் கதிர்களால் உறிஞ்சும் தன்மை கொண்டது. உள்வரும் கதிர்வீசல்கள் எல்லா அலைநீளங்களிலும் ஒரு பகுதி உறிஞ்சப்படுகிறது. ஒரு பகுதி திரும்ப தெறிக்கப்படுகின்றது. தெறிக்கப்படும் சக்தியின் ஒரு வீதாசாரம் அல்பிடோ என்று அழைக்கப்படுகின்றது. நிலப்பயன்பாட்டு மாற்றங்களினால் இவ் அல்பிடோவில் ஏற்படும் வேறுபாடுகள் சக்திச் சமநிலையில் முக்கிய தாக்கங்களை ஏற்படுத்துவதுடன் நீர்ச் சமநிலையிலும் பாதிப்பு ஏற்படுகிறது. அல்பிடோ மாற்றங்களின் காரணமாக காடழிப்பினால் காலநிலையில் ஏற்படும் விளைவுகள் 'பற்றிய கவனம் அண்மைக் காலத்தில் அதிகரித்து வருகின்றது. தாவரங்களினால் மூடப்பட்ட தரைப்பகுதியை விட காடழிப்பும், அளவுக்கதிகமான மேய்ச்சலும் இடம் பெறும் இடங்கள் அதிக அல்பிடோவுக்குக் காரணமாக இருக்கும். குளிர்சாதன பெட்டிகளிலிருந்தும் தீர்நதைகளை விசிறுதலின் போது வெளியேறும் குளோரோ புளோரோ வாயு, மற்றும் மெதேன் வாயுக்கள் வளி மண்டலத்தில் ஏறக்குறைய 40 வருடங்களுக்கு நிலைத்து நிற்கக் கூடியவை. இவை ஓசோன் படையில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

தாவரப் போர்வை அல்லது காடுகள் படிவு வீழ்ச்சியை அதிகரிக்கின்றன எனக் கூறப்படுகின்றதெனினும் இது ஒரு முடிவான கருத்தல்ல. காடுகள் ஆவியாக்க ஆவியுயிர்ப்பு வீதங்களிலும், அருவிகளின் பாய்ச்சலிலும், தரைக்கீழ் நீர்மட்டத்திலும், நுண்காலநிலைகளிலும் செல்வாக்கு செலுத்துவதினால் பயனுடையவையாக விளங்குகின்றன.

நகரங்களின் காலநிலை மாற்றங்கள் மனிதனால் தூண்டப்படுகின்றது. கிராமியப்பகுதிகளுடன் ஒப்பிடும் போது நகரமேற்பரப்புக்களின் அதிகமான கதிர்வீசல் உயர்ந்த சுவர்களினால் தடுத்து நிறுத்தப்படுகினறன. நகரப்பகுதிகளின் உறுதியான மேற்பரப்பானது வெப்பத்தை உறிஞ்சும் இயலளவையும், கடத்துதிறனையும் கொண்டிருப்பதால் சக்தியானது பகலில் சேமித்து வைக்கப்பட்டு இரவில் விடுவிக்கப்படுகிறது. இதற்கு மாறாக கிராமியப் பகுதிகளில் இரவிலும் பகலிலும் வெப்பநிலையே காணப்படுகின்றது. பெருமளவான செயற்கைச் சக்தி நகரப்பகுதிகளில் கைத்தொழில், வர்த்தக உள்ளூர் பாவனையாளர்களினால் உருவாக்கப்படுவதுடன் "நகரவெப்பத்தீவு"(Urban heat Island) காலநிலையையும் தோற்றுவிக்கின்றது. கொழும்பு நகரத்தில் மோட்டார் வாகனங்களிலிருந்தும் கைத்தொழிற் பகுதிகளிலிருந்தும் வெளியேறும் தூசுக்களினால் வளியானது மாசுபட்டு வருகின்றது. "மழையை வருவித்தல்" காலநிலையில் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு மாற்றமாகக் குறிப்பிட்டாலும் அதன் பின்னூட்டு விளைவுகள் அழிவுக்கு இட்டுச் செல்லக் கூடியது.

## முடிவுரை

சூழலை மனிதன் மாற்றியமைத்திருந்தாலும் அவனால் ஏற்படுத்தப்பட்ட விரும்பத்தகாத சில மாற்றங்கள் மீண்டும் ஏற்படுகின்றன. மண்ணானது ஒரு பகுதியிலிருந்து அரித்துச் செல்லப்பட்டுவிட்டால் மீண்டும் அவற்றைத் தருவிக்கமுடியாது. இதுமாதிரியான பல விடயங்களைக்கூறமுடியும். வளங்களைப் பேணிப்பாதுகாக்கவும், அவற்றினை முகாமைத்துவப் படுத்துவதிலும் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் பெரும்பாலானவை வெற்றியளித்துள்ளன. அதே வேளை அவை சில சூழல் பிரச்சினைகளுக்கும் காரணமாக இருந்துள்ளன. இதற்கு உதாரணமாக கடலோர அரிப்பைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட சில திட்டங்களைக் குறிப்பிடலாம். அநேக நாடுகள் சூழலைப் பாதுகாப்பதற்கும் பேணுவதற்கும் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருவதை அவதானிக்கலாம். அத்துடன் பாரிய அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன் "சூழல் தாக்கம் பற்றிய மதிப்பீட்டுச் சான்றிதழின்" (Environmental Impact Assessment Certificate) அவசியம் வற்புறுத்தப்பட்டு வருகின்றது. தாவரயினங்களைப் பாதுகாக்கவும் பேணவும் பாதுகாப்பான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. யானைகளையும், சில காட்டின உயிர்களையும் கொல்லுதல் சட்டத்தினால் தடைசெய்யப்பட்டுள்ளது.

எனவே சர்வதேசரீதியிலும், தேசியரீதியிலும் சூழலைப் பாதுகாக்கவும், முகாமைப்படுத்தவும் பொருத்தமான உபாயங்கள் அல்லது திறமுறைகள் விருத்தி செய்யப்பட வேண்டும். உலகம் முழுவதும் பொருளாதார ரீதியாக முன்னேற்றத்தை அடைந்து கொள்ளும் நோக்குடன் பிரதான சூழலியல் செயற்பாடுகளையும் வாழ்வுக்கு ஆதாரமான ஒழுங்குகளின் பிரதான விடயங்களையும் நிர்வகிக்கத்தக்க உபாயமாக இவை அமையவேண்டும். முன்னுரிமைத் தேவைகளின் அடிப்படையில் சூழல் வளங்களைப் பயன்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

தொடர்ச்சி 22 ஆம் பக்கத்தில்........

# பூகோளம் வெப்பமயமாதல்:
## சூழல் குறித்து வடக்கு தெற்கு நாடுகளின் முரண்பாட்டு வாதம்.

க. றொபேட்

### அறிமுகம்

சூழல் தொடர்பான பிரச்சினைகளுக்கு இன்று அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றது. இதில் புவியின் வெப்பநிலை அதிகரித்துச் செல்லுதல் தொடர்பான பிரச்சினைகளும் அவை பற்றிய விவாதங்களும் எழுந்த வண்ணமே உள்ளன. தற்போதைய புவியின் வெப்பநிலை அதிகரிப்புக்கு யார் காரணமென்று வளர்முக நாடுகள் தம்முள் மோதிக் கொண்டிருக்கின்றன. 1971 இல் முதலாவது சூழல் மாநாடு ஐக்கிய நாடுகள் சபையினால் ஸ்ரொக்ஹோமில் (சுவீடன்) நடைபெற்றது. இதில் 20 நாடுகளே பங்கு கொண்டன. ஆனால் 1992 யூன் மாதம் பிரேசிலின் ரியோடிஜெனிரோவில் நடைபெற்ற சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பான மிகப் பெரிய மாநாட்டில் 114 நாட்டு அரசுத் தலைவர்கள் பங்கு கொண்டனர். வளர்ந்த நாடுகள் அயனமண்டலக் காடுகள் அழிப்பும், மீதேன் வாயு வெளியேற்றமும்தான் பிரதான காரணம் என்று வலியுறுத்தும் அதேவேளை மூன்றாம் உலக நாடுகள் வடக்கு நாடுகளின் அதிகளவு சக்தி நுகர்வையே சுட்டிக் காட்டுகின்றன. இருந்தும் இம்மாநாட்டில் உலகம் எதிர்நோக்கும் பேராபத்துக்கள் இரு பெரும் பிரிவுக்குள் வரையறை செய்யப்பட்டன.

1. உலகின் வெப்பநிலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தல்
2. உயிர்களின் பல்லினத் தன்மையைப் பேணிப் பாதுகாத்தல்

எனவே உலகின் வெப்பநிலை அதிகரிப்பு தொடர்பான பிரச்சனைகள் இன்று முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

### வெப்பநிலை அதிகரிப்பிற்கு யார் காரணம்.

அண்மையில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துடன் இணைந்து உலகவள நிறுவனம் (World Resource Institute) அமெரிக்காவில் பிரசுரித்த கட்டுரையில் புவியின் வெப்பநிலையை அதிகரித்து உலகின் காலநிலையைக் குழப்புவது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளான இந்தியாவும், சீனாவுமே என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வாஷிங்டன் சார்ந்த ஒரு தனியார் ஆராச்சிக் குழுவான இந்த உலகவள நிறுவனம் விஞ்ஞானத்தை அல்லாது கூடியளவில் அரசியல் நோக்கங்களாலும், கணித விந்தைகளாலும் (Mathematical Jugglery) உந்தப்பட்டதாகக் காணப்பட்டது. இதன் பிரதான குறிக்கோள் வெப்பமேற்றத்திற்கு வளரும் நாடுகளிலேயே பழிசுமத்தி தற்போது நிலவும் கோள சமமின்மையை நிரந்தரமாக்குவதேயாகும். அநேகமான வளர்முக நாடுகள் தங்கள் அபிவிருத்தித் திட்டங்களுக்கு முட்டுக்கட்டைகளைப் போடலாம் எனவும் அஞ்சுகின்றன. இதனால் சக்தி உருவாக்கமும் கட்டுப்படுத்தப்படலாம் என்றும் அஞ்சுகின்றன. உதாரணமாக நிலக்கரியில் இருந்து சக்தி உற்பத்தி செய்வதனையும் (இது $CO_2$ வெளியிடும்) நெல் உற்பத்தி, விலங்கு வேளாண்மை என்பவற்றையும் (இவையே மெதேன் வாயுவை வெளிவிடுகின்றன) பாதிக்கும்.

எனவே பணக்காரர் வறியவர் என்று பிரிக்கப்பட்டுள்ள உலகில் எவ்வாறு கோள முகாமைத்துவத்தை ஏற்படுத்தலாம். வளர்ச்சி அடைந்த நாடுகள் தமது அபிவிருத்திச் செயற்பாடுகளைக் குறைக்கும் என எதிர் பார்க்கப்பட்டது. பதிலாக வளரும் நாடுகள், மிகக் குறைவாக நுகரும் சக்தியின் அளவு சுட்டிக் காட்டப்படுகின்றது. உதாரணமாக பூகோளத்தை அழிக்கும் வாயுக்களைக் குறைக்க வேண்டுமென்ற பேச்சுவார்த்தைகளின் போது இந்தியாவிலும், சீனாவிலும் உற்பத்தியாகும் குளோரோ புளோரோ காபன் (Chloro Fluro Carbon-CFC) கோளத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றது எனக் கூறப்பட்டது. உலக CFC உற்பத்தியில் இந்தியாவும் சீனாவும் 2 சதவீதத்தையே உருவாக்குகின்றன. உலக அவதானிப்பு நிறுவனம் (World Watch Institution) வளர்முக நாடுகளில் காபனீரொட்சைட்டு வெளியேற்றம் கட்டுப்படுத்தப்படல் வேண்டுமெனக் குறிப்பிடுகின்றது. அப்படியாயின் அது எந்த மட்டத்தில் என்ற வினா எழுகின்றது. இன்று மேற்கு ஐரோப்பிய நாடுகளின் வீதப்படி காபனீரொட்சைட்டை வெளிவிடும் 10 மில்லியன் சனத்தொகையை இப்பூமி தாங்காது என்பது வளிமண்டல விஞ்ஞானத்தின் சாதாரண உண்மை. இது உணர்த்துகின்ற அம்சம் யாதெனில் தற்போதைய நிலையில் காபனீரொட்சைட்டின் வெளியேற்றம் 4 மடங்காகவும் அல்லது 23 மில்லியன் தொன்களாக வருடத்திற்கு வெளியேறுகின்றது என்பதாகும்.

காடழிப்பும், வேறு நிலப்பயன்பாடுகளும் உலக மொத்த காபனீரொட்சைட் ($CO_2$) உற்பத்தியில் 1 / 3 பங்கை உருவாக்கின்றது. இந்தியாவும், சீனாவும் தங்கள் பச்சைவீட்டுவாயு (Greenhouse gases) உற்பத்தியை மேலும் அதிகரித்தால் கோளச் சராசரி தலாவீதம் 28 சதவீதத்தால் அதிகரிக்கும். மேலும் இவ்விரு நாடுகளும் பிரான்சின் உற்பத்தி வீதத்திற்கு சமமாக உற்பத்தி செய்யும் பட்சத்தில் இது 68 சதவீதமாக அதிகரிக்கும்.

க. றொபேட் B.A (Hons) Cey.
விரிவுரையாளர், புவியியல்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இதனால் சூழல் மாசடைவதைத் தடுக்க மேற்குலகு எடுக்கும் முயற்சிகள் யாவும் வளரும் நாடுகள் நிலக்கரி எரிப்பதனால் வீணாக்கப்படுகின்றன என அடிக்கடி கூறப்படுகின்றது. வளரும் நாடுகளில் நடைபெறும் நிலக்கரி பாவனை பாரதூரமான சூழற் பிரச்சினைகளை உருவாக்கலாம் என பாரிசில் தலைமையகத்தைக் கொண்ட சர்வதேச சக்தி முகவரகம் (International Energy Agency - IEA) அண்மையிற் கூறியுள்ளது. எல்லாவற்றிற்கும் வளரும் நாடுகளைக் குறை கூறுவதே இப்பொழுது மேற்குலகின் வேலையாகிவிட்டது. ஆனால் புள்ளி விபரங்களைப் பார்க்கின்றபொழுது மேற்குலகு தன்னைத்தானே திருத்திக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் அதிபர் இனிமேல் சக்திப் பாவனையை சமமாக்க வேண்டும் என்று கூறுகின்றார். வளர்ந்த வளர்முக நாடுகளுக்கிடையிலான வளப் பாவனையில் பலமடங்கு சமமின்மை காணப்படுகின்றது. இதன் அர்த்தம் என்னவென்றால் வளர்முக நாடுகள் இந்த மட்டத்தை அடைவதற்கு அனுமதிக்கப்படுமா அல்லது அவர்களின் பங்கு முடிந்துவிட்டதா என்பதாகும். இந்தியா, சீனாவின் இன்றைய சனத்தொகை உலக சனத் தொகையின் 1/3 பங்கினை விட அதிகமாகும். ஆகவே கேட்கப்படக்கூடிய கேள்வி என்னவெனில் இங்குள்ள 1/3 பகுதி மக்களும் உலக வளங்களில் 1/3 பகுதியை நுகர்கிறார்களா அல்லது சமுத்திரங்களுக்கு அல்லது வளிமண்டலத்திற்கு 1/3 பகுதி கழிவினையும் அழுக்கினையும் வழங்குகிறார்களா என்பதாகும். ஆனால் இவ்விரு நாடுகளும் உலக வளத்தில் மிகவும் சொற்பமான பகுதியை நுகர்வதற்காகப் புகழப்பட வேண்டியவை ஆகும்.

## உலகவள நிறுவனத்தின் கணிப்பீடு

ஒவ்வொரு நாடும் உற்பத்தி செய்யும் காபனீரொட்சைட், மெதேன் வாயு எவ்வளவு என்று உலகவள நிறுவனத்தினால் கணிப்பிடப்பட்ட புள்ளி விபரங்கள் கேள்விக்குரியதே. நிலக்கரி, பெற்றோலியம் போன்ற உயிர்ச்சுவட்டு எரிபொருட்களின் பாவனையில் இருந்து உற்பத்தி ஆகும் காபனீரொட்சைட் அளவிலும் பார்க்க காடுகள் அழிப்பதனால் உருவாகும் காபனீரொட்சைட்டும் நெல் உற்பத்தி, கால்நடை வளர்ப்பினால் மெதேன் (Methane) வாயும் உற்பத்தியாகின்றது என்பதில் அதிக அழுத்தம் செலுத்தப்படுகின்றது. காடுகள் அழிக்கப்படுதல், நெல் உற்பத்தி போன்றவற்றிற்கு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளே பொறுப்பாளிகளாக இருப்பதனால் மேற் கூறியவைகளில் இடப்பட்ட அழுத்தம் இந்நாடுகளின் பங்களிப்பை மிகைப்படுத்தியும் அதேசமயம் அபிவிருத்தியடைந்த நாடுகளின் பங்களிப்பைக் குறைத்தும் காட்டுகின்றது. உதாரணமாக பிறேசிலில் காடழிப்பின் அண்ணளவான பெறுமதிகள் மிகைப்படுத்தி மதிப்பிடப்பட்டுள்ளது என்பது வெளிப்படையான உண்மையே.

பிறேசிலில் காடழிப்பானது 1987 இல் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தாலும் அதன் பிற்பாடு காடழிப்பு வீதம் வெகுவாகக் குறைவடைந்துள்ளது என பிறேசில் இருந்து வரும் தகவல்கள் எடுத்துக் காட்டுகின்றன. 1980 களிலும், 1987 இல் இருந்தும் பிறேசிலினுடைய காபனீரொட்சைட் வாயு வெளியேற்றங்கள் உலகவள நிறுவனம் எடுத்த கணிப்பிலும் குறைவானதாகும். இதே போன்று இந்தியாவிலும் காடழிப்பின் கணிப்பு வீதம் 1970 ஆம் ஆண்டு காலப் பகுதிக்குரிய தரவுகளை ஒத்தாக இல்லை. இது வருடாந்தம் 1.5 மில்லியன் ஹெக்டேயர் ஆக உள்ளது. இதுவே உலகவள நிறுவனத்தினால் வருட சராசரியாக 1980 ஆம் ஆண்டிற்கு கணிக்கப்பட்ட கணிப்பீடாகும். ஆனால் இந்தியாவினுடைய காட்டுவள மதிப்பீடுகளின்படி 1980 களில் காடழிப்பு வீதம் குறைவடைந்துள்ளது. 1981 – 83, 1985 -87 ஆகிய நான்கு வருடகாலப் பகுதிக்கு செய்மதி உருவ அமைப்பை (Satellite Imagery) அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பிந்திய கணிப்பீட்டின்படி வருடமொன்றிற்கான காடழிப்பு வீதமானது 47,500 ஹெக்டேயராக உள்ளது. இது முன்னைய மதிப்பீட்டின் 3 சதவீதமாகும். அநேகமான இந்திய சூழல் அறிஞர்கள் (Indian Environmentalists) கூறுவது போன்று இக்கணிப்பீட்டு விபரங்கள் குறைவாக உள்ளன. ஆனாலும் உண்மையான தரவுகளின் 1 / 10 பகுதியாக இருந்தாலும் கூட உலகவள நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்ட தரவுகளுக்கு இவை நெருங்கி வராது எனப்படுகின்றது.

அடுத்து மெதேன் வாயுவெளியேற்றங்களும் ஒரு கேள்வியை எழுப்புகின்றது. ஐரோப்பாவில் வடஅமெரிக்காவில் அல்லது மூன்றாம் உலகத்தின் எங்கேயாவது உள்ள வாகனங்களில் இருந்து வெளிவிடப்படும் காபனீரொட்சைட்டினை, கால்நடைகளில் இருந்தும் அல்லது மேற்கு வங்காளம் அல்லது தாய்லாந்தில் உள்ள நெல்வயல்களில் இருந்து வெளிக்கிளம்பும் மெதேன்வாயு வெளியேற்றங்களுடன் நாம் ஒப்பிடமுடியுமா என்பதாகும். ஆனால் இங்கு ஒன்றை மட்டும் சிந்திக்க வேண்டியுள்ளது. அதாவது வறியவர்களின் உயிரைப் பாதுகாக்கும் சாதனங்களில் இருந்து வெளிவரும் வாயு வெளியேற்றங்களை (Survival emissions) செல்வந்தர்களுடைய ஆடம்பர வாழ்க்கைக்குரிய சாதனங்களிலிருந்து புறப்படும் வாயு வெளியேற்றங்களிலிருந்து (Luxuryemissions) வேறுபடுத்துவதற்கு உலகவள நிறுவனத்தின் அறிக்கைகளில் எதுவித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

## விஞ்ஞான, மற்றும் சூழலுக்கான நிலையத்தின் கணிப்பீடு

விஞ்ஞான, மற்றும் சூழலுக்கான நிலையத்தின் (Centre for Science and Environment) பகுப்பாய்வுகள் உலகவள நிறுவனத்தின் கணிப்பீடுகள் தொடர்பாக எதுவித வினாக்களையும் எழுப்பவில்லை. ஆனால் வளிமண்டலத்தில் காணப்படும் காபனீரொட்சைட், மெதேன் வாயுக்களுக்கு இந்தியாவோ, சீனாவோ காரணமாக இருக்க முடியாது என்று எடுத்துக் கூறுகின்றது. ஐக்கிய நாடுகளின் சூழல் நிகழ்ச்சித்திட்ட (UNEP) சிரேஷ்ட அதிகாரி கூறுவது போன்று இயற்கையானது இருபெரிய பொருளாதாரத் தொழிற்பாடுகளைத் தந்துவுகின்றது. அவ்வயாவன

1. மூலப் பொருட்களைப் பெறுகின்ற மூலகமாகவும்,
2. கழிவுப் பொருட்களை உறிஞ்சும் சாக்கடைக்குழியாகவும் உள்ளது என்கிறார்.

ஒவ்வொரு நாட்டினதும் நச்சுவாயு வெளியேற்றங்களுக்குரிய மூலகங்களையும் அதன் தரைமீதான உறிஞ்சுதலையும் (Terrestrial Sinks) அதாவது அதன்காடுகள் ஏனைய தாவரங்கள்,

மண் வளங்களைக் கணக்கிட்டுப் பார்ப்பதன் மூலம் ஒவ்வொரு நாட்டினதும் பச்சை வீட்டு வாயு வெளியேற்றங்களுக்குரிய வரவு செலவுக் கணக்கினைத் தயாரிப்பதே சிறந்த ஒரு அணுகு முறையாக இருக்கும். இத்தகைய அணுகு முறை ஒவ்வொரு நாட்டினதும் கழிவு வாயுக்கள் தொடர்பான சரியான ஒரு கருத்தைப் பெறக்கூடும். இந்த நச்சு வாயு வெளியேற்றங்களை மனித வர்க்கத்தின் பொதுச் சொத்தாகிய சமுத்திரவளங்கள், நிலவளங்களினதும் ஒவ்வொரு தேசத்தினதும் நியாயமான பங்குடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலமே வளிமண்டலத்திற்கு வந்தடையும் ஒவ்வொரு நாட்டினதும் நச்சு வாயுக்களின் நிகர வெளியேற்றங்களைக் கணக்கிட முடியும். ஆனால் உலகவள நிறுவனம் இப்படியான ஒரு கணிப்பீட்டை மேற்கொள்ளவில்லை.

புவியின் சூழலானது கணிசமான அளவு கழிவுப் பொருட்களை உறிஞ்சும் இயலளவைக் கொண்டுள்ளது. மனித நடவடிக்கைகளினால் உருவாக்கப்படும் காபனீரொட்சைட்டினை உறிஞ்சுவதில் சமுத்திரம் ஒரு முக்கிய உறிஞ்சியாக ( Sink) உள்ளது. காலநிலை மாற்றங்களை ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட அரசாங்கங்களுக்கிடையிலான குழுவின் மதிப்பீடுகளின்படி 1980 – 89 காலப் பகுதியில் வருடம் ஒன்றிற்கு 1200 – 2800 மில்லியன் தொன் காபனீரொட்சைட்டினை சமுத்திரம் உறிஞ்சுகின்றது. இன்னும் மேலதிகமான காபனீரொட்சைட் மறைந்து போவதால் காபனீரொட்சைட்டினை உறிஞ்சுவதற்கு தரைப் பாகத்திலும் உறிஞ்சிகள் இருக்கும். ஆனால் அவை பற்றிய விஞ்ஞான அறிவு இன்னும் நிச்சயமற்றதொன்றாகவே உள்ளது.

வளிமண்டலத்தில் குவிவடையும் காபனீரொட்சைட்டைக் கணக்கிடுவதற்காக வேறுபட்ட மாதிரிகள் உருவாக்கப்பட்டன. இதன்படி கணிசமான அளவு உறிஞ்சி இல்லாமற் போய்விட்டதாக அறியப்படுகின்றது. இது தரைப் பாகத்தில் அடங்குகின்றதா என விஞ்ஞானிகள் நம்புகின்றனர். முன்னரே கூறப்பட்ட வளிமண்டலத்தில் அதிகரிக்கின்ற காபனீரொட்சைட்டின் அளவு மனிதனால் உருவாக்கப்படுகின்ற காபனீரொட்சைட்டின் அளவுக்கு சமமானதாக இருக்க வேண்டும். ஆனால் வளிமண்டலத்தில் அதிகரிக்கின்ற காபனீரொட்சைட்டின் அளவு சமுத்திரத்தினால் உறிஞ்சப்படுகின்ற காபனீரொட்சைட்டின் அளவிற்கு சமமானதாக இல்லை. ஆனால் வளிமண்டலத்திற்கு வந்தடையும் காபனீரொட்சைட்டிலும் பார்க்க முன்னரே கூறப்பட்ட காபனீரொட்சைட்டின் அளவு கூடுதலாக உள்ளது. சூழலைத் துப்பரவாக்கும் இன்னொரு செயல்முறை உலகில் உள்ளதையே இது குறிக்கின்றது. தாவரம், மண் போன்ற வேறுபட்ட நிலச் செயல்முறைகள் இம்மேலதிக அளவிற்கு காரணமாக இருக்கலாமென்ற ஒரு அபிப்பிராயம் தற்பொழுது வளர்ந்து வருகின்றது. சில மாதிரிகள் தரையிலுள்ள உறிஞ்சிகள் சமுத்திரத்தில் உள்ளதை விடப் பெரிதாக இருக்கலாம் என்றும் கூடத் தெரிவிக்கின்றன. ஆனால் இதன் உண்மை இன்னும் அறியப்படவில்லை.

மெதேன் வாயுவிற்கான உறிஞ்ச.்ம் உள்ளன. மாறன் மண்டலத்திலுள்ள ஐதொரட்சைட்டுட.்ர தாக்கம் பெற்று அகற்றப்பட்டுவிடுகின்றன. இதனால் ஆண்டுதோறும் 400 – 600 மில்லியன் தொன் மெதேன் வாயு அகற்றப்படுகின்றது. இதே போன்று மண்ணும் வருடாவருடம் 15 – 45 மில்லியன் தொன் மெதேனை அப்புறப்படுத்துவதில் தனது பங்களிப்பைச் செலுத்துகின்றது.

சூழலின் வளங்களை அளவுக்கதிகமாகப் பயன்படுத்திய நாடுகளையும் உலகவளநிறுவனம் வேறுபடுத்திக்காட்டவில்லை. உதாரணமாக உலக பச்சை வீட்டு வாயுக்களை வெளிவிடுவது தொடர்பாக இந்தியா ஐந்தாவது இடத்தை வகிக்கின்றது என கூறப்பட்டுள்ளது. 1990 களில் உலக சனத்தொகையில் இந்தியாவின் குடித்தொகை 16.2 வீதமாக இருந்தது. இந்தியா உற்பத்தி செய்யும் காபனீரொட்சைட், மெதேன் அளவு முறையே 6%, 14.4%, ஆக உள்ளது. இது புவியின் உயிர் சூழலியல் ஒழுங்கினால் உறிஞ்சப்படக்கூடியதாக உள்ளது. இந்நிலையில் இந்தியாவையும் இதுபோன்ற ஏனைய நாடுகளையும் கழிவு வாயுக்களை வெளியேற்றுவது தொடர்பாக எவ்வாறு குறைசொல்ல முடியும் என்று கூறப்படுகின்றது. உண்மையில் காலநிலையை பாதிக்காத வகையில் இந்தியா தனது காபனீரொட்சைட் வெளியீட்டை இருமடங்காக அதிகரிக்கலாம் எனவும் கூறப்படுகின்றது.

உலகசனத்தொகையில் 4.73% கொண்ட ஐக்கிய அமெரிக்கா 26%, காபனீரொட்சைட்டையும் 20% மெதேனையும் வெளியேற்றுகிறது. ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் தான் அவர்களின் சனத்தொகைக்கு விகிதாசாரமற்ற முறையில் வாயுக்கள் வெளிவிடப்படுகின்றன. மேலும் இவ்விரு நாடுகளும் இரசாயன நச்சுப்பொருட்கள் நிறைந்த குளோரோ புளோரோ காபன்களை (Chlorofluorocarbons - $CFC_s$ ) வெளிவிடுகின்றன. இவ்வகையில் ஜப்பான் 7. 4 வீதத்தையும், ஐக்கிய அமெரிக்கா 25.8 வீதத்தையும் வெளிவிடுகின்றன. இவ்வாறு வெளிவிடப்படும் குளோரோ புளோரோ காபன்களில் ஒரு தொன் தானும் உறிஞ்சப்படுவதில்லை. ஏனெனில் அதனை உறிஞ்சக்கூடிய இயற்கை ஊடகம் எதுவுமில்லை. ஆகவே இயற்கையால் உறிஞ்ச முடியாத எந்தவிதமான இரசாயன வாயுக்களையும் எந்தவொரு நாடும் உற்பத்தி செய்யக்கூடாது என்ற ஒரு கோரிக்கையை சூழலியலாளர்கள் (Environmentalist) ஏற்படுத்த வேண்டும்.

## நிகரவாயு வெளியேற்றங்களினை அளவீடு செய்தல்

புவியின் வளிமண்டலத்திற்கு ஒவ்வொரு நாடும் வெளிவிடும் காபனீரொட்சைட் , மெதேன் வாயுக்களை எவ்வாறு அளவிடலாம் என்பது ஒரு பிரச்சினையாக உள்ளது. புவிச்சூழல் உறிஞ்சக்கூடிய அளவிற்கு மேலாக காபனீரொட்சைட், மேதேன் வாயுக்களை உற்பத்தி செய்யக்கூடாது என்பதனை நிலைநிற்கும் அபிவிருத்தி (Sustainable Development) என்ற கருத்து வலியுறுத்துகின்றது என்பது உண்மை. இவ்வடிப்படையில் விஞ்ஞான, சூழலுக்கான நிலையம் உலகின் காலநிலைக்கு அச்சுறுத்தலாகவுள்ள நிகரவாயு வெளியேற்றங்களை நிச்சயப்படுத்துவதற்கு பின்வரும் ஒழுங்கு முறைகளைக் கைக்கொள்கின்றது.

**1.** குடித்தொகை அடிப்படையில் ஒவ்வொரு நாட்டிற்கும் இயற்கை உறிஞ்சல் (NaturalSink)அளவு ஒதுக்கப்படல் வேண்டும். ஒதுக்கப்பட்ட இத்தொகையே அந்நாடுகளது அனுமதிக்கப்பட்ட

வெளியேற்றங்களாக அமையும். குளோரோ புளோரோ காபன்களுக்கு இயற்கையான உறிஞ்சுதல் இல்லாமையால் இவற்றிற்கு அனுமதிக்கப்பட்ட பங்குகள் கணிப்பீடு செய்யப்படவில்லை.

**2.** அனுமதிக்கப்பட்ட தொகையை விட மேலதிகமாக வெளியேறிய தொகையை நிச்சயப்படுத்துவதற்கு ஒவ்வொரு நாட்டினதும் காபனீரொட்சைட், மெதேன் மொத்த வெளியேற்றங்கள் அந்நாடுகளது அனுமதிக்கப்பட்ட வெளியேற்றங்களுடன் ஒப்பிடப்பட்டிருக்கும்.

கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்திற்கு
திரு. [illegible]
அவர்கள் நன்கொடையாக அளித்தது

## வடக்கின் நிலை

மிகவும் வலுவான கைத்தொழில் நாடுகளான ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஜப்பான், பிரான்ஸ், ஜேர்மன், இத்தாலி, கனடா ஆகிய நாடுகள் 1991 யூலையில் ஏற்படுத்திய உச்சிமகாநாட்டில் ஒரு பொருளாதாரப் பிரகடனத்தைப் பிரசுரித்தன. அவை பின்வருமாறு:

**1.** சூழலை நிர்வகிப்பதே இப்போதுள்ள பிரதான பிரச்சனையாகவுள்ளது. எங்களுடைய பொருளாதாரக் கொள்கைகள் புவியின் வளங்களை நீடித்து உபயோகிக்க முடியும் என்பதனை வரப்போகும் சந்ததியினருக்கு உறுதிப்படுத்த வேண்டும்.

**2.** சூழல் விவகாரங்களில் அரசகொள்கைகள் இணைக்கப்படல் வேண்டும். இத்துறையில் பொருளாதார ஒத்துழைப்பிற்கும் அபிவிருத்திக்குமான அமைப்பினால் (OECD) மேற்கொள்ளப்படும் பயன் மிக்க முயற்சிகளுக்கு நாம் ஆதரவு வழங்குகின்றோம்.

**3.** சர்வதேசரீதியாக இப்பிரச்சினையை சமாளிப்பதற்கு நாம் ஒரு கூட்டுறவு முயற்சியை எடுக்க வேண்டும். நாங்கள் ஒரு முன்மாதிரியாக இருப்பதுமல்லாமல் வளரும் நாடுகளையும், மத்திய கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் எம்முடன் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்ள வேண்டும்.

**4.** சூழல், அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் மாநாடுகளுக்கும் (UNCED)அதன் வெற்றிக்கும் எம்மால் இயன்றதைச் செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

**5.** மாநாடுகள் தொடர்பாக வெளிவிடப்படும் வாயுக்கள், உறிஞ்சப்படுதல் பற்றிய ஒருபட்டியலைத் தயாரித்தல். இதன் பிரகாரம் தொழில்வள நாடுகளில் நடைபெறும் இச் செயற்பாடுகள் வளர்முக நாடுகளையும் இதில் பங்குபெற ஊக்குவிக்கும். மேலும் எல்லா வகையான காடுகளின் நிலையான அபிவிருத்திக்கும் பாதுகாப்பிற்கும் முகாமைத்துவத்திற்கும் வழிவகைகளை வகுத்தல்.

**6.** சூழல் அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகள் மாநாட்டில் குறிக்கோள்களை வளர்த்தல். இதன் பிரகாரம்,

(அ) வளரும் நாடுகள் சூழல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பணவசதியைத் திரட்டுதல்.

(ஆ) தொழில்நுட்பம் வளரும் நாடுகளுக்குக் கிடைக்க வழிவகுத்தல்.

(இ) சமுத்திரங்களினதும், கடல்களினதும் சூழல், பொருளாதார முக்கியத்துவங்களைக் கருத்திற்கொண்டு சமுத்திரங்களையும், பிராந்தியக் கடல்களையும் பாதுகாத்தல்.

(ஈ) சூழல் தொடர்பான ஏற்புடையதான ஒரு சர்வதேச சட்டக் கோவையை உருவாக்குதல்.

(உ) எதிர் வரும் தசாப்தத்தில் ஐக்கிய நாடுகளின் சூழல் செயற்றிட்டம் (UNEP)உள்ளிட்ட சூழல் தொடர்பான சர்வதேச ஸ்தாபனங்களின் செயற்பாட்டை நிலைநிறுத்துதல்.

**7.** ஐக்கிய நாடுகளின் சூழல் நிகழ்ச்சியின் குறிக்கோள்களுக்கு ஆதரவு வழங்குதல். சிறந்த தாவரவகைகள் அழிந்து போகாமலும் உயிரியல் தொழில்நுட்பத்தின் சாதகமான அபிவிருத்தி வேலைகள் தடைப்படாமலும் நடவடிக்கை எடுக்க உதவுதல்.

**8.** அயனமண்டலக் காடுகள் அழிக்கப்படுவதையிட்டுக் கவலையடைகின்றோம். குறிப்பாக பிரேசிலில் காடுகளின் பாதுகாப்புத் தொடர்பான முன்னோடித் திட்டங்களை வரவேற்கிறோம்.

**9.** வளை குடாவில் எண்ணெய்க்கிணறுகள் எரிந்து சூழல் மாசடைந்தமையும் இதுபோன்ற அனர்த்தங்கள் சர்வதேச ரீதியாக மேலும் நடைபெறாமல் தடுப்பதற்கான வழிவகைகளைச் செய்தல் வேண்டும்.

**10.** கடல்வாழ் உயிரினங்கள் அதிகமாகப்பிடிக்கப்படுவதால் ஏற்படும் கடல் உயிரின அழிவைத் தடுக்க வழிவகை எடுத்தல்.

**11.** சூழல் விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் கூடிய ஒத்துழைப்பைக் கேட்கின்றோம். குறிப்பாக,

(அ) கோளக் காலநிலை பற்றியவிஞ்ஞான ஆராய்ச்சிகளும் சமுத்திர அவதானிப்புகளும்

(ஆ) சக்தி, சூழல் தொழில்நுட்பம் என்பவற்றைக் கண்டு பிடித்தலும் அவற்றைப் பரப்புதலும் என்பனவாகும்.

## தெற்கின் நிலை

உலகத்தின் சூழலைப் பேணிப் பாதுகாப்பதற்கு தொழில்வளம் பெற்ற நாடுகளுடன் ஒத்துழைப்பதற்கு வளர்முக நாடுகள் சில நிபந்தனைகளை முன் வைத்துள்ளன. சூழல் அபிவிருத்திக்கான ஐக்கியநாடுகளின் மாநாட்டில் குழு 77 நாடுகளின் தலைவர் கலாநிதி கோபி அவூநோர் இதனை முன்வைத்தார்.

வறுமை, சூழல், அபிவிருத்தி ஆகியவற்றுக்கிடையிலான தொடர்புகள் பற்றி விவாதிப்பதை நாம் வரவேற்கின்றோம். இதனால் சூழல் பாதுகாப்பிற்கும் அபிவிருத்திக்கும் எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் என்பதையறிய ஒரு வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. உலகளாவிய பொருளாதாரச்

சமமின்மையே மூன்றாம் உலகின் வறுமைக்குப் பிரதான காரணமாக உள்ளது. இது சூழலினைத் தரம் குறையச் செய்கின்றது. தொழில் வளநாடுகள் எமது வளங்களைக் குறைந்த விலையில் வாங்கி முடிவுப் பொருட்களை விற்கும் நிலையினை இனிமேலும் அனுமதிக்க முடியாது. தொழில்நுட்பம் எமக்கு நிபந்தனைகளுடன் வழங்கப்படும் போது எமக்கு நன்மை செய்பவர்களுக்கு நாம் அடிமையாகி விடுகின்றோம். ஆகவே வடக்கும் தெற்கும் பேச்சு வார்த்தை நடாத்த வேண்டிய நேரம் வந்து விட்டது. இது "குழு 77" நாடுகளின் உச்சி மாநாட்டில் செய்யப்பட முடியாதது. ஏனெனில் அதில் எமக்குப் பிரதிநிதித்துவம் கிடையாது. ஆயுதக் குறைவால் உருவாகும் பணமீதியை சூழலைப் புனருத்தாரனம் செய்யப் பயன்படுத்த வேண்டும். இதனைச் செய்வதற்கு காடுகளைப் பேணிப்பாதுகாப்பதனாலோ அல்லது இரசாயனக் கழிவுகளை பாதுகாப்பான இடங்களில் சேர்ப்பதனாலோ மாத்திரம் பெற்றுவிடமுடியாது. ஆனால் வறிய நாடுகளில் அபிவிருத்தியை உருவாக்குவதனாலேயே இதனை நிறைவேற்ற முடியும். வறிய நாடுகளில் கடுமையான வறுமையின் முதல் இரை சூழலே. ஏனெனில் சன நெருக்கடி, கூடுதலான மேய்ச்சல், பயிர்ச்செய்கை நிலம் குறைவடைதல், வரண்டு போதல் என்பன ஏற்படுகின்றன. சமாதானத்தின்மூலம் கிடைக்கும் பணமிச்சம் செல்வந்தர்களுக்கு மேலும் சலுகை அளிக்கப்போகும் என்பதனாலும், வறியவர்களின் அவலநிலையை மேலும் அவலமாக்கும் என்பதனாலும் நாம் கட்டாயமாகவே வாழும் வழி செய்யும் ஒரு உலக சமுதாயத்தையே உருவாக்க வேண்டும். ஆகவே இந்தப்பொதுப்பிரச்சினையான சூழல், வளர்ந்து வரும் நாடுகளையும், தொழில்வள நாடுகளையும் ஒரு பொதுவான மேடைக்குக் கொண்டு வரும் என எதிர்பார்க்கின்றோம். நாங்கள் கடுமையாக உழைக்காமல்தான் வறியவர்களாக இருக்கின்றோம் என்பதல்ல. ஆனால் வரலாற்றுரீதியாக வளர்முக நாடுகள் சுரண்டப்பட்டு வந்தன. ஆகவே செல்வந்த வடக்கு வளர்முக நாடுகளின் ஆலோசனைகளை நன்கு ஆராய்ந்து வரப்போகும் தலைமுறையினருக்கு நல்ல உலகத்தை விட்டுச்செல்வார்கள் என நம்புகின்றோம்.

இக்குறிக்கோளை அடையவேண்டும் என்பதே வளரும் நாடுகளின் உறுதியாகும். ஆனால் இம்முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டுக்கொண்டே வரப்படுகின்றது. ஆகவே கோளளாவிய சூழல் மாசடைதலைத் தடுப்பதற்கு வளர்முக நாடுகளின் ஒத்துழைப்பில்லாமல் நிறைவேற்ற முடியாது. ஆகவே நாம் எல்லோருமே பங்காளிகள் என்ற முறையில் சமமாகவே ஒத்துழைத்தால் எதிர்கால சந்ததியினருக்காக எமது கோளைப்பாதுகாத்தல் என்னும் உன்னத குறிக்கோளை அடைவது சாத்தியமாகும்.

## மேற்கொள்ளப்படக்கூடிய நடவடிக்கைகள்.

சூழல் பிரச்சினை தொடர்பாக இந்தியா, சீனா, போன்ற வறிய நாடுகளை குற்றம் கூறுவது சரியாகாது. மக்கள் வெளிவிடுவதிலிருந்தும் உயிர்ச்சுவட்டு எரிபொருட்களின் சொற்ப நுகர்வில் இருந்தும் வரும் காபனீரொட்சைட்டையும், நெற்பயிர் செய்வதாலும், விலங்கு வளர்ப்பதாலும் உருவாகும் மெதேன் வாயுவையும் பெரிதுபடுத்தக் கூடாது. ஆனால் வளர்ந்த நாடுகள் ஏராளமான உயிர்ச்சுவட்டு எரிபொருட்களை எரிப்பதுமல்லாமல், மீளப்பெறமுடியாத பாரியளவு கனிய வளங்களையும் வீணாக்குகின்றார்கள். இதனைத் தடுத்து நிறுத்தாவிடின் நிலமை மேலும் மோசமடையும்.

எனவே ஏற்படக்கூடிய இடர்பாடுகள் பற்றித் தற்போது திட்டவட்டமான அபிப்பிராயங்கள் இல்லாவிட்டாலும் காலம் பிந்துமுன் முன்னெச்சரிக்கையான செயற்பாடுகள் இப்பொழுதே எடுக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கலாம்.

எனவே பின்வருவன சில பயன்தரக்கூடிய ஆலோசனைகளாகும்.

1. கல்வி மூலமாகவும் வேறுவழிகள் மூலமாகவும் பூமியின் வெப்ப அதிகரிப்புப் பற்றி மக்களுக்கு உணர்த்தப்படல் வேண்டும். நாம் அனைவரும் ஒன்று பட்டு இதனைத்தவிர்த்துக் கொள்ள முயல வேண்டும். இப்போது எல்லோரும் ஒரேகதியில்தான் இருக்கின்றோம். இப்பொழுது குடியேற்ற வாதம் போய், தேசியவாதம் போய், கோள வெப்பமேற்றம் எம்மைப் பிடித்துக்கொண்டுள்ளது.

2. இதற்கான காரணத்தையும், விளைவுகளையும் அறிய அதிகளவு விஞ்ஞான ஆராய்ச்சிகள் தேவைப்படுகின்றன. தெரிந்தவற்றைச் சரியாகப் பயன்படுத்தியும் தெரியாதனவற்றைப் படிப்படியாக அறியவும் முயல வேண்டும்.

3. வளர்ந்த நாடுகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். அதாவது உயிர்ச்சுவட்டு எரிபொருள் நுகர்வைக் குறைத்தல், சக்தி வினைத்திறனை அதிகரித்தல் போன்றன. அத்துடன் மூன்றாம் உலகிற்கு இதற்குப் பணவுதவி வழங்க வேண்டும்.

4. மீளக்காடு உருவாக்கல் (Afforestation)ஒரு சிறந்த முறையாகும். இது மலிவான முறையும் கூட. பச்சைத் தாவரங்களே முதலில் இருந்த $H_2+CO_2+CH_4$ என்ற புவி வளிமண்டலத்தை தற்போதைய $N_2+O_2$ ஆக மாற்றி விட்டன.

5. கைத்தொழில்களால் வெளிவிடப்படும் நச்சுவாயுக்களைக் குறைப்பது அல்லது நிறுத்தி விடுவது மிகவும் சிறந்ததாகும். இது பொருளாதார ரீதியாக செலவுடையதாகவும், தொழில் நுட்பரீதியாக கடினமானதாகவும் உள்ளது. இதற்காகச் சில சாதனங்களை (Special gas transportation system and green house-phytotron)அமைத்து இவ்வாயுக்களை நேரடியாகப் பசளையாகப் பயன்படுத்தலாம்.

6. நீரிலிருந்து பெறப்படும் ஐதரசன் காற்று, நீர்வலு, அணுப்பிரிவு, அணுச்சேர்க்கை, சூரியசக்தி, போன்ற தூய்மையான வரையறையற்ற சக்தி மூலங்களை பிரயோகிப்பதற்கான முக்கியமான ஒரு உபாயமாக இது உள்ளது.

## முடிவுரை

நவீன உலகில் கோள வெப்பமேற்றம் ஒரு பாரதூரமான பிரச்சினையாகவே உள்ளது. இதனளவு அத்துணை பெரிதாகவும், சிக்கலானதாகவும் இருப்பதனால் முரண்பாடான அபிப்பிராயங்கள் எழுவதும் இயல்பே. ஆகவே விஞ்ஞான

தொடர்ச்சி 31 ஆம் பக்கத்தில்.....

# இலங்கையின் வரி அமைப்பு முறை

பா. சிவாஜி

## அறிமுகம

மனித வரலாற்றில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த நூற்றாண்டில் மனித சமூகம் பல சாதனைகளைச் சந்தித்து விட்டதைப் பெருமைப்பட முடியுமாயினும், அரசியல் பொருளாதார நோக்கில் சோசலிஸத்தின் உதயம், முதலாளித்துவ சோசலிஸத்தின் நெருக்கடிகள் போன்ற பிரதான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதை இங்கு கோடிட்டுக் காட்ட வேண்டியுள்ளது. அரசியல் ஆய்வாளர்களின் நோக்கில் அரசாங்கமானது மனிதனை ஆள்வதற்காகவன்றி, மனித குல மேம்பாட்டுக்காக இயற்கையை தகுந்த வழிகளில் பயன் படுத்தி, புதிய முறைகளை உருவாக்குவதனையே இலக்காகக் கொண்டுள்ளது எனலாம். இன்றைய பொருளாதாரங்களில் அவை முதலாளித்துவ, சோசலிஸ, கலப்புபொருளாதார முறைகளைக் கொண்ட எந்த அமைப்பாக இருப்பினும் அரசாங்க நடவடிக்கைகள் இன்றியமையாத ஓர் அம்சமாகவே விளங்குகின்றன. 1930 களில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவப் பொருளாதாரங்களில் ஏற்பட்ட "உலகப் பெருமந்தம்" என்ற நெருக்கடியிலிருந்து பொருளாதாரத்தினை விடுவிக்க கே.எம். கெயின்சினால் அரசாங்க முதலீட்டின் அவசியம் வலியுறுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து உலகப் பொருளாதார அரங்கில் அரசாங்கங்கள் முதலீட்டுக்குத் தேவையான மூலவளங்களை பெற்றுக் கொள்வதற்கு வரி வருமானங்கள் மீது மிகுந்த அக்கறை காட்டத் தொடங்கின.

இலங்கை ஒரு கலப்புப் பொருளாதாரமாக இருந்தாலும் கடந்த அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக சமூக நலக் கொள்கைகளைக் கடைப்பிடித்து வருகின்றதைப் பொதுவான பண்பாக அவதானிக்க முடிகிறது. இலவசக் கல்வி, இலவச சுகாதார, மருத்துவ சேவைகள், போசாக்கு, வீடமைப்பு போன்ற சமூக நலன் புரி சேவைகளில் மட்டுமன்றி விவசாயம் மீன்பிடி, போக்குவரத்து, நீர்ப்பாசனம் போன்ற பொருளாதார உள்ளமைப்புகளிலும் கணிசமான முதலீடுகளைப் பேணி வந்துள்ளது. பொதுவாக பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான சமூக, பொருளாதார உள்ளமைப்புகளை ஏற்படுத்த வேண்டிய அவசியம் இலங்கைக்கு மட்டுமன்றி சகல பொருளாதாரங்களுக்கும் பொருந்துவதாகவே உள்ளது. இத்தகைய சமூக பொருளாதார குறிக் கோள்களை எய்துவதற்கும், நாட்டின் வேலையின்மை, வறுமைநிலை பொருளாதார சமமின்மை ஆகியவற்றைக் கணிப்பதன் மூலம் அருமைப்பாடான வளங்களின் ஒதுக்கீட்டில் ஓர் உன்னத நிலையினைத் தோற்றுவிக்கவும், வரிவிதிப்பின் மூலமான அரசிறையைத் திரட்டுதல், எல்லாப் பொருளாதாரங்களுக்கும் இன்றியமையாத நடவடிக்கையாகவே உள்ளது. இதன் பின்னணியில் இலங்கையின் பிரதான வரிகள், அவற்றின் சார்பளவான பங்களிப்புக்கள் கடந்த காலங்களில் வரியமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் போன்றவை இக் கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

பா. சிவாஜி
B.A (Hons) Cey. , MAAT (Sri Lanka)
வரி மதிப்பாளர்
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
கொழும்பு 02

## 1. இலங்கையின் அரசிறைப் போக்குகள்

வரவு செலவுத்திட்ட நடவடிக்கைகளில் அரசாங்க வருமானம் "அரசிறை" (Revenue) என அழைக்கப்படும். பொவாக எந்த நாட்டினதும் அரசிறை அமைப்பில் வரி, வரியில்லா வருமானங்கள் அடங்குமாயினும், இலங்கையின் அரசிறை அமைப்பைப் பொறுத்தவரையில் வரி அரசிறையே பிரதான இடத்தை வகிப்பதை அட்டவணை 1 தெரிவிக்கின்றது. 1980 களின் நடுப்பகுதியைத் தவிர சமீப காலங்களில் ஏறக்குறைய 90 சதவீதமான அரசிறைக்கு வரி அரசிறையே பொறுப்பாக இருந்து வருவதைக் கொண்டு அதன் முக்கியத்துவம் எடுத்துக் காட்டப்படுகின்றது.

### அட்டவணை - 1. தெரிவு செய்யப்பட்ட சில நாடுகளுடன் இலங்கையின் அரசிறை அமைப்பு

| நாடுகள் | மொத்த அரசிறையின் சதவீதமாக | | மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக |
|---|---|---|---|
| | வரி அரசிறை 1972 — 1990 | வரியில்லா அரசிறை 1972 —1990 | அரசிறையின் பங்கு 1972 — 1990 |
| இலங்கை | 91.3 — 90.5 | 8.7 — 9.5 | 20.1 — 21.1 |
| இந்தியா | 86.8 — 80.1 | 13.2 — 19.9 | 10.2 — 14.8 |
| பாகிஸ்தான் | 84.2 — 73.1 | 15.8 — 73.1 | 12.5 — 19.0 |
| மலேசியா | 78.8 — 74.8 | 21.2 — 25.2 | 20.3 — 28.9 |
| ஐக்கிய இராச்சியம் | 89.2 — 90.4 | 10.8 — 9.6 | 32.8 — 35.5 |
| அவுஸ்திரேலியா | 87.5 — 90.7 | 12.5 — 9.3 | 20.5 — 27.2 |
| நெதர்லாந்து | 95.3 — 91.4 | 4.7 — 8.6 | 43.4 — 47.5 |
| கனடா | 89.1 — 91.0 | 10.9 — 9.0 | 21.3 — 20.5 |
| ஐக்கிய அமெரிக்கா | 94.3 — 92.1 | 5.7 — 7.9 | 17.6 — 20.0 |
| ஜப்பான் | 97.6 — 94.4 | 2.4 — 5.6 | 11.2 — 13.9 |

மூலம் : World Development Report -1992. World Bank. Washington.

1978 இல் இருந்து 1991 வரையில் இலங்கையின் வரி அரசிறையின் பருமன், வளர்ச்சிப்போக்கு என்பவை அட்டவணை 2 இல் விரிவாகக் காட்டப்பட்டுள்ளன. இந்தக் காலப்பகுதியில் வரி அரசிறையின் பெயரளவுப் பெறுமதி ஏறக்குறைய ஏழுமடங்காக அதிகரித்திருக்க இதன் மெய்ப் பெறுமதி ( பெயரளவுப் பெறுமதியை 1982 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்ட மொத்த தேசிய உற்பத்திச் சுருக்கி மூலம் மெய்ப் பெறுமதியாக மாற்றப்பட்டுள்ளது.) ஏறக்குறைய 46 சதவீத அதிகரிப்பையே பதிவு செய்துள்ளது. ஆண்டு வளர்ச்சி வீதமும் இத்தகைய வேறுபாட்டையே காட்டி நிற்கின்றது. இக்காலப்பகுதியில் பெயரளவு சேகரிப்புக்கள் சராசரியாக ஆண்டுக்கு 16.5 சதவீதத்தால் வளர்ச்சியடைய மெய்ப் பெறுமதியில் கணிக்கப்பட்ட வரி சேகரிப்புக்கள் 3.5 சதவீதமாக மட்டுமே வளர்ச்சியடைந்திருந்தமை, பணவீக்கத்தினால் அரசிறையின் மெய் வளர்ச்சி வீதம் பின் தள்ளப்படுவதையே வெளிப்படுத்துகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவிகிதமாக அவதானிக்கும் போது அதன் வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் ஆண்டுக்கு சாராசரியாக 16 வீதத்தால் அதிகரித்து வந்துள்ளமையினால் வரிவருமானத்தின் முக்கியத்துவம் மேலும் வலியுறுத்தப்பட வேண்டியதாக உள்ளது. இத்தகைய போக்குகள் இலங்கையின் பிரதான பொருளாதார நடவடிக்கைகளின் விரிவாக்கத்திற்கு ஏற்ற வகையில் சார்பு ரீதியில் வரி வருமானத்தின் விரிவாக்கம் அமையவில்லை என்பதையே தெரிவிக்கின்றன.

### அட்டவணை – 2: இலங்கையின் அரசிறை 1978 – 1991 (மில்லியன் ரூபாவில்)

| ஆண்டுகள் | அரசிறையின் பெயரளவுப் பெறுமதி | வளர்ச்சி வீதம் | அரசிறையின் மெய்ப்பெறுமதி | வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|---|
| 1978 | 10324 | 6.7 | 18696 | -7.8 |
| 1979 | 11015 | 10.4 | 17243 | -6.6 |
| 1980 | 12158 | 12.7 | 16105 | -6.5 |
| 1981 | 13696 | 7.6 | 15057 | -2.1 |
| 1982 | 14737 | 35.1 | 14737 | 17.9 |
| 1983 | 19912 | 50.4 | 17377 | 28.4 |
| 1984 | 29939 | 1.7 | 22319 | 0.8 |
| 1985 | 30442 | 2.7 | 22488 | -2.9 |
| 1986 | 31272 | 12.3 | 21826 | 4.9 |
| 1987 | 35119 | 2.4 | 22906 | -8.2 |
| 1988 | 35946 | 31.9 | 21027 | 20.2 |
| 1989 | 47419 | 29.1 | 25275 | 3.5 |
| 1990 | 61206 | 11.4 | 27203 | 7.6 |
| 1991 | 68157 | 16.5 | 27208 | — |
| சராசரி | 30,096 | 16.5 | 20676 | 3.5 |

மூலம் : Report of the Taxation Commission- 1991
இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்

சர்வதேச ரீதியாக ஒப்பிடுகையில் இலங்கையின் அரசிறைப் போக்கினைப் பொறுத்தவரையில் அட்டவணை 1 இல் தெரிவிக்கப்பட்டவாறு, மிகக் குறைந்த வருமானம் பெறும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் மொத்த அரசிறைப் பங்கு மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக நோக்கும்போது உயர்வாக இருந்தாலும், நடுத்தர உயர் வருமானங்கள் பெறும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த பங்களிப்பையே கொண்டுள்ளதை அவதானிக்கமுடிகிறது.

## 2. இலங்கையின் பிரதான வரிவகைகள்

இலங்கையின் தற்போதுள்ள வரிமுறையின் பிரதான வகைகளாவன :

(1) வருமானங்கள் மீதான வரிகள்
( Taxes on Income )
(2) சொத்துக்கள் மீதான வரிகள்
(Taxes on Property )
(3) உள்நாட்டுப் பொருட்கள், பணிகள் மீதான வரிகள்
(Taxes on Domestic Goods & Services)
(4) சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்
( Taxes on International Trade )
(5) ஏனைய வரிகள் ( Miscellanious Taxes )

இவ்வாறு வரிகளை வகைப்படுத்தினாலும், பல்வேறு ஆய்வு நோக்கங்களுக்காக நேர்வரி, நேரில்வரி எனவும் இருவகைப்படுத்தலாம். நேர்வரி என்பது தனிப்பட்டவர்கள் மீதும், நிறுவனங்கள் மீதும் விதிக்கப்படும், மற்றவர்கள் மீது சுமத்த முடியாத வரியாக அமைய, நேரில்வரி என்பது பொருட்கள், சேவைகள் மீது விதிக்கப்பட்டு, மற்றவர்கள் மீது சுமத்தக்கூடிய வரியாக அமைகின்றன. இலங்கையில் நேர்வரி என்ற வரையறைக்குள் வருமான வரிகள், சொத்துக்கள் மீதான வரிகள் என்பவற்றையும், நேரில் வரி என்ற வரையறைக்குள் சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் ஆகியவற்றையும் உள்ளடக்கலாம். இலங்கையின் மொத்த வரி அரசிறையில் நேர் வரியின் பங்கு ஏறக்குறைய 20 சதவீதமாக இருக்க நேரில்வரியின் பங்கு 80 சதவீதமாக உள்ளது.

அட்டவணை 3 இல்:
1966 – 1990 வரையிலான காலப்பகுதியில் இலங்கையின் வரியமைப்பின் மாற்றங்கள் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன. இதிலிருந்து இலங்கையின் வரிக் கட்டமைப்பில் வருமானவரி , ஏற்றுமதித் தீர்வை ஆகியவற்றின் சார்பு ரீதியான பங்கு குறைவடைந்து வர, மொத்த விற்பனைவரி, இறக்குமதித்தீர்வை ஆகியவற்றின் பங்கு அதிகரித்து வந்துள்ளமை குறிப்பிடக்கூடியதாக உள்ளது. மொத்தவரி அரசிறையில் இவ்விருவரிகளும் 60 சதவீதத்துக்குக் கூடுதலாக இருப்பது மட்டுமல்லாது உள்நாட்டுப் பொருட்கள் பணிகள் மீதான வரிகள் ஏறக்குறைய 45 சதவீதமாகவும் உள்ளன. இத்தகைய மாற்றங்களுக்கான காரணிகளையும், பின்னணிகளையும் விளங்கிக் கொள்வதற்கு ஒவ்வொரு வரிவகைகளையும் தனித்தனியாக ஆராய வேண்டியுள்ளது.

## அட்டவணை3: இலங்கையின் வரியமைப்பு (1966 - 1990)

(மொத்த வரி அரசிறையின் சதவீதமாக)

| | 1966-70 | 1971-75 | 1976-80 | 1981-85 | 1986-90 |
|---|---|---|---|---|---|
| (1). வருமானவரி (1) | 20.6 | 17.1 | 15.3 | 17.6 | 13.0 |
| (2) சொத்துக்கள் மீதான வரி | 2.8 | 2.7 | 1.7 | 1.9 | 4.3 |
| (3) உள்நாட்டுப் பொருட்கள் பணிகள் மீதான வரி | 17.6 | 29.6 | 26.0 | 39.7 | 45.2 |
| (I) பொதுவிற்பனை வரியும் மொத்த விற்பனை வரியும் | (6.2) | (15.6) | (12.7) | (28.0) | (31.9) |
| (II.) கலால்தீர்வை | (11.4) | (14.0) | (13.3) | (11.7) | (13.3) |
| (4) சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 56.2 | 48.6 | 56.1 | 40.0 | 34.6 |
| (I) இறக்குமதித்தீர்வை | (29.5) | (9.8) | (15.5) | (21.3) | (30.0) |
| (II) ஏற்றுமதித்தீர்வை | (18.5) | (14.3) | (31.2) | (18.7) | (4.6) |
| (III) உரிமைச் சான்றிதழ் வரி | (8.2) | (24.5) | (9.4) | (—) | (—) |
| (5) ஏனைய கொடுக்கல் வாங்கல் மீதான வரிகள | 2.8 | 2.0 | 0.9 | 0.8 | 2.9 |
| (I) உரிமக்கட்டணங்கள் | (2.7) | (2.0) | (0.9) | (0.8) | (0.7) |
| (II) ஏனையவை | (0.1) | (—) | (—) | (—) | (2.2) |
| மொத்தம் | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக | 15.4 | 15.9 | 19.0 | 17.7 | 18.0 |

மூலம் ; Report of the Taxation Commission -1991

(I) மத்தியவங்கி வசமுள்ள திறைசேரி உண்டியல்கள் மீதான வரியும் உள்ளடங்கும்.

## 2. 1 வருமானவரி

இலங்கையில் வருமான வரியானது 1932ஆம் ஆண்டில் காலனித்துவ அரசாங்கத்தின் தேவைகள் கருதி அறிமுகம் செய்யப்பட்டதாகும். 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவுகள் 2, 3 க்கு அமைய ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிலும் ஒரு நபரின் வருமானங்கள், இலாபங்கள் என்பவற்றின் மீது குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் அறவிடப்படுவதே வருமானவரி என வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது. குறித்தவரிமதிப்பீட்டு ஆண்டில் இலங்கையில் வதிவுள்ளவராயின் (ஓர் ஆண்டில் 183 நாட்களுக்குக் கூடுதலாக இலங்கையில் தங்கியிருந்த ஒருவர்) இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் எழுகின்ற (உலக) வருமானங்களும் இலாபங்களும், வதிவற்றவராயின் (183 க்குக் குறைவான நாட்கள் தங்கியிருந்தவர்) இலங்கையில் மட்டும் எழுகின்ற வருமானங்களும் இலாபங்களும் வருமான வரிக்கு உட்படுகின்றன. இங்கு வருமானங்கள் அல்லது இலாபங்கள் எனக் கருதப்படுபவை, ஊழிய வருமானம், தொழில் முயற்சியிலிருந்து கிடைக்கும் இலாபங்கள் கட்டிடம் சொத்துக்கள் என்பவற்றிலிருந்து கிடைக்கும் தேறிய ஆண்டுப் பெறுமதியும் வாடகையும், பங்கிலாபங்கள், வட்டி வருமானங்கள், விதிப்பனவுகள் அல்லது ஆண்டுத் தொகைகள், மூலதன வருமானமிகை வேறுயாதாயினும் மீண்டு வராத் தன்மையற்றதும், அமைய அடிப்படையில் அமைந்ததுமான எல்லாவித வருமானங்களையும் உள்ளடக்கும். "நபர்" எனக் கருதப்படுவது தனிநபர்களை மட்டுமன்றி "கம்பனிகள்" "ஆட்கள் குழு" என்பவற்றையும் குறிக்கின்றன. இந்தவகையில் இலங்கையின் வருமானவரியினைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்

(1) தனிப்பட்டவர்களின் வருமானங்கள் மீதான வரிகள்.
(11) கம்பனி மீதான வரிகள்.
(111) வேறு "ஆட்கள் குழு" மீதான வரிகள்
(Body of Persons)

### (i) தனிப்பட்டவர்கள் மீதான வருமானவரி

தனிப்பட்டவர்களின் வருமானத்தைப் பொறுத்தவரையில் நியதிச் சட்டமுறையான வருமானத்திலிருந்து ( Statuatory Income ) அங்கீகரிக்கப்பட்ட கழிவுகள் நீக்கப்பட்டபின் உள்ள வரிமதிப்பிடற்குரியதான வருமானத்திலிருந்து (Assessable Income) வரிவிலக்குக்கான தொகை, ஏற்றுக் கொள்ளப்பட்ட தகமைக் கொடுப்பனவுகள் தொடர்பான விடுதொகை என்பவை கழித்த பின் வரி, அறவிடுதற்குரிய வருமானம் (Taxable Income) கணிக்கப்படும். வரிவிலக்குக்கான தொகையானது காலத்துக் காலம் அதிகரிக்கப்பட்டு வந்துள்ளது. வரிமதிப்பாண்டு 1979-80 இலிருந்து தொடர்ச்சியாக நான்கு ஆண்டுகளுக்கு 12,000 ரூபாவும், 1984 - 85 இல் 18,000 ரூபாவும், 1985 - 86 இல் 24,000 ரூபாவும், 1986 - 87 இலிருந்து 5 ஆண்டுகளுக்கு 27,000 ரூபாவும், 1992 - 93 இலிருந்து 42,000 ரூபாவுமாக உயர்த்தப்பட்டு வந்துள்ளது. ஊழிய வருமானமாக இருப்பின் கணிக்கப்பட்ட மொத்த வரித்தொகையிலிருந்து மேலதிகமாக 1990 - 91 இல் 900 ரூபாவும், 1991 -92 இல் 1500 ரூபாவும், 1992 - 93 இல் 1800 ரூபாவும் வரிவீடு தொகையாக (Tax Credit) அனுமதிக்கப்படுகின்றது. இதன் அடிப்படையில் தற்பொழுது ஒருவர் ஊழிய வருமானமாக மொத்தமாக ஆண்டுக்கு 60,000 ரூபாவுக்கு கூடுதலான வருமானத்தை உழைக்கின்ற ஒருவரே வருமான வரிக்கு உட்படுகின்றார்.

தகமைக் கொடுப்பனவுகளும் காலத்திற்கு காலம் மாற்றங்களுக்குள்ளாகி வந்துள்ளன. 1992 - 93 இலிருந்து வீடமைப்புக்கான முதலீடுகள், அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு முயற்சிகளில் சாதாரண பங்குகளை கொள்வனவு செய்வதனூடாக முதலீடுகள், அரசாங்கத்திற்கு வழங்கிய நன்கொடைகள், அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதிக்காக செலுத்திய தொகை என்பவற்றை உள்ளடக்குவதுடன், இவற்றின் மொத்தம் ,வரிமதிப்பிடுதற்குரிய வருமானத்தில் மூன்றிலொருபங்கு அல்லது 50,000 ரூபா என்பவற்றில் மிகக் குறைந்த தொகையே தகமைக் கொடுப்பனவாக அங்கீகரிக்கப்படும். தனிப்பட்டவர்களின் வருமானங்கள் மீதான வரிவிதிப்பு வீதங்களைப் பொறுத்தவரையில், வரி அறவிடத்தக்க வருமானத்தில் விருத்தி முறையில் விதிக்கப்படுகின்றன. 1979 - 80 இல் விருத்தி முறையில் 7.5 சதவீதத்திலிருந்து அதியுயர் எல்லை வீதமான 70 சதவீதம், 1980 - 81 இல் 55 சதவீதமாகவும்,

1986 - 87 இல் 50 வீதமாகவும், 1988 - 89 இல் 40 வீதமாகவும், 1992 - 93 இல் 35 வீதமாகவும் பாரிய மாற்றங்களுக்குள்ளாகி வரி அடிப்படைகள் இலகுவாக்கப்பட்டு வந்துள்ளன. இவற்றிற்கு மேலதிகமாக 1989 - 90 இலிருந்து எல்லாவகையான வருமான வரிகளின் மீதும் 15 வீதத்தினை மேலதிகக் கட்டணமாகவும் (Surcharges) அறவிடப்படுகின்றன. தற்போது நடைமுறையிலிருக்கும் வருமானவரி விதிப்பு வீதம் பின்வருமாறு அமைகிறது

| வரி அறவிடத்தக்க வருமானத்தில் | வரி வீதம் | 15 வீதம் மேலதிகக் கட்டணம் உட்பட தாக்கமான வரி வீதம் |
|---|---|---|
| முதல் 21,000 ரூபா | 10.0 | 11.5 |
| அடுத்த 24,000 ரூபா | 20.0 | 23.0 |
| அடுத்த 24,000 ரூபா | 30.0 | 34.5 |
| மீதித் தொகை | 35.0 | 40.25 |

## தொழிலை விட்டு விலகுவோர், இளைப்பாறுவோர்
( Treatment of Terminal Benifits )

தொழிலை விட்டு விலகுவோர் விடயத்தில் வழங்கப்படும் ஒரே முறைக் கொடுப்பனவுகளான ( Once and for all Payments ) இளைப்பாறிய பணிக் கொடை, பதவியிழப்பிற்கான நஷ்டஈடு, சேமலாபநிதியிலுள்ள நிலுவை, ஊழியர் நம்பிக்கை நிதியத்திலிருந்து கிடைத்த ஏதேனும் தொகை போன்றவையும் வரிவிதிப்பிற்குள்ளாகின்றன. ஒரே முறைக் கொடுப்பனவுக்கான வரிவிதிப்புக்கள் வரிவீதம் பின்வருமாறு அமைகின்றன.

முதலாவது 200,000 ரூபா —— வரியில்லை
அடுத்த 50,000 ரூபா ---- 5 வீதம்
அடுத்த 50,000 ரூபா —— 10 வீதம்
மீசித் தொகை —— 15 வீதம்

தொழிலை விட்டு விலகுவோரின் இத்தகைய ஒரே முறைக் கொடுப்பனவுகள் 1.5 மில்லியன் ரூபாவை மிஞ்சும் போது மேலே தெரிவித்த முறைகளிலல்லாமல் சாதாரண வருமானவரி விதிப்பு முறைகளே பின்பற்றப்படும்.

## வதிவற்றவர்
( Non - Resident )

உள்நாட்டு இறைவரிச்சட்டத்தின் 67, 73 (1) ஆகிய பிரிவுகளுக்கமைய ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில் இலங்கையில் வதிபவராக இல்லாத தனியாளொருவர் அல்லது தற்காலிகமாக வதிபவரைப் பொறுத்தவரையில் இலங்கையில் புரியப்பட்ட சேவைகளிலிருந்து அல்லது தொழிலிருந்து எழுகின்ற வருமானங்கள், இலாபங்கள் ஆண்டொன்றுக்கு 1000 ரூபாவை மிஞ்சும் பொழுது வருமானவரிக்கு உட்படுகின்றனர். அத்தகைய முழு

வருமானங்களும் வருமானவரிக்கு உட்படுவதுடன் 25 வீதம் என்ற நிலையான வீதத்தில் வரி அறவிடப்படும். இத்தகைய நபர்களுக்கு மிகைக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்படுகின்றதாயினும், வதிவுள்ள ஒருவருக்கு வழங்கும் கழிவுகள், வரிவிடு தொகை, தகைமைக் கொடுப்பனவுகள் எதுவும் அனுமதிக்கப்படுவதில்லை. மேலும் ஒருவர் தொடர்ந்து வரும் ஆண்டுகளில் வதிவுள்ளவராகவே வருமானவரி நோக்கங்களுக்காகக் கருதப்படுவார்.

## (ii) கம்பனிமீதான வரிகள்
( Corporate Income Tax )

கூட்டிணைக்கப்பட்ட அல்லது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் இலாபங்கள் மீது விதிக்கப்படுவது கூட்டிணைந்த வருமானவரியாகும். மீளளிப்புச் செய்யப்படாத வரிவிதிப்புக்குள்ளாகும் வரியையும் மீளளிப்புச் செய்யத்தக்க பங்கிலாப வரிகளையும் (நிறுத்தி வைத்தல் வரி) உள்ளடக்கியதே கூட்டுவருமான வரியாகும். வருமானவரி நோக்கங்களுக்காக "கம்பனிகள்" என்பது ஏதேனும் சட்டத்தினால் பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் பொதுக் கூட்டுத்தாபனங்களையும் உள்ளடக்கியதால் கூட்டுவருமானவரிகள் கம்பனிகள் மீதான வருமான வரியாக, வதிவுள்ள கம்பனிகள், வதிவற்ற கம்பனிகள், பொதுக் கூட்டுத் தாபனங்களும், அரசாங்கப் பொறுப்பேற்ற நிறுவனங்களும் என்ற வகையில் பின்வருமாறு வரிவிதிப்பு செய்யப்படுகின்றன.

### வதிவுள்ள கம்பனிகள்

விலை கோரப்பட்ட பொதுக் கம்பனி ——— 40%

மக்கள் கம்பனி ——— 40%

சிறிய கம்பனி(வரிவிதி இலாபம் 250,000 ரூபா வரையில் $33^1/3$ %

சிறிய கம்பனி (வரிவிதிஇலாபம் ரூ. 250,000 - 333, 333 வரையில் 100%

ஏனைய வதிவுள்ள கம்பனிகள் ——— 45%

### வதிவற்ற கம்பனிகள்

இலாபங்கள் மீதான வரிகள் .......... 45%

வெளிநாட்டு பண அனுப்பல்கள், வரி விதி வருமானத்தில் 1/3 பங்கிலும் குறைவாக இருக்கும் போது..... 33 1/3 %
(மொத்த பண அனுப்பலில்)

மூன்றிலொரு பங்கிலும் குறைவாக அமையாத போது ..... 11 1/9 %

பொதுக் கூட்டுத்தாபனங்களும் அரசால் பொறுப்பேற்ற நிறுவனங்களும் ........... 45%

1993 – 94 இல் கூட்டுவருமான வரியானது 35 வீதம் என்ற சீரான முறையில் எல்லாவித கம்பனிகளின் மீதும் விதிக்கப்படுவதாக கடந்த வரவுசெலவுத் திட்டத்தில் பிரயோகிக்கப்பட்டுள்ளது. மேலே தெரிவிக்கப்பட்ட வரிகளுடன் கம்பனிகளின் பங்கிலாபத்தில் தற்போது நிறுத்தி வைத்தல் வரியாக 15 வீதம் விதிக்கப்படுகிறது.

## முற்பணக் கம்பனி வரி ( ACT )

வதிவுள்ள கம்பனி ஒவ்வொன்றும் 1988/89 இலிருந்து கம்பனியால் செய்யப்பட்ட "தகைமையளிக்கும் பகிர்ந்தளிப்பு" ( Qualifying Distribution ) ஒவ்வொன்றினதும் தொகைக்கு குறித்துரைக்கப்பட்ட வீதத்தில் முற்பணக் கம்பனி வரியைச் செலுத்துதல் வேண்டும். இங்கு தகைமையளிக்கும் பகிர்ந்தளிப்பு என்பது பங்கு தாரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் ஏதேனும் பங்கிலாபத்தில் முழுப்பகுதி அல்லது ஒரு பகுதி எனப் பொருள்படும். முற்பணக் கம்பனி வரிவீதமானது சிறிய கம்பனிகளுக்கு 25 வீதமாகவும், விலை கோரப்பட்ட பொதுக்கம்பனிகளுக்கும் மக்கள் கம்பனிகளுக்கும் 33 1/3 வீதமாகவும், ஏனைய வதிவுள்ள கம்பனிகளுக்கு 50 வீதமாகவும் விதிக்கப்படுகின்றன.

## பங்கிலாபங்கள் மீது சாட்டுதல் முறை.
(Imputation System)

முதலில் கம்பனிகளின் இலாபங்கள் மீது வரிவிதிக்கப்பட்டு, இலாபங்கள் பகிரப்படுகையில் பங்குதாரர் மீதும் வரிவிதிக்கப்படும் போது பொருளாதார ரீதியில் இரட்டை வரிவிதிப்புக் குள்ளாக்கப்படுகின்றன. இந்த நடவடிக்கை ஆரோக்கியமான பங்குச் சந்தை நடவடிக்கையினைக் கட்டுப்படுத்துவதுடன் கம்பனிகளின் வளர்ச்சியைத் தடுத்தி நிறுத்தி, பங்குடமைகளாக வளர வழி வகுக்கலாம் என்பதைக் கருத்திற் கொண்டு 1988 – 89 இல் சாட்டுதல் முறை அறிமுகம் செய்யப்பட்டது. இதன்படி கம்பனிகளால் வழங்கப்படுகின்ற இலாபப் பங்குகளை தனிப்பட்டவரின் வருமானங்களில் சேர்த்து வருமானவரி அறவிடப்படும் பொழுது அப்பங்குகளில் கம்பனியில் செலுத்தப்படும் வரியின் அரைப் பகுதியை பங்குதாரரின் கணக்கில் வரவு வைக்கப்படும். முழுமையாகச் சாட்டுதல் செய்வதற்கு பதிலாக 50 வீதம் முறை பின்பற்றப்படுவது ஓரளவுக்காவது வரிசெலுத்துவோருக்கு நிவாரணமளிப்பதாக உள்ளது.

இலங்கையின் மொத்த அரசிறையில் வருமானவரியின் பங்கு ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டு அட்டவணை 4 இன் மூலம் காட்டப்பட்டுள்ளது. உலக வங்கியின் பாகுபாட்டில் வருமானம் குறைந்த நாடுகள், இடை மட்ட வருமானம் பெறும் நாடுகள், மிக உயர் வருமானம் பெறும் நாடுகள் என்ற வகையில் அவதானிக்கும் போது முறையே வருமான அளவுக்கேற்ப வருமானவரிகளின் பங்கும் அதிகரித்துச் செல்லும் போக்கை அவதானிக்க முடிகிறது. வருமானம் குறைந்த, குறைவிருத்தி நாடுகளில் வருமானவரியின் பங்கு 10 – 15 வீதம் வரையில் காணப்பட, வளர்ச்சியடைந்த உயர்வருமானம் பெறும் நாடுகளில் 50 – 70 வீதம் வரையில், மிகப் பிரதான வரியாகவும் வருமானவரி விளங்குவதைக் காணலாம்.

### அட்டவணை 4: வெவ்வேறு நாடுகளில் தலா வருமானமும், வருமானவரியின் பங்கும்.

| நாடுகள் | தலாவருமானம் (1991) (யு. எஸ் டொலரில்) | மொத்த அரசிறையில் வருமானவரியின் சதவீதம் 1990. |
|---|---|---|
| வருமானம் குறைந்த நாடுகள் | | |
| இலங்கை | 465 | 10.8 |
| இந்தியா | 310 | 15.4 |
| பாகிஸ்தான் | 4[illegible] | 10.0 |
| இந்தோனேசியா | 605 | 57.5 |
| கீழ் நடுத்தர வருமானம் (பெறும் நாடுகள்) | | |
| பிலிப்பைன்ஸ் | 725 | 28.3 |
| தாய்லாந்து | 1605 | 24.2 |
| மலேசியா | 2475 | 30.5 |
| உயர் நடுத்தர வருமானம் (பெறும் நாடுகள்) | | |
| மெக்சிக்கோ | 3200 | 36.5 |
| தென் ஆபிரிக்கா | 2771 | 48.6 |
| தென் கொரியா | 6478 | 34.0 |
| மிக உயர் வருமானம் பெறும் (கைத்தொழில் மய நாடுகள்) | | |
| ஐக்கிய இராச்சியம் | 17445 | 40.3 |
| அவுஸ்திரேலியா | 15940 | 65.1 |
| கனடா | 21750 | 53.7 |
| ஐக்கிய அமெரிக்கா | 22550 | 51.6 |
| ஜப்பான் | 27065 | 71.2 |

மூலம் : (1) World Development Report - 1992
(2) Asia Week

## (iii) ஆட்கள் குழு
( Body of Persons )

அங்கீகரிக்கப்பட்ட தரும நிறுவனங்கள், சிக்கன நலன் புரிச் சங்கங்கள் , சேமலாபநிதியங்கள் ஆகியவற்றுக்கு வரிவிடு தொகை 42,000 ரூபாவைக் கழித்த பின்னர் உள்ள வரி விதி வருமானத்தின் மீது 10 சதவீத வரி விதிக்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களின் மீது 20 வீதம், நம்பிக்கைப் பொறுப்பாளர், நிறைவேற்றுநர்கள் மீது 35 வீதமும் வரிவிதிக்கப்படுகின்றன.

## மத்திய வங்கியிடமுள்ள திறைசேரி உண்டியல்கள் மீதான வரி

மத்திய வங்கியினால் வைத்திருக்கப்படும் திறைசேரி உண்டியல்களின் முகப் பெறுமதியின் மீது 9 சதவீத மீளளிப்பு செய்யப்படாத நிறுத்திவைத்தல் வரி விதிக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கிக்கு அரசாங்கம் வட்டியாகச் செலுத்துவது வரவு செலவுத் திட்டத்தில் செலவாகக் காட்டப்படுவதுடன் இதே வட்டியில் ஒரு பகுதி மீண்டும் வரிவருமானமாக அரசாங்கத்திற்குக் கிடைப்பதால் தேறிய விளைவு சமநிலைப் படுத்தப்பட்டாலும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தனது மொத்த வருமானவரியில் ஒரு பகுதியாக திறைசேரி உண்டியல் மீதான வரியை வெளிப்படுத்தி வருகின்றது.

இலங்கையின் வருமான வரி அமைப்பைப் பொறுத்தவரையில் (அட்டவணை - 5) கூட்டிணைந்த வரிகள், கூட்டிணையாத (தனியார்) வரிகள் என்பதை நோக்கும் போது மொத்த வருமான வரியில் கூட்டுவரிகள் 70 சதவீதத்துக்கு மேலாகவும், தனியார் வருமானவரிகள் 30 சதவீதத்திலும் குறைவாகவும் விளங்குகின்றன. மேலும் மொத்த வருமானவரியில் ஊழியர்கள் மீதான வருமான வரியின் பங்கு மிகக் குறைந்த பங்களிப்பாக 10 சதவீதமாகவே உள்ளது.

### அட்டவணை 5 :
### இலங்கையின் வருமான வரி அமைப்பு (1989 - 90)

| | 1989 | | 1990 | |
|---|---|---|---|---|
| மூலம் | மொத்த சேகரிப்பு (மி. ரூபா) | சதவீதம் | மொத்த சேகரிப்பு (மி. ரூபா) | சதவீதம் |
| (1) கூட்டிணைந்த வரிகள் | 5162.3 | 71 | 6702.9 | 71 |
| (i) திறைசேரி உண்டியல்கள மீதான வரிகள் | 2345.3 | 32 | 2648.6 | 28 |
| (11) ஏனையவை | 2817.0 | 39 | 4054.3 | 43 |
| (2) கூட்டிணையாத (தனியார்) வரிகள் | 2136.1 | 29 | 2776.6 | 29 |
| (1) ஊழியர்கள் | 629.8 | 9 | 962.8 | 10 |
| (11) ஏனையவர்கள் | 1506.3 | 20 | 1813.7 | 19 |
| மொத்தம் (1) + (2) | 7298.4 | 100 | 9479.5 | 100 |

மூலம் : Administration Report of the Commissioner General 1989, 1990
Dept. of Inland Revenue. Sri Lanka.

1950 களின் ஆரம்பத்தில் வருமானவரியானது மொத்த அரசிறையில் ஆண்டுக்குச் சராசரியாக 25 சதவீதத்திலிருந்து 1990 களின் இறுதியில் ஏறத்தாழ 12 சதவீதமாகக் குறைவடைந்தமை ஓர் குறிப்பிடக்கூடிய வீழ்ச்சியாகக் கருதமுடியும். (அட்டவணை 6). சார்பளவில் இலங்கையின் வருமான வரியின் பங்கு குறைந்த பங்கைக் கொண்டிருப்பது மட்டுமன்றி கடந்த காலங்களில் தொடர்ச்சியாகக் குறைவடைந்து வருகின்றமைக்கும் பல காரணிகள் பொறுப்பாக உள்ளன. அவையாவன :

### அட்டவணை 6 : இலங்கையின் வருமானவரியின் போக்குகள்

| காலப்பகுதி | மொத்த அரசிறையின் சதவீதமாக (ஆண்டுக்கு சராசரியாக) |
|---|---|
| 1951 - 1955 | 24.7 |
| 1956 - 1960 | 23.3 |
| 1961 - 1965 | 22.1 |
| 1966 - 1970 | 17.0 |
| 1971 - 1977 | 18.0 |
| 1978 - 1984 | 14.9 |
| 1985 - 1989 | 11.9 |
| 1990 - 1991 | 11.3 |

மூலம் : (1) Report of the Taxation Commission - 1991
(11) இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை.

### (1) வருமானவரிக்குட்படுபவர்களின் எண்ணிக்கை சார்பளவில் குறைவாக உள்ளமை.

இலங்கையில் வருமானம் உழைப்பவர்களின் எண்ணிக்கை தற்போது ஏறத்தாழ 5 மில்லியனாக இருந்த போதிலும் அண்மை ஆண்டுகளில் (1990) வருமான வரி செலுத்தியவர்களின் எண்ணிக்கை 223,663 என உள்நாட்டு இறைவரி ஆணையாளர் அதிபதியின் நிர்வாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் அவதானிக்கும் போது வருமானம் உழைப்பவர்களில் சுமார் 4.5 சதவீதத்தினர் அல்லது மொத்த சனத் தொகையில் 1.3 சதவீதத்தினர் மட்டுமே வருமானவரிக்குட்படுகின்றனர் என்பது புலனாகின்றது. மேலும் இதே அறிக்கையில் கூட்டுவருமானவரிக்குட்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 7872 எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### (11) வறுமை நிலையும் பொருளாதார சமமின்மையும்

உலக வங்கியின் பாகுபாட்டில் 43 வறிய நாடுகளில் ஒன்றாக இலங்கையும் உள்ளடக்கப்பட்டவாறு தலாவருமானம் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறைவானதாக ( U S $ 465 ) உள்ளதையும் காட்டுகிறது. ஒருபுறம் இவ்வாறு குறைவான சராசரி வருமானம் மட்டுமன்றி மொத்த சனத்தொகையில் பெரும் பகுதி மக்கள் (40 - 50 %) உணவு முத்திரை வைத்திருப்பவர்களாக வறுமை நிலையில் உள்ளனர். கடந்த 15 ஆண்டுகளில் அரசாங்கம் செயற்படுத்தி வந்த பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக நாட்டில் பொருளாதார ரீதியில் சமமின்மையும் விரிவடைந்தே வந்துள்ளது. நாட்டின் சராசரி வருமானத்திலும் குறைந்த வருமானத்தை 70 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் பெறுவதுடன் நகர்ப்பகுதியில் இவ்விகிதாசாரம் 80 சதவீதமாகவும், கிராமப்பகுதிகளில் 60 சதவீதமாகவும் உள்ளதாக 1985 - 86 இன்

ஊழியப்படை மற்றும் சமூக பொருளாதார மதிப்பீடு தெரிவிக்கின்றது. எனவே ஒருபுறம் வறுமை நிலை, மறுபுறம் சிறுபிரிவினரிடம் பொருளாதார நலன்கள் செறிவாக்கப்பட்டமை போன்றவற்றால் அதிகளவான வருமானவரியைப் பெறமுடிவதில்லை.

## (111) வரிஏய்ப்பும், வரி தவிர்ப்பும் ( Tax Evasions and Avoidance )

உயர்ந்த வருமானம் பெறுகின்றவர்கள் கூட வரி செலுத்துவதிலிருந்து வரி ஏய்ப்பு, வரிதவிர்ப்பு என்பவற்றின் மூலமாகத் தப்பித்துக் கொள்கின்றனர். உற்பத்தி வருமானம், பற்றிய தகவல்களை வெளிப்படுத்தாமை ( Non -Reporting ) வருமானத்தைக் குறைத்துக் காட்டுதல் ( Under Reporting ) அதிகளவான செலவினங்களையும், கொடுப்பனவுகளையும், வரிவிலக்குகளையும் ( Over Statements of Expences, Allowances and Exemptions ) காட்டுவதன் மூலமாகத் தமது வரி விதி வருமானத்தைக் குறைத்து அல்லது தவிர்த்து, வரியிலிருந்து தப்பித்துக்கொள்கின்றனர். பொதுவாக இலங்கையில் வழக்கறிஞர்கள், வைத்தியர்கள், கணக்காளர்கள் போன்ற உயர் தொழில் புரிவோரும், வியாபாரிகள், கைத்தொழிலாளர் ஆகியோரே வரி ஏய்ப்பில் குறிப்பிடத்தக்கவர்களாக உள்ளனர்.

1978 இன் பின்னர் திறந்த பொருளாதாரச் சூழலில் தனியார் துறையினரின் முறை சாராத்துறையின் வளர்ச்சி இவர்களுக்கு மிகவும் வாய்ப்பான சந்தர்ப்பத்தைக் கொடுத்து கறுப்புச் சந்தை நடவடிக்கைக்கு கூட இடமளித்துள்ளது. வரி ஆணைக்குழுவின் அறிக்கையின் படி நாட்டில் 13 பில்லியன் ரூபாவுக்கும் கூடுதலான அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 6 சதவீதம் கறுப்புப் பணம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கறுப்புப் பணத்தை வெளியில் கொண்டுவருவதற்காக 1964 – 1989 வரையில் ஐந்து தடவைகள் வரிமன்னிப்புக்கள் (Tax Amnesties)வழங்கப்பட்டுள்ள போதிலும் அது எதிர்பார்த்த இலக்குகளை அடையாமல் கறுப்புப் பணக்காரர் அவற்றை வெளுத்த பணமாக மாற்றிக் கொள்வதற்கே பெரிதும் உதவியுள்ளது.

வரிச்சட்டங்களின் பலவீனத்தன்மை, வரி அறவிடுவதில் தீவிரத்தன்மை குறைவாக உள்ளமையும் ஒருவகையில் வரிஏய்ப்புச் செய்வோருக்கும், கறுப்புப் பணக்காரருக்கும் சாதகமாக உள்ளன.

## (IV) பொதுத்துறைக்கும், வேறு சில துறைகளின் ஊழியர்களுக்கும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டமை.

1980 இலிருந்து அரச, அரசு சார்ந்த நிறுவனங்கள் உள்ளூராட்சி சபைகள், பல்கலைக்கழகங்கள், நிதிச்சேவை அலுவலர்கள், அரசு பொறுப்பேற்ற முயற்சிகள், பாரிய கொழும்பு பிரதேச எல்லைக்குட்பட்ட வரிவிடுமுறை அனுபவிக்கும் நிறுவனங்களில் இலங்கையை வதிவிடமாகக் கொள்ளாத ஊழியர்கள், வேறு ஜனாதிபதியால் அல்லது நிதியமைச்சினால் தாபிக்கப்பட்ட சபை அல்லது விசாரணைக்குழு உறுப்பினர்கள் அனைவரும் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டமை கடந்த 10 ஆண்டுகளில் வருமானவரியின் சார்புரீதியான வீழ்ச்சிக்கு காரணமாக உள்ளன. தனியார் துறையின் சம்பளங்களுடன் ஒப்பிடுகையில் அரசதுறை ஊழியர்களின் சம்பளம் சார்பளவில் மிகக் குறைந்ததாக இருப்பதினால் வரிவிலக்களிக்கப்பட்டமை நியாயப்படுத்தப்படுகின்றதாயினும், உண்மையில் இதன் பின்னணியில் ஊன்றிய நலன்கள் இருப்பதாகவே தென்படுகின்றன. எடுத்துக்காட்டாக அரசவங்கிகளை பொறுத்வரையில் அதன் ஊழியர்கள் தனியார் வங்கிகள் அனுபவிக்கும் அதே காசு சம்பளத்தையும், காசல்லாத நன்மைகளையும் , அனுபவித்து வருகின்ற போதிலும் அவர்களும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டமை, அதே தரத்திலுள்ள தனியார் துறை ஊழியர்களை உளவியல் ரீதியாகவே பாதிக்கின்ற செயலாகும்.

இவை தவிர மேலே தெரிவித்த அரச துறையில் உயர்நிலையில் இருப்பவர்களும் மிக உயர்ந்த வருமானத்தைப் பெறுகின்ற போதிலும் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர். 1985 ஆம் ஆண்டின் அரசதுறை, அரசு சார்ந்த துறை ஊழியர்களின் மதிப்பீட்டறிக்கையின்படி, நோக்குகையில் அரசதுறை ஊழியர்களில் 5 சதவீதத்தினரும், அரசு சார்ந்த ஊழியர்களில் 12 சதவீத ஊழியர்கள் மட்டுமே வருமானவரிக்கு உள்ளாகி இருப்பர். இவர்கள் மீது வருமானவரி விதிப்பதில் தவறில்லை. அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை தனியார் துறையின் சம்பள அளவுக்கு உயர்த்தி நாட்டின் வரிவிதிக்கக்கூடிய வருமானம் பெறுகின்ற அனைவர் மீதும் வரிவிதிப்பதன் மூலம் ஓர் ஒப்புரவினை ( equity ) ஏற்படுத்த வேண்டும் என வரி ஆணைக்குழுவின் விதந்துரைப்பாகவும் உள்ளது.

## (V) வரிவீதங்கள் கீழ் நோக்கித் திருத்தப்பட்டமை

பணவீக்கத்திற்கு ஏற்ப வரிவிடு தொகை அதிகரிக்கப்பட்டு வந்தமை ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதுடன், 1980 வரையில் தனிநபர் வருமானம் மீதான எல்லை வீதம் 70 வீதமாக இருந்து படிப்படியாகக் குறைக்கப்பட்டு 1992 – 93 இல் 35 வீதம் ஆக நிர்ணயிக்கப்பட்டுவருகின்றன. இத்தகைய நடவடிக்கைகளும் வருமானவரியின் குறைந்த பங்களிப்புக்கு காரணமாக விளங்குகின்றன.

எல்லை வரி வீதங்கள் உயர்வாக இருந்தால் எதிர் மறையான விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கும். அவை வரி ஏய்ப்புக்கும் வரி தவிர்ப்புகளின் பெருக்கத்திற்கும் ஊக்கமூட்டுவது மட்டுமன்றி வரி சேகரிப்பையும் சீர் குலைத்து விடும். வரி விதிப்புச் சுமையைக் குறைத்தாலே தவிர நாம் துரிதமான பொருளாதார வளர்ச்சியை அடையவே முடியாது என முன்னாள் நிதியமைச்சர் தெரிவித்த கருத்தை கோடிட்டுக் காட்ட வேண்டியுள்ளது.

## (VI) வரிவிடுமுறை, வரி ஊக்குவிப்புக்கள், தகமைக் கொடுப்பனவுகள (Tax Holiday, Tax Incentives, Qualifying Payments )

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவக் கூடிய சில தொழில்களுக்கு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டதன் மூலம்

வரிவிடுமுறை, இதனுடன் இணைந்து வரி ஊக்குவிப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. வரி ஊக்குவிப்பானது 1951 இல் இருந்தே இலங்கையில் வேளாண்மை, வீடமைப்பு, மரபுரீதியற்ற ஏற்றுமதிகள், சுற்றுலாத்துறை, இரத்தினக்கல் கைத்தொழில், இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்கள் போன்றவற்றிற்கும் வழங்கப்பட்டு வந்தன. 1977 இன் பின்னர் தனியார் மயமாக்கத்துடன் கூடிய திறந்த பொருளாதாரக் கொள்கையின் நிமித்தம் வரிஊக்குவிப்பானது பொருளாதார வளர்ச்சியினை எய்துவதற்குரிய இறைக்கொள்கையின் பிரதான கருவியாக வலியுறுத்தப்பட்டுவருகின்றது. இதன் பலனாக வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள், கிராமியக் கைத்தொழில்கள், வீடமைப்பு, ஆதன அபிவிருத்தி, விடுதிக் கைத்தொழில்கள், மகாவலி ஒப்பந்தக்காரர் ஆகிய தொழில்களுக்கும் வரிவிடுமுறையினையும், வரிச்சலுகைகளும் அனுமதிக்கப்பட்டு ஊக்கமளிக்கப்பட்டது.

வரி ஊக்குவிப்பைப் பொறுத்தவரையில் பாரிய கொழும்பு பிரதேச முதலீடுகள் பிரதானமானதாகும். 1978 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பாரிய கொழும்பு சட்டத்திற்கமைய முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் வெவ்வேறு முதலீடுகளுக்கு 5 – 15 ஆண்டுகளுக்கு வரிவிடு முறையும், மேலும் 15 ஆண்டுகளுக்கு குறைந்த வரிவீதத்துடனான வரிச்சலுகைகளையும் குறிப்பிடமுடியும். இந்த ஊக்குவிப்புக்கள் வருமான வரிக்கு மட்டுமல்லாமல் மொத்த விற்பனை வரிக்கும் ஏற்புடையதாகும். இவை தவிர வீடமைப்பு முதலீடு, அங்கீகரிக்கப்பட்ட முயற்சி மூலதனக் கம்பனிகளில் முதலீடு செய்தல், அறநிலையங்களுக்கான நன்கொடை, அரசாங்கத்திற்கு வழங்கும் நன்கொடைகள் போன்ற தகமைக் கொடுப்பனவுகளின் மூலமாகவும் ஊக்குவிப்புக்கள் வழங்கப்படுகின்றன.

இத்தகைய வரி ஊக்குவிப்புக்கள் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு போதிய ஊக்கத்தைக் கொடுத்து உள்நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. 1977 இன் பின்னர் கைத்தொழில்துறை, மரபுரீதியற்ற ஏற்றுமதிகள், உல்லாசப் பயணம், போக்குவரத்து போன்றவை ஓரளவுக்கு அபிவிருத்தியடைந்துள்ளதைக் குறிப்பிடலாம். குறிப்பாக 1978 – 85 வரையிலான காலப் பகுதியில் உயர்ந்த பொருளாதார வளர்ச்சி வீதமாக ஆண்டுக்கு 5.6 வீதமாக இருந்தமையினை குறிப்பிடலாம். அதுமட்டுமன்றி 1977 – 1991 இடையிலான காலப்பகுதியில் மொத்த ஏற்றுமதிகளில் கைத்தொழில் ஏற்றுமதிகளின் பங்கு 14 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக உயர்வடைந்தமையையும் குறிப்பிடலாம். ஆனால் தேவையற்ற துறைகளுக்கான வரிரீதியான ஊக்குவிப்புகளையும், சலுகைகளையும் நீக்குவதன் மூலமே எதிர்பார்த்த பலாபலன்களை அடைய முடியும்.

(அடுத்த இதழில் முற்றும்)

9 ம் பக்கத் தொடர்ச்சி........

### சூழல் முகாமைத்துவம் .....

இத்தகைய பிரதானமான முகாமைத்துவ நோக்கங்கள் ஒவ்வொரு வளங்களையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். அசுத்தமாக்கிகளின் வெளியேற்றம் கட்டுப்படுத்தப்படவேண்டும். அவற்றை மேற்பார்வை செய்ய வேண்டும். சூழல் முகாமைத்துவத்தையும், பேணிப் பாதுகாத்தலையும் அமுல்படுத்துவதற்கான முக்கிய சூழல் கொள்கைகளை சில தூண்டுதல்களினூடாக, சர்வதேச தேசிய மட்டங்களில் அபிவிருத்தியுடன் ஒன்றிணைக்கப்பட வேண்டும். இத்தகைய சூழல் திட்டமிடுதலுக்கும் அறிவுபூர்வமான வரையறைகளுக்கும் ஒதுக்குகள் மிக அவசியமானவை. இலங்கையில் 1980 இல் ஆரம்பிக்கப்பட்ட மத்திய அதிகார சூழல் சபை யானது தேசியரீதியிலும் மாவட்ட மட்டத்திலும் இத்தகைய நோக்கங்களைக் கொண்டிருந்தது. இலங்கையின் சூழல் பிரச்சினைகள் பற்றிய ஒரு விழிப்புணர்வு ஏற்படுவதற்கு இச்சபை காரணமாக இருந்ததுடன் இதுபற்றிய நல்லதொரு சூழலை எதிர் காலத்திலும் ஏற்படுத்துமெனலாம்.

#### உசாத்துணைகள்

1. Andrew Goudie (1981) : The Impact, man's role in Environ mental change.
2. Central Environmental Authority (1983): Environment and Development. Proceedings of a Technical workshop, Colombo.
3. Ehrenfield D.W. (1972): Conserving Life on Earth.
4. Ehrlish P.R. Ehrlich A.H. and Holdren J.P. (1972): Eco-Science, Population Resources and Environment.
5. Encyclopaedia Brittanica:
6. Greenland D.J. and Lan R (1977): Soil conservation and management in the Humid Tropics.
7. John Blunden, Peter Haggett, Christopher Hamnett and Philip saree (1979): Fundamentals of Human Geography: A Reader.
8. Peter Haggett (1979): Geography: A modern synthesis
9. William I. Thomas Jr. (1956): Man's Role in changing the face of the Earth.
10. Sri Lanka Foundation Institute (1978): Environmental Protection and management Report.
11. IUCH - UNEP- WWP (1980): World conservation strategy.

மார்க்கம் இதழைப் பெற விரும்புபவர்கள்
தொடர்பு கொள்க-

திரு.T. தம்பையா
விரிவுரையாளர்
பொருளியல்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்
50,புதிய வீதி
மட்டக்களப்பு

# நடேசய்யர் காலம்முதல் இலங்கைப் பெருந்தோட்டத்துறையின் சமூக - பொருளாதார உருமாற்றம் : ஒரு கண்ணோட்டம்.

வி. நித்தியானந்தன்

## அறிமுகம்

நடேசய்யர் காலம் என்பது இக்கட்டுரையைப் பொறுத்தவரை அவர் இலங்கையில் வாழ்ந்து செயற்பட்ட 1920 – 1947 காலப் பகுதியைக் குறித்து நிற்கின்றது. அய்யரின் சாதனைகளைப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்துள்ள சாரல் நாடன் இக்காலகட்டத்தை "அவரது சகாப்தம்" (1988 ; 17) என்றே அழைக்கின்றார். எனினும் அய்யர் சாதனைகள் புரிவதற்குக் களம் அமைத்துக் கொடுத்த பல நிகழ்வுகள் இக்கால கட்டத்தில் இடம் பெற்றனவென்பது முக்கியமாகக் கருத்திற் கொள்ள வேண்டியதொன்றாகும். இவை ஏற்படுத்திய அரசியல், பொருளாதார, சமூகப் பின்னணியில் தான் நடேசய்யரின் பங்களிப்புத் தனித்துவத் தன்மை மிளிர முடிந்தது.

இக்கட்டுரையின் நோக்கம் இவ்வாறான அரசியல், பொருளாதார சமூக அம்சங்களை இனம் கண்டு, அவற்றை விரிவுபடுத்துவதோ அல்லது அவை தொடர்பாக நடேசய்யரின் பங்களிப்பினை எடுத்துக்கூறி அதனை விமர்சிப்பதோ அன்று. அதற்குப் பதிலாக அய்யரின் செயற்பாட்டினை அரவணைத்த இவற்றின் ஒருமித்த தாக்கம் பொதுவாக இலங்கையின் அரசியற் பொருளாதாரத்தைப் பொறுத்த வரையிலும், குறிப்பாக அதன் பெருந்தோட்டத் துறையைப் பொறுத்தவரையிலும் எவ்வாறு அமைந்திருந்ததென்பதை எடுத்து விளக்கி அய்யரின் காலத்துக்குப் பின் அவை எவ்வாறு உருமாற்றம் அடைந்துள்ளன, இன்னமும் அடைந்து கொண்டு வருகின்றன என்பதைச் சுட்டி அது தொடர்பான வளர்ச்சிகளையும் ஆராய்வதேயாகும். சுருக்கமாகக் கூறின், நடேசய்யர் முகம் கொடுத்த பிரச்சினைகளின் தன்மையையும், அவற்றின் உருமாற்றச் செய்முறை அவரது காலத்திலும் அவரது காலத்துக்குப் பின்பும் எத்தகைய போக்கினைக் கொண்டதென்பதையும் முன்வைப்பதே கட்டுரையின் நோக்கம் எனலாம்.

## காலமும் கருத்தும்

நடேசய்யர் காலத்தை ஒட்டு மொத்தமாகக் குறிப்பிடுவதாயின் இலங்கையைச் சுதந்திரம் நோக்கி முன்னெடுத்துச் சென்ற காலப் பகுதியெனக் குறிக்கலாம். ஆனால் இவ்வாறு கூறுவதிலிருந்து அரசியல் மட்டச் சம்பவங்கள் யாவும் இந்தியாவைப் போன்று இலங்கையையும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தனவென நாம் கருதுவோமாயின் அது முற்றிலும் சரியானதென்று கூற முடியாது. குடியேற்றநாட்டுவாத வரையறைக்குட்பட்ட இலங்கை அரசியலானது மிதமான தன்மை கொண்டிருந்ததுடன் ஒரு நேரான பாதையில் முன்னேறிச் செல்வதொன்றாகவும் விளங்கியிருந்தது. (நித்தியானந்தன், 1989; 36 – 40). ஆகவே அய்யரின் அரசியல் மட்டப் பங்களிப்பு இந்தப் பாதையிலிருந்து விலகிச் செல்வதொன்றாக அமைந்துவிட முடியவில்லை. அவரது திறமை, ஆளுமை என்பன அதனை மீறிச் செல்லக் கூடிய சக்தி படைத்தவையாக இருக்கவில்லை. எனினும் பெருந்தோட்டத் துறையில் அய்யரின் சாதனையை நிர்ணயிப்பதில் தேசிய மட்ட அரசியற் போக்குத் தனது செல்வாக்கினைச் செலுத்தியிருந்தமை கருத்திற் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். அதனைத் தெளிவுபடுத்த முற்படும் போது அய்யரின் அரசியல், தொழிற் சங்க மட்டச் செயற்பாடுகளின் தன்மை பற்றி அறிந்து கொள்வது அவசியமாகின்றது.

நடேசய்யரின் செயற்பாடுகளின் அடிநாதமாகத் திகழ்ந்தது அவர்தம் கருத்துக்களின் முன்னேற்றகரமான போக்காகும். அதன் காரணமாக அவை அக்காலத்தில் நிலவியிருந்த எண்ணப் போக்குகளிலிருந்து முரண்பட்டிருந்ததுடன் புரட்சிகரத் தன்மை கொண்டிருந்தன எனக் கூறுவதிலும் தவறில்லையெனலாம். அதன் காரணமாகச் சாரல் நாடன் கூறுவது போல "அவரை யாரும் விளங்கிக் கொள்ளவில்லை" (1988; 151) அல்லது அவரை "விளங்கிக் கொள்ளும் சக்தி மக்களுக்கு அந்த நேரத்தில் இல்லை" (1988 ; 97).

அய்யரின் புரட்சிகரத் தன்மையுடன் கலந்த முன்னேற்றகரமான சிந்தனைகளைப் பல நிலைகளில் எடுத்துக் காட்ட முடியும். சாரல் நாடானின் நூல் முழுவதுமே இவை சிதறுண்டு கிடப்பதையும் சுட்டிக்காட்டுதல் பொருத்தமானது. அரசியல் ரீதியாக, டொனமூர் ஆணைக்குழு இலங்கைக்குச் சர்வசன வாக்குரிமையைப் பரிந்துரை செய்தபோது பொன்னம்பலம் இராமநாதன் போன்றவர்கள் அதனை வன்மையாக எதிர்த்த போதும் அய்யர் அதனை ஆதரித்து நின்றார். அதையும் விட முக்கியமாக இந்தியரின் நலன் பேணுவதில் அவர் காட்டிய அக்கறை தேசிய நீரோட்டத்துடன், இணைந்த தொன்றாக வெளிப்பட்டமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இந்திய உணர்வு இலங்கையுடன் பின்னிப் பிணைந்ததொன்றாயிருக்க வேண்டுமென்று அவர் கருதியதுடன், அதனை நடைமுறைப்படுத்தும் வகையிற், சிங்களத் தலைவர்களுடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென்பதிலும் அய்யர் கரிசனை காட்டினார். ஏ.ஈ குணசின்ஹாவுடன அவர் ஏற்படுத்திக் கொண்ட தொடர்பு இதனை நிரூபிக்கும் வகையிலேயே அமைந்திருந்தது. பின்பு இலங்கை அரசியலில் இனவாதம் நிரந்தரமான ஓர் இடத்தைப் பிடிக்கலாம் என்பது ஓரளவு உறுதியான போது இந்திய சமூகத்தவருக்கான ஒரு தற்பாதுகாப்பு நடவடிக்கையாக அவர் இலங்கைத் தமிழரை அரவணைக்கும் முறையிற் செயலில் இறங்க முனைவதையும் காணலாம். இவ்வகையிலேயே 1947 ஆம் ஆண்டு எஸ்.ஜே.வி செல்வநாயகத்துடனான தொடர்புக்கு அடியெடுத்துக்

வி. நித்தியானந்தன்,
B.A (Hons) Cey; Ph.D (R'dg).
விவசாயப் பொருளியல் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

கொடுப்பதாக அமைந்த தமிழரசுக் கட்சியின் சுதந்திரன் பத்திரிகையிற் சேருவதற்கு இணக்கம் தெரிவித்தமை நோக்கப்பட வேண்டும் (சாரல்நாடன் 1988 : 174 ). இங்கு முக்கியமாக வலியுறுத்தப்பட வேண்டிய தென்னவெனில் அய்யர் இந்தியத் தோட்டத் தொழிலாளர், தமது தனித்துவத் தன்மையின் மத்தியிலும், இலங்கையின் ஏனைய சமூகங்களிலிருந்து பிரிக்கப்பட்டு அல்லது விடுபட்டுத் தனிமைப்படுத்தப்படக் கூடாதென்ற எண்ணம் கொண்டிருந்தமையாகும். அவரது இந்த சிந்தனையோட்டமே அவர் முன்னோடியாகச் செயற்பட்ட தொழிற் சங்க மட்டத்திலும் பிரதிபலித்தது. 1931 ஆம் ஆண்டு நடேசய்யரால் நிறுவப்பட்ட அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சம்மேளனம் (All Ceylon Estate Labour Federation) கூடியளவுக்குத் தேசிய மட்டத் தொழிற் சங்கங்களை அண்மித்து அதிகளவு நகரம்சார் தன்மையையும் பெற்றிருந்தது. (Thondaman. 1987 :101) பிரித்தானியப் பெருந்தோட்ட முதலாளிமாரின் எதிர்ப்பு நடவடிக்கைகளுடன் சேர்ந்து அதன் இவ்வாறான தன்மையே 1933 அளவிற் சம்மேளனம் முற்றாகத் தடைப்படுவதற்கும் காலாயிற்று (Ibid : 102) தொழிற் சங்க அலுவல்களுக்குப் புறம்பாக, இந்தியத் தொழிலாளர் நன்மையைக் கருத்திற் கொண்டு அவர் இயங்கிய முறைமையிலும் சில புதுமையான சிந்தனைகளை இனம் காண முடியும். ஒரு புறம், தோட்டங்களில் மேலும் இந்தியர் குடியேறுவதைத் தடுப்பதன் மூலம் ஏற்கனவே உள்ளவர்களின் மதிப்பும் தேவையும் உயர்வடையுமென்ற கருத்தை முன் வைத்ததுடன், மறுபுறம், ஒவ்வொரு தோட்டத்திலும் ஒரு குறிப்பிட்ட வீதாசாரம் வரை (25 சத வீதம்) சிங்களத் தொழிலாளரை வேலைக்கமர்த்துவது இந்தியத் தொழிலாளரின் நலனை மேம்படுத்தக் காலாகுமெனவும் நம்பினார் (சாரல் நாடன், 1988 :-153) . அய்யரின் மாறுபட்ட சிந்தனையோட்டத்தில் இன்னொரு பரிமாணமாக இந்திய நலன் பேண விழையும் ஒருவர் இந்தியராகக் காணப்பட்ட அனைவருக்கும் சார்பான ஒரு கொள்கையை பின்பற்றுவதென்பதினின்றும் வழுவி (இந்தியரான) கங்காணிமாரின் சுரண்டல் நடவடிக்கைகளை அம்பலப்படுத்துவதையும் காணலாம்.

நடேசய்யரின் பங்களிப்பை நெறிப்படுத்திய மேற்கூறியவாறமைந்த சிந்தனையோட்டங்கள் இன்றைய சூழலிற் பெரிதும் அர்த்தம் நிறைந்தவை என்பதுடன் தர்க்க ரீதியானவையென்றும் கூறலாம். ஆனால் அய்யர் இயங்கிய ஏறக்குறைய அரை நூற்றாண்டு க்கு முந்திய காலச் சூழலில், குறிப்பாகத் தரப்பட்ட பெருந்தோட்டங்களின் பின்னணியில் அவை எடுபட முடியவில்லை. அதனால் ஈற்றில் அவை அய்யரின் தோல்வியாகப் பரிணமித்தன. இத்தகைய தோல்விக்கு அய்யர் இந்தியத் தொழிலாளியின் வாழ்க்கையுடன் இணைந்து தமது அலுவல்களை நெறிப்படுத்தாமை, தோட்ட முதலாளி வர்க்கத்தின் எதிர்ப்பு நடவடிக்கைகள் (Thondaman 1987: 101 - 102) பொருளாதார மந்தம், பீறிட்டெழுந்த இந்திய உணர்வு (சாரல் நாடன் 1988 ; 96), ஆலோசனைகளின்றித் தான் நினைத்தபடி இயங்கும் அய்யரின் போக்கு (வேலுப்பிள்ளை, 1988 : 8) போன்ற பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. இவை யாவும் அய்யரின் வீழ்ச்சிக்குத் தமது பங்களிப்பினைச் செலுத்தியிருந்தனவென்பது உண்மையாயினும் இவை அனைத்துமே மேலோட்டமான முறையிலமைந்த காரணங்களென்றே கொள்ள வேண்டும். இவற்றை விட அடிப்படைத் தன்மை வாய்ந்த காரணம் இலங்கையின் அரசியற் போக்கிலிருந்து ஊற்றெடுக்கிறதெனலாம். இந்தியத் தொழிலாளரின் சமூகப் பின்னணி, இந்திய அரசியல் என்ற இரண்டும் இந்த மூல காரணத்தை மேலும் பலப்படுத்த உதவியிருந்தன.

## இழுவை உந்தற் காரணிகளின் செயற்பாடு

இந்தியரின் தனித்தவத்தைப் பேணுகின்ற அதே நேரத்தில் அவர்களைத் தேசிய நீரோட்டத்துடன் இணைத்து இலங்கை அரசியலின் ஒரு பகுதியாக்க வேண்டுமென்ற எண்ணம் கொள்கையளவிற் சிறந்ததொன்றாயிருந்த போதும் அதனை நடைமுறைப்படுத்துவது என்பது அத்துணை இலகுவானதொன்றாயிருக்கவில்லை. அதற்கான முக்கிய காரணம் யாதெனில், இந்தச் செய்முறைக்கு அவசியமாயிருந்த "இழுவை" "உந்தற்" சக்திகள் தோட்டத் தொழிலாளரைப் பொறுத்தவரை போதியளவு பலம் வாய்ந்தவையாயிருக்கவில்லை என்பதாகும்.

அய்யர் இந்தியத் தொழிலாளரை ஒருங்கிணைக்க விரும்பிய இலங்கையின் தேசிய அரசியலானது மிதமான போக்கினைக் கொண்டிருந்ததென்பது ஏற்கனவே குறிக்கப்பட்டது. சுதந்திரம் கருதிய அரசியற் சீர்திருத்தக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டது என்பது என்னவோ உண்மையாயினும் அவை கூடியளவு எச்சரிக்கையுடன் ஓரளவு பழமைத் தன்மையும் கலந்து தீவிரம் குறைந்தவையாகவும் அதிகளவு கிளர்ச்சிப் போக்கற்றவையாகவும் விளங்கியிருந்தன. பிரித்தானியாவுடன் பொருதுவதன் மூலமன்றி அதனுடைய ஆதரவைப் பெற்றே இலங்கை டொமினியன் அந்தஸ்த்தை அடைய வேண்டுமென்பதும், அவ்வகையில் இலங்கை, இந்தியாவையன்றிப் பேரரசின் குடியேற்ற நாடுகளாகிய கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்றவற்றையே தனக்குரிய எடுத்துக் காட்டாகக் கொள்ள வேண்டுமென்பதும் தான் இலங்கை அரசியல் தலைமை கொண்ட கொள்கைகளாக அமைந்தன. இவ்வாறானதோர் அணுகுமுறையின் பலாபலன் எவ்வாறு அமைந்திருந்தாலும், ஓர் அணுகுமுறை என்ற அளவில் அது மிகக் குறைந்த கவர்ச்சித் தன்மை கொண்டதொன்றென்பது கருத்திற் கொள்ளத் தக்கது. அது ஓர் உயர் மட்டதிற் கைக்கொள்ளப்பட்ட "உயர் குழாம்" அரசியலாகவே விளங்கியிருந்தது. சாதாரண குடி மக்களைக் கவரக் கூடிய தன்மையை அது பெற்றிருக்கவில்லையென்பது மாத்திரமன்றி அவர்கள் எதிர் நோக்கிய பிரச்சினைகள் அவ்வரசியலுக்கான கருப்பொருளாக மாறிவிடக் கூடிய வாய்ப்புக்களும் மிகக் குறைவாகவே தென்பட்டன(1). ஆகவே இலங்கையின் சுதந்திரம் நோக்கிய அரசியற் செயற்பாடுகள் தேசியத் தன்மை பொருந்தியவையென வர்ணிக்கப்பட்டாலும் அவை இலங்கை மக்கள் முழுப் பேரையும் அரவணைக்கவில்லையென்பது இன்று பலராலும் ஏற்றுக் கொள்ளப்படும் ஒரு வரலாற்று உண்மையாகும். முக்கியமாக இலங்கையின் குடியான்கள் வர்க்கம் நாட்டின் உயர் குழாம் அரசியலுடன் தன்னை எவ்வகையிலும் இணைத்துக் கொள்ள முன்வரவில்லை ( பார்க்க Moore,1985). ஆகவே இலங்கைக் குடியான்கள் வர்க்கத்தின் நிலைமையே இதுவென்றால் அவர்களை விடத் தரத்திற் குறைந்திருந்த இந்தியத் தோட்டத் தொழிலாளர் எங்ஙனம் தேசிய அரசியலை நோக்கிக் கவரப்பட முடியும் ? தங்களது பிரச்சினைகள், குறைபாடுகள் என்பவற்றுக்கு இடமளிக்கப்படாத அரசியல் நோக்கி எந்த ஒரு சாராரும் இழுக்கப்படுவார்களென எதிர்பார்க்க முடியாது. அவர்களது போராட்ட முறைகள், வடிவங்கள் என்பன தமக்குப் பயன்படக் கூடிய கவர்ச்சித் தன்மை பெற்றிருந்தால் குறைந்தது அவற்றைத் தாம் பயன்படுத்துவது பற்றியாவது அவர்கள் சிந்தித்திருக்க முடியும். ஆனால் இவையிரண்டுமில்லாத நிலையில் தென்னிந்திய சமூகத்தவர் சிங்களத் தலைவர்களுடன் நெருங்கியும் சிங்கள மக்களுடன் இணைந்தும் வாழ வேண்டுமென அய்யர் வெளியிட்ட கருத்துக்கள், தோட்டத் தொழிலாளரைக் கவராததில் வியப்பில்லை. அவை, மாறாக ஒரு வகைச் செயற்கைத் தன்மை கொண்டவையாகவே ஒலிக்க முடிந்தன.

மறுபுறம், இந்தியத் தொழிலாளர் (உயர் குழாம்) தேசிய அரசியல் நோக்கி உந்திச் செல்லப்படுவதற்கும் வாய்ப்பிருக்கவில்லை. அதன் கருத்து அரசியல் மட்டச் சர்ச்சைக்குட்படக் கூடிய பிரச்சினைகளெதுவும் அவர்கள் மத்தியிலிருக்கவில்லையென்பதல்ல. அதற்கு முற்றிலும் முரணாக அரசியல் மட்டத்திற் பிரஸ்தாபிக்கப்படக் கூடிய, பிரஸ்தாபிக்கப்பட வேண்டிய பிரச்சினைகளினால் மூழ்கடிக்கப்பட்டதாகவே அவர்களுடைய வாழ்க்கை அமைந்திருந்தது. ஆனால் அவற்றை அந்த மட்டத்திற்கு எடுத்துச் செல்லக் கூடிய சக்தியோ தராதரமோ அவர்களுக்கிருக்கவில்லையென்பதே முக்கியமானதாகும். தென்னிந்திய தோட்டத் தொழிலாளரின் அரைகுறை அடிமை வாழ்க்கை நிலையில் (2) அவர்கள் தமது குறைபாடுகளை உணர்வதற்கோ அல்லது அவற்றிற்கான தீர்வுகளை நாடுவதற்கோ உரிய தகைமையை எவ்வகையிலும் பெற்றிருக்கவில்லை. அதற்கான வாய்ப்புக்களை வழங்காது தடுப்பதிலும் தோட்ட முகாமை கூடியளவு அக்கறை எடுத்துக் கொண்டிருந்தது. அய்யர் கிளர்ந்தெழுந்த கங்காணி முறைமை இத்தகைய தடுப்பு நடவடிக்கைகளுள் முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாயிருந்தது. அதனால் தான் அய்யர் கூடத் தொழிலாளரின் பிரச்சினைகளையும் குறைபாடுகளையும் வெளிக் கொணருவதற்கான தனது முயற்சியின் முதற் கட்டத்திற் கங்காணி முறை நோக்கித் தமது கவனத்தைத் திருப்பவேண்டி நேர்ந்தது. இவ்வகையிற் கங்காணி முறைமை தோட்டத் தொழிலாளர் எதிர்நோக்கிய பிரச்சினைகள் தோட்ட எல்லையை விட்டு அதற்கப்பாற் செல்வதைத் தடுத்திருந்தது. அதன் மூலம் தொழிலாளருக்குத் தேவைப்பட்ட உந்தற் சக்தி கிடையாது போல் விட்டதெனலாம்.

இவ்வாறான "இழுவை" "உந்தல்" என்ற இரு வகைச் சக்திகளும் அவர்கள் வாழ்ந்திருந்த இலங்கைச் சூழலில் மறுக்கப்பட்ட பின்னணியில், தொழிலாளர் பிறந்திருந்த இந்தியச் சூழல் இவையிரண்டையும் போதியளவில் வழங்குவதொன்றாயிருந்தது. இவ்வகையில் இழுவைச் சக்திக்கான முக்கிய தூண்டுதல் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் வழி ஏற்படுவதாயிருந்தது. இந்திய சுதந்திரப் போராட்டம் வெளிப்படுத்திய தீவிரத் தன்மையும் அதற்குப் பெரிதும் பொறுப்பாயிருந்து செயற்பட்ட இந்திய அரசியல் தலைமையுமே இது விடயத்திலான முக்கிய கவர்ச்சி அம்சங்களாகும். 1923 – 1939 க்குமிடைப்பட்ட காலத்தில் இலங்கையிலிருந்த தோட்டங்களுக்கும் தென்னிந்தியாவிலிருந்த கிராமங்களுக் குமிடையிலான தொடர்புகள் பெருமளவு பலம் பெற்றிருந்த நிலையில் (Kurian 1989:249) இலங்கையின் தோட்டத் தொழிலாளர் இவ்வளர்ச்சிகளினாற் பாதிக்கப்படுவதற்குக் கூடியளவு வாய்ப்பு ஏற்பட்டது. எனவே அய்யர் எதனை விரும்பவில்லையோ அதுவே தோட்டத் தொழிலாளர் மத்தியில் வளர்ந்து செல்ல முற்பட்டிருந்தது. அதாவது அவர்கள் அதிகளவுக்கு இந்தியாவின் பக்கம் சாய்ந்து, இந்தியத் தலைமையையே பெருமளவுக்கு மதிக்கவும் தலைப்பட்டனர். சாரல் நாடன் தமது வார்த்தைகளிற் (சாரல் நாடன் 1988 – 99) பின்வருமாறு கூறுகிறார்.

*"இந்தியத் தலைவர்களைத் தெய்வமாகக் கருதியவர்கள் தோட்ட மக்கள். அண்ணல் காந்தி, பண்டிட் ஜவஹர்லால் நேரு, நேதாஜி ஆகியோரின் உருவப்படங்களை தெய்வப்படங்களோடு இணையாகப் படம் போட்டுப் பூஜித்தார்கள் அந்த மக்கள். அய்யர் அந்த முறையில் பொது ஜனங்களின் ஆதரவை இழக்கத் தொடங்கினார்".*

இது தோட்டத் தொழிலாளரின் போக்கையும் அய்யரின் வீழ்ச்சிக்கான ஆரம்பத்தையும் ஒருங்கே படம் பிடித்துக் காட்டுவதாயுள்ளது.

எனவே அய்யர் முன்னோடியாகவிருந்து செயற்பட்ட சர்வசன வாக்குரிமை, தொழிற் சங்க நிர்மாணம் என்பன அவர் கொண்ட அடிப்படை கொள்கைக்குரிய சுதேசிய கவர்ச்சிப் பரிமாணம் இல்லாத காரணத்தினால் அவருக்கெதிராகவே செயற்பட ஆரம்பிக்கும் ஒரு போக்குத் தென்படலாயிற்று. அதே நேரத்தில் அதனை நன்குணர்ந்து இழுவைக் காரணியைச் சரியானபடி பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட நிறுவனங்கள் தொழிலாளர் மத்தியில் நன்கு வளர்ச்சி பெறுவதைக் கண்டு கொள்ள முடியும். குறிப்பாகச் சொல்வதாயின் 1939 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கை இந்தியக் காங்கிரஸ் இந்திய அரசியல் தலைவர்களின் ஆசியுடன் தொடங்கப் பெற்றது மாத்திரமன்றி (சாரல் நாடன் 1988 : 99) தொழிலாளரின் இந்தியப் பரிமாணத்தைத் தனக்குச் சாதகமாக எப்போதுமே பயன்படுத்திக் கொண்ட காரணத்தினால் அவர்கள் மத்தியில் காங்கிரஸ் தொழிலாளர் சங்கம் (Ceylon Indian congress Labour Union) "தோட்டத் தொழிலாளரின் பிரதான சாராரை ஊடறுத்துப் பலம் வாய்ந்த தொழிற் சங்க இயக்கமொன்றை உருவாக்க முடிந்தது......" (Thondaman 1987 : 117) எனக் குறிக்கப்படும் போது இதுவே வலியுறுத்தப்படுகின்றதெனலாம்.

எனினும் எம்மைப் பொறுத்தவரை முக்கியமானதென்னவெனில் தென்னிந்தியத் தோட்டத் தொழிலாளரைத் தனியொரு பிரிவினராகக் கணித்து அவர்களைத் தேசிய ரீதியான ஒரு பார்வைக்குப் புறம்பாக வைத்திருப்பதை இது உறுதிப்படுத்துவதாயிருந்தது. அதனை மேலும், வசதிப்படுத்துவதாக அமைந்தது, இலங்கையின் புறத்திலிருந்து ஊற்றெடுத்த உந்தற் காரணியாகும். இந்தக் காரணியே இலங்கைத் தொழிற் சங்க மட்டத்தில் அறிமுகமாகியிருந்த இலங்கையர்மயமாக்கக் கொள்கையாகும்.

இலங்கையில் இடப்படுத்தப்பட்ட பொருளாதார அலுவல்களில், முக்கியமாக வேலை வாய்ப்புக்களைப் பொறுத்த வரை, இலங்கையருக்கு முதன்மையான இடம் வழங்கப்பட வேண்டுமென்பதே இலங்கையர்மயமாக்கக் கொள்கையின் பிரதான சுலோகமாயிருந்தது (விபரங்களுக்கு Kodikara, 1965 : 89 - 92. 190 - 195). இதிலிருந்து நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடிகளே இக்கொள்கைக்குரிய மூல காரணமென்பதை அறிந்து கொள்ள முடியும். 1920 களின் இறுதியளவிலிருந்து அறிமுகமாகிய இலங்கையர்மயமாக்கக் கொள்கை பொருளாதார நெருக்கடிகள் அதிகரித்துச் சென்றதற்கேற்ப இறுக்கமடைந்து கொண்டு செல்லலாயிற்று. ஆகவே, 1930களில் இடம் பெற்ற பொருளாதாரப் பெருமந்த காலத்தில் அது உச்ச நிலை அடைவதென்பது முற்றிலும் எதிர்பார்க்க கூடியதொன்றாகவே இருந்தது. தொழில் வாய்ப்புகளில் ஏற்பட்ட கூரிய வீழ்ச்சி மந்தத்தின் நேரடிப் பலாபலனே என்பதையும், அதற்குரிய தீர்வு பொருளாதார மட்டத்திலிருந்தே தோன்ற வேண்டுமென்பதையும் கருத்திற் கொள்ளாது, கிடைக்கக் கூடிய தொழில் வாய்ப்புகளைச் சிங்கள மக்களுக்கென ஒதுக்கீடு செய்து இலங்கையிலிருந்த இந்தியருக்கு அவற்றை மறுப்பதே இலங்கையர்மயமாக்க கொள்கையினதும் அதனைப் பிரபல்யப்படுத்திய தொழிற் சங்கங்களினதும் பிரதான குறிக்கோளாயிருந்தது (விபரங்களுக்கு நித்தியானந்தன், 1989 : 101 -112). தோட்டத் தொழிலாளரைப் பொறுத்தவரை இக்கொள்கை அவர்களுடைய தொழில் வாய்ப்புக்களின் மீது எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தாத போதும், தொழிலாளருக்கு நிலம் வழங்கும் நடவடிக்கையை முற்றாகவே தடுத்துவிடக் கூடியளவுக்கு அது தாக்கம் நிறைந்ததொன்றாயிருந்தது ( Ibid : 114 - 117).


கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்திற்கு
திரு.

## தோல்வியின் தன்மை

மேற்கூறியவற்றிலிருந்து வெளிப்படும் ஓர் உண்மை யாதெனில் நடேசய்யர் கொண்ட கொள்கையின் தோல்வி எவ்வகையிலும் ஒரு தனி மனிதனின் தோல்வியாகக் கருதப்படக் கூடாதென்பதேயாகும். அது அக்கால இலங்கையின் அரசியற் பொருளாதாரப் போக்கின் ஒரு பரிமாணம் என்பது வலியுறுத்தப்பட வேண்டும். இப்பரிமாணத்தின் ஆரம்பம் இக்கால கட்டமளவில் நாட்டின் தொழிற் சங்க வளர்ச்சியிற் பிரதிபலித்து இலங்கையிலிருந்த இந்தியருக்கெதிரான கொள்கையாகப் பரிணமித்திருந்தது. அதனை இலங்கையின் புதிய அரசியற் பொருளாதாரப் பரிமாணத்தின் முதலாவது கட்டம் என்றும் வர்ணிக்க முடியும். அதன் இரண்டாவது கட்டம் 1950 களின் நடுப்பகுதியளவில் ஆரம்பித்து இலங்கைத் தமிழருக்கெதிராக திருப்பி விடப்படுவதாயிருந்தது. அந்நிலையில் இலங்கையிலிருந்த இந்தியரினதும் குறிப்பாகப் பெருந்தோட்டத் தொழிலாளரினதும் பங்கு மாறுபட்ட ஒரு தன்மையை அடைவதைக் காணலாம்.

நாம் குறிப்பிடும் புதிய அரசியற் பொருளாதாரப் பரிமாணத்தின் முதலாவது கட்டத்தில் நடேசய்யர் மேற்கொண்ட முயற்சிகளின் மத்தியிலும் தென்னிந்தியத் தோட்டத் தொழிலாளர், "இந்தியமயவாக்கத்துக்கு" உட்படுகின்ற ஒரு போக்கும், மறுபுறம், பல்வேறு மட்டங்களிலும் காணப்பட்ட இலங்கைத் தொழிலாளர் "இலங்கையர்மயவாக்கத்துக்கு" உட்படுகின்ற ஒரு போக்கும் சமகால வளர்ச்சிகளாக ஏற்பட முற்பட்டிருந்தன. ஒரு சமூக மட்டத்தில் இவை இயல்பான வளர்ச்சிகளென இனம் காணப்பட முடிந்தாலும் இலங்கையின் அரசியற் பொருளாதார வளர்ச்சியைப் பொறுத்தவரை இவை விரும்பத் தகாதவையென்பதுடன் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்த வல்லனவாயுமிருந்தன. நடேசய்யருக்கும் ஏ. ஈ குணசின்ஹாவுக்குமிடையே உண்டான பிளவு இது விடயத்திலான பிரிநிலைக் கோடாக அமைகின்றதெனலாம். இந்த முதலாவது கட்டத்தின் உச்ச நிலையாகவே 1948 – 1949 காலப் பகுதியில் இலங்கையிலிருந்த இந்திய வம்சா வழியினரின் குடியுரிமை பறிக்கப்பட்டு அவர்களை நாடற்றவராக்கும் செய்முறை அமைந்திருந்தது. இலங்கை பெற்றுக் கொண்ட அரசியற் சுதந்திரம் கூடியளவு விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையைத் தோற்றுவிப்பதற்குப் பதிலாக இலங்கையரும் இந்தியரும் தனித் துருவங்கள் என்ற எண்ணப்பாடு இறுக்கமடைவதற்கு வழி வகுத்ததென்பதையே இது எடுத்துக்காட்டியது(3). இந்நிகழ்வு இடம் பெற்ற சந்தர்ப்பத்தில் நடேசய்யர் மறைந்து விட்டிருந்த போதிலும் அவரது கொள்கைகளின் தோல்வியை இதுவே பூரணப்படுத்தி வைக்கின்றதெனலாம்.

இவ்வாறாக ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்திருக்கும் நடேசய்யரின் தோல்வியும் புதிய அரசியற் பொருளாதாரப் பரிமாணமும் பெருமளவுக்குப் பொருளாதாரக் காரணி களினாலேயே வழி நடாத்தப்பட்டுள்ளனவென்பது முக்கியமாகக் குறிப்பிட வேண்டியதொன்றாகும். முதற் கண், குடியேற்ற நாட்டுவாதப் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றும் முகமாகவே தென்னிந்தியர் தோட்டத் தொழிலாளராகக் கொண்டு வரப்பட்டதுடன் அவர்கள் வாழ்ந்திருந்தது போன்ற குறைந்த வாழ்க்கை மட்டத்திலும் பேணப்பட்டிருந்தனர்(4). இவ்வாறான பொருளாதார வளர்ச்சி குடியேற்ற வல்லரசுக்கு நன்மையைப் பெற்றுக் கொடுத்த அளவுக்குச் சுதேசியப் பொருளாதாரத்தை மேம்படுத்தாத நிலையில் அது நெருக்கடிக்குட்படுவது தவிர்க்க முடியாததாயிருந்தது. குறிப்பாக முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சியின் ஒரு பகுதியாகிய வர்த்தகச் சகடவோட்ட மாறுபாடுகளின் மந்த கட்டத்தில் இந்நெருக்கடிகள் கூடியளவு தாக்கம் நிறைந்தவையாக விளங்கின. இவ்வாறானதொரு பின்னணியில் நாட்டுக்குப் புறம்பான அந்நிய சாராரின் குழுவொன்று இனம் காணப்பட முடிந்த போது பொருளாதாரப் பின்னடைவுக்கு அவர்களைப் பலிக் கடாக்களாக்கிச் சுதேசிகள் தமது பொருளாதார நன்மைகளைத் தக்க வைக்கும் ஒரு போக்குத் தோன்றியிருந்தது. இத்தகைய ஒரு போக்கின் மத்தியில் நடேசய்யரின் தோல்வி எவ்வகையிலும் ஆச்சரியத்துக்குரியதொன்றல்ல.

## தோல்வி விரிவாக்கம்

ஆனால் நடேசய்யரின் தோல்வி இலங்கையிலிருந்த தோட்டத் தொழிலாளருடனும் ஏனைய இந்திய சமூகத்தவருடனும் மாத்திரம் நின்றுவிடாது மேலும் வியாபித்து நாட்டின் பிற சாராரையும் தனிமைப்படுத்தும் ஒரு செய்முறைக்கு இடமளித்திருந்தமையே இலங்கையின் அரசியற் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய அம்சமாகும். அதனையே அரசியற் பொருளாதாரப் பரிமாணத்தின் இரண்டாவது கட்டம் என நாம் குறித்தோம். இது எவ்வாறு ஏற்பட்டதென்பதை ஆராய்வது இந்தக் கட்டுரையின் நோக்கிற்கு அப்பாற் பட்டதென்பதுடன் அது வேறாக ஆராயப்பட்டும் உள்ளது. (நித்தியானந்தன், 1989). எனினும் அது இலங்கைக்கே உரித்தான அரசியல், பொருளாதாரக் காரணங்களினாற் பெருமளவு நிர்ணயிக்கப்பட்டதொன்றென்பதைச் சுட்டிக் காட்டுதல் பொருத்தமானது.

அரசியல் ரீதியாக நாம் ஏற்கனவே குறித்த இலங்கையின் பெருமளவு அலட்டிக் கொள்ளாத படிமுறைத் தன்மை கொண்ட வளர்ச்சிப் போக்கும் அதனை உயர் குழாமினரே நெறிப்படுத்தியமையும் நாட்டின் சுதந்திரத்தை எந்த வகையிலும் தீவிர முறிவைக் கொடுக்கும் ஒரு நிகழ்வாகவன்றி மிகச் சாதாரண ஓர் அரசியல் நிகழ்வாகவே ஆக்கிவிட்டிருந்தன. அதனையே எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்கா "ஒரு நாள் நாம் கண் விழித்த போது "நீவிர் இப்போது ஒரு டொமினியன்" என எமக்குக் கூறப்பட்டது." (மேற்கோள் (Ludowyck: 1966: 204) எனக் குறித்தார். அதன் முக்கியமான தாற்பரியம் யாதெனில் நாட்டின் பெருமளவான மக்களை ஈடுபடுத்தாது உயர் குழாமினருக்கும் குடியேற்ற வல்லரசுக்குமிடையே ஏற்பட்ட அரசியல் இணக்கமே சுதந்திரத்திற்கு இட்டுச் சென்றதென்பதேயாகும். ஆனால் இந்த அரசியல் இணக்கம் அவர்களுக்கிடையிலான பொருளாதார இணக்கத்தின் ஒரு தொடர்ச்சியே என்பது சிறப்பாகக் கருத்திற் கொள்ளத்தக்கது. அதாவது இலங்கையிலிருந்து நாம் பெற்றுக் கொண்ட பொருளாதார நலன்கள் எத வித குறைவுமின்றித் தொடர்ந்து கிடைக்குமென்பதை உத்தரவாதப்படுத்திக் கொண்ட நிலையில் தான் பிரித்தானியா இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கத் தயாராயிருந்தது. இதனை நடைமுறை ரீதியாகப் பெயர்ப்போமாயின், குடியேற்றநாட்டுவாத காலப் பெருந்தோட்டச் செய்கையில் இலங்கை தொடர்ந்தும் கவனம் செலுத்திப் போதியளவான தேயிலையும், றப்பரும் தெங்கும் மேற்குலகுக்குக் கிடைக்குமாறு பார்த்துக் கொள்ளும் என்பதேயாகும்.

## அரசியற் பொருளாதாரப் பரிமாணம்

பெருந்தோட்டச் செய்கையை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருளாதார அமைப்பானது காலனித்துவப் பின்னணியில் எவ்வாறிருந்தாலும் ஒரு சுதந்திர அரசின் பொருளாதாரம் என்ற வகையில் அதிக பொருத்தமுடையதொன்றெனக் கொள்ள முடியாது. அதற்கான காரணங்களைக் குறிப்பிடும் போது, ஓர்

அடிப்படை நிலையிற், பெருந்தோட்டத் துறையானது "குடியேற்றநாட்டுவாதம்" என்ற சின்னத்துடன் ஒதுக்கப்பட்ட ஒரு துறையாக வளர்ச்சியடைந்திருந்தமை சுட்டிக் காட்டப்பட வேண்டும். அதன் உற்பத்திச் செய்முறை - முதலீடு, ஊழியம், விற்பனை - நாட்டு மக்களை அரவணைத்ததொன்றாயிருக்க வில்லை. எனினும் அதிலிருந்து கிடைத்த பொருளியல் நன்மைகள் மேற்கூறிய குறைபாட்டை ஈடுசெய்ய முடியுமாயின் அதன் பொருத்தப்பாட்டினை நியாயப்படுத்துவதில் அதிக சிரமமிராது. பெருந்தோட்டத் துறை நாட்டு வருமானத்தின் பெரும் பகுதியை வழங்கி ஏனைய துறைகளைத் தாங்கிக் கொண்டதென்பதிற் சந்தேகமில்லை. இவ்வகையில் அது பொருளாதார நன்மை தரும் துறையேயாகும். ஆனால் வேறு இரு காரணங்களைக் கொண்டு அது அபிவிருத்திச் சார்புடையதொன்றல்லவென எடுத்துக்காட்ட முடியும். முதலாவதாக, இத்துறையின் ஏற்றுமதிகள் யாவும் முதல் விளைவுப் பொருட்களாயிருந்த காரணத்தினால் அவற்றின் பெறுமதி கூட்டப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அவற்றை இறக்குமதி செய்யும் நாடுகளுக்கு விட்டுக்கொடுக்கப்பட்டன. தேயிலையிற் கூட அது மொத்தமாக ஏற்றுமதி செய்யப்பட்ட காரணத்தினால் அதனைப் பொதி செய்வது, அழகு படுத்துவது போன்றவற்றின் மூலமான கூட்டிய பெறுமதி இலங்கைக்குக் கிடைக்கவில்லை. அதன் மூலம் இலங்கை பெற்றிருக்கக் கூடிய பெருமளவு வருமானம் இழக்கப்பட்டதெனலாம். இரண்டாவதாக, இலங்கை சுதந்திரம் பெற்ற நிலையில் தத்தெடுத்துக் கொண்ட பெருந்தோட்டத் துறை ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட வளர்ச்சியின் பின் செழிப்புக்கான வாய்ப்புகள் தீர்ந்து விட்ட ஒரு துறையாயிருந்தது. ஒன்றக்கு மேற்பட்ட அரசியல் மட்ட ஆணைக்குழுக்கள் (Sessional Paper XVIII - 1947, Sessional Paper XII - 1949 ) அதனைச் சுட்டிக் காட்டியிருந்தன. எனவே பொருளாதாரத்தை உன்னத நிலைக்கு எடுத்துச் செல்லக் கூடிய உள்ளார்ந்த திறமையை அது பெற்றிருக்கவில்லை.

ஆகவே அரசியற் சுதந்திரம் பொருளாதார சுதந்திரத்திற்கு இட்டுச் செல்ல வேண்டுமாயின் பெருந்தோட்டத் துறையை முன்னோடித் துறையாகக் கொண்டு அது இரட்டைத் தன்மைக்கு வழி வகுக்கும் நிலையை முறியடித்துப் பொருளாதாரத்தைப் பலவிதப்படுத்துவதற்கு முயற்சியெடுத்துக் கொண்டிருக்க வேண்டும். இது தவிர்க்க முடியாத வகையிற் பெருந்தோட்டங்களிலிருந்த தொழிலாளரை அவற்றினின்றும் விடுவிப்பது, அவர்களைச் சுதந்திர ஊழியமாக்கிப் பொருளாதாரத்தின் பிற துறைகளில் உள்வாங்குவது போன்ற செய்முறைகளை வேண்டி நின்றிருக்கும். ஆனால் தோட்டத் தொழிலாளரின் குடியுரிமையை அரசாங்கம் சுதந்திரத்தைத் தொடர்ந்த உடனடி நிலையிலேயே பறித்துக் கொண்டபோது பெருந்தோட்டத் துறையைப் பொறுத்து நெகிழ்வற்ற ஒரு நிலையினுள் அது தன்னை வலித்து உட்புகுத்திக் கொண்டு விட்டதெனலாம். அதன் காரணத்தினாலேயே பெருந்தோட்டத் துறையில் நாடு சுதந்திரம் அடைந்த பின்பு நாம் இனம் காணும் பாரிய மாற்றம் 1990 கள் வரை ஏற்பட முடியவில்லை. உண்மையில், 1950 களில் இடம் பெற்றிருக்கவேண்டிய பெருந்தோட்டங்களை நிலைக்களனாகக் கொண்ட நிலச் சீர்திருத்தம் 1970 கள் வரை இடம் பெறாதது ஒரு பேரண்டப் பொருளாதாரக் கண்ணோட்டத்திற் பொருளாதாரத்தின் தேக்க நிலையையே புலப்படுத்தியது. இத்தேக்க நிலையின் ஒரு பாரிய விளைவாக ஏற்பட்ட 1971 ஆம் ஆண்டின் ஜனதா விமுக்தி பெரமுனவின் கிளர்ச்சி 1972 ஆம் ஆண்டிலும் 1975 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்ட நிலச் சீர்திருத்தங்களுக்குரிய தூண்டுதலை வழங்கியதென்பதை அவற்றுக்குப் பொறுப்பாயிருந்த அமைச்சர் ஹெக்ரர் கொப்பேகடுவா (Hector Kobbekaduwa) ஏற்றுக் கொண்டிருந்தார். அவற்றின் மூலம் 550, 000 ஏக்கர் நிலம் நாட்டின் குடியான்களினதும் இளைஞர்களினதும் பாவனைக்கென விடுவிக்கப்படுமென அவர் குறிப்பிட்டார் (மேற்கோள் Nadesan, 1991 : 6).

எவ்வாறாயினும் இது மிகக் காலம் தாழ்ந்து எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கை என்பது ஒரு புறமிருக்க, பொருளாதார ரீதியாக ஏற்பட்டிருக்க வேண்டிய மாற்றங்களை இந்த நிலச் சீர்திருத்தங்கள் தானும் தொடக்கி வைத்ததென்று கூற முடியாது. இவை அர்த்தமுள்ள பொருளாதார உருமாற்றத்திற்கு இடமளிப்பதாயின் அவற்றின் தாக்கங்கள் இரு நிலைகளில் வெளிப்பட்டிருக்க வேண்டும். ஒரு புறம், பெருந்தோட்டங்களின் கீழிருந்த நிலங்களில் ஒரு கணிசமான பகுதி அவற்றிலிருந்து விடுவிக்கப்பட்டுப் பலவிதப் படுத்தல் முயற்சிகளுக்குட்படுத்தப்பட்டிருக்க வேண்டும். மறு புறம் தோட்டங்களிலிருந்த தொழிலாளரும் அவற்றிலிருந்து விடுவிக்கப்பட்டுச் சுயமான தொழில் முயற்சிகளைத் தேடிக் கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும். எனினும், இவ்விரு செய்முறைகளும் போதிய ஓர் அளவில் இடம் பெற்றதாகக் கூற முடியாது. அதற்குப் பதிலாக, முகாமை மட்டத்திலான மாற்றத்திற்கே இது இடமளித்திருந்ததெனலாம். ஆனால் வேண்டியளவு ஏனைய இணைந்த மட்ட மாற்றங்களின்றித் தனியே முகாமையைச் சீர்திருத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஏற்கனவேயுள்ள முகாமையின் தரம் வீழ்ச்சியடைவதாக அன்றி வேறு வகையிற் பிரதிபலிக்க முடியவில்லை. அரசு சார் நிறுவனங்களாற் சுவீகரிக்கப்பட்ட மொத்தம் ஏறக்குறைய 550,000 ஏக்கர் நிலத்தில் இன்றுவரை ஏறக்குறைய 19,000 ஏக்கர் நிலமே குடியான்கள் மத்தியிற் பங்கிடப்பட்டுள்ளதெனலாம் (Nadesan,1991:6). இது பொருளாதார உருமாற்றச் செய்முறையைத் தொடக்கி வைப்பதற்கு எந்த வகையிலும் போதியதொன்றாயிருக்கவில்லை. அதே நேரத்தில், தொழிலாளர் பக்க நிலைமை இன்னும் மோசமாயிருந்தது. அவர்கள் தமது பொருளியல் ரீதியான அந்தஸ்தை மாற்றிக் கொள்வதற்குரிய வாய்ப்பு இன்னமும் எட்டாத கனியாகவே இருந்ததென்பது ஒரு புறமிருக்க, அரசியற் பொருளாதார உருமாற்றத்தின் இரண்டாவது கட்டப் பரிமாணம் அவர்களை நேரடியாகவே தாக்க முற்பட்டிருந்தது. அதாவது இலங்கைத் தமிழருக்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட இனத்துவப் பலாத்காரம் தோட்டத் தொழிலாளர் மீதும் பிரயோகிக்கப்படலாயிற்று.

நடேசய்யரின் தோல்வியின் வழி ஏற்பட்ட அரசியற் பொருளாதாரப் பரிமாணத்தின் இரு கட்டங்களும் ஒன்றிணையும் இந்நிலையில் இரண்டாவது கட்ட வளர்ச்சிகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுவது அவசியமாகின்றது.

நாம் ஏற்கனவே கூறியவற்றிலிருந்து சுதந்திர இலங்கையின் பொருளாதாரம் "பெருந்தோட்டம்" என்ற அமைப்பு வகுத்த மார்க்கத்திலிருந்து பிறழாது சென்ற காரணத்தினால் தவறான ஓர பாதை வழி எடுத்துச் செல்லப்பட்டதென்பது புலனாகும். இலங்கையின் சுதந்திரத்தை உடனடியாகத் தொடர்ந்து வந்த காலகட்டத்தில் ( 1950 /51 ) இடம் பெற்ற கொரிய யுத்தப் பூரிப்பு அதன் பாதக விளைவுகளை ஓரளவுக்குப் பிற்போட்ட போதும் 1960 களின் ஆரம்பத்திலிருந்து அவை தெளிவான உருவம் பெறலாயின. பெருந்தோட்ட உற்பத்திகளின் உலக சந்தை விலை வீழ்ச்சி, அதன் மூலம் உண்டான செலாவணி நெருக்கடி, பொருளாதாரம் பலவிதப்படுத்தப்படாத நிலையில் இடம் கொடுக்கப்பட்டிருந்த உயர்ந்த மட்ட இறக்குமதிகளைப் பேண முடியாமை, பொருளாதார வளர்ச்சியின்மையால் தொழில் வாய்ப்புகள் பெருகாமை போன்ற இன்னோரன்ன

பிரச்சினைகளுக்கு ஆட்சியாளர் முகம் கொடுக்க வேண்டியதாயிற்று. எனினும் பொருளாதாரம் தொடர்ந்தும் தவறான ஒரு பாதையில் முன்னேறிக் கொண்டிருந்தவிடத்து இவற்றுக்கான தீர்வுகளைக் கண்டறிய முடியாத அரசாங்கம் அரசியற் பொருளாதாரப் பரிமாணத்தின் முதலாவது கட்டத்திற் கையாண்ட அதே தந்திரத்தை இப்போதும் கையாளும் ஒரு முடிவுக்குப் படிப்படியாக இட்டுச் செல்லப் பட்டிருந்ததெனலாம். இலங்கையிலிருந்த இந்திய சமூகத்தவர், அவர்கள் இலங்கையரல்லாதவர் என்ற காரணத்தினாற், பொருளாதார வாய்ப்புகள் மறுக்கப்பட்ட நிலை அவர்களுட்பட இலங்கைத் தமிழர் நோக்கியும் இப்போது விரிவு படுத்தப்பட்டதெனலாம். அதற்கேற்ப "இலங்கையர்மயவாக்கம்" என்பது (வெளிப் படையாகக் கூறப்படாது விட்டாலும்) "சிங்களர்மயவாக்கம்" என்பதாக மாற்றிக் கொள்ளப்பட்டிருந்தது.

எனினும் இதற்கு அடியெடுத்துக் கொடுக்கும் முயற்சி இலங்கை உயர் குழாம் மத்தியில் உருவான உள் முரண்பாடுகளின் விளைவாக ஏற்பட்டிருந்தது. உயர் குழாமினரை ஆரம்பத்திலிருந்தே பிரதிநித்துவப் படுத்திய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவி தனக்குக் கிடையாதென்பதை உறுதிப்படுத்திக் கொண்ட எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க அக்கட்சி அதுவரை புறக்கணித்திருந்த சிங்கள – பௌத்த கலாச்சார அம்சங்களை முதன்மைப்படுத்திப் பெரும்பான்மை ஆதரவைப் பெற விழைந்தார். இத்தகைய கொள்கை, இயல்பாகவே, தமிழ் மக்களைத் தனிமைப்படுத்தி சிங்கள மக்களை மேன்படுத்துவதொன்றாயிருந்தது. பல இன மக்களைக் கொண்ட நாடொன்றில் இத்தகைய அணுகுமுறை ஏற்கனவே முளை விட்டிருந்த இனத்துவ முரண்பாடுகளைப் பெரிதுபடுத்துவதொன்றாகவே அமைய வேண்டியதாயிற்று. எனினும் இந்தப் பெரிதுபடுத்தற் செய்முறை ஏனையவற்றை விடப் பொருளாதார காரணங்களாலேயே பெருமளவுக்கு வழி நடத்தப்பட்டிருந்தது. மத்திய தரத் தொழில் வாய்ப்புக்களிலிருந்து தமிழ் மக்களை ஒதுக்குவது உயர் கல்வி வாய்ப்புகளைக் கடினப்படுத்தி (குரப்படுத்தல்) வாழ்க்கைத் தொழில் வாய்ப்புகளை அவர்களுக்கு மட்டுப்படுத்துவது, வர்த்தக வாய்ப்புகளைச் சீரழிப்பது, நில உடைமையைக் குறைப்பது போன்றவை வளர்ந்து சென்ற இனத்துவ அரசியலின் முக்கியமான வெளிப்பாடுகளாயிருந்தன.(விபரங்களுக்கு Nithiyanandan,1987) நாட்டின் பொருளாதார அபிவிருத்தி நெருக்கடிக்குட்பட்ட வேகத்திற்கேற்ப இவ்வாறான இனத்துவப், பொருளாதார நடவடிக்கைகளும் வளர்ந்து சென்றிருப்பதைக் காணலாம்.

இத்தகைய அரசியற் பொருளாதாரப் பரிமாணம் நாட்டை அழிவின் எல்லைக்கே கொண்டு வந்திருப்பது கண்கூடு. பொருளாதார அபிவிருத்திக்கான "குறுக்கு வழிகள்" என்ற முறையிற் கையாள முற்பட்ட இந்நடவடிக்கைகள் இன்று பொருளாதார அபிவிருத்தி கருதி மேற்கொள்ளப்படும் உண்மையான முயற்சிகளையே முற்றாகத் தடுக்கக் கூடிய அல்லது பெரிதும் கடினப்படுத்தக்கூடிய பலம் பொருந்தியவையாகக் காணப்படுகின்றன. அவற்றின் தாக்கத்திலிருந்து நாட்டின் எந்தப் பிரிவினரும் விடுபட முடியாத நிலைமையொன்று இன்று ஏற்பட்டுள்ளது. அவ்வாறு இறுக்கமான பிடிக்குள் அகப்படும் செய்முறையின் ஓர் ஆரம்ப நிலையில் தான் இலங்கைத் தமிழருக்கெதிரான இனத்துவப் பலாத்காரம் பெருந்தோட்டங்களையும் ஆட்கொள்ள வேண்டிய கட்டமொன்று ஏற்பட்டது. அதனையே "இருகட்டங்களின் ஒருங்கிணையும் நிலை" என நாம் குறிப்பிட்டோம். இது இனத்துவ வளர்ச்சியின் தீவிரத் தன்மையைப் புலப்படுத்தும் அதே நேரத்தில் பெருந்தோட்டத் தொழிலாளரின் இது வரையில்லாத சமூகப் பொருளாதார உருமாற்றம் ஒன்றுக்கு இட்டுச் செல்ல முற்படுகிறதென்பதையும் கருத்திலெடுக்க வேண்டியது அவசியமாகின்றது.

## நேர்க்காரிய வளர்ச்சிகள்

தென்னிந்திய மரபுரியத்தின் முற்றான முன்னேற்றம் என்பதை வைத்துக் கொண்டு பார்க்குமிடத்து அதன் மீது 1977, 1981, 1983 என்ற குறுகிய கால இடைவெளிகளில் மேற்கொள்ளப்பட்ட பலாத்காரம் விரும்பத்தகாத ஓர் எதிர்க்கணிய வளர்ச்சி என்பதில் எதுவித ஐயப்பாடும் இல்லை. எனினும் அதனூடே இழையோடிக் கொண்டிருந்த ஒரு நேர்க்கணிய அம்சமும் சுட்டிக் காட்டப்பட வேண்டியதொன்றாகும். அதாவது தோட்டத் தொழிலாளரைத் தனிமைப்படுத்தி நோக்குவதென்பது கைவிடப்பட்டு இலங்கைத் தமிழருடன் அவர்களைச் சமப்படுத்திப் பார்க்கும் ஒரு பான்மைக்கு இடமளிக்கப்பட்டிருந்தது. அதற்கு முன்பு 1976 ஆம் ஆண்டு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) நிறுவப்பட்ட போது அதன் கூட்டுத் தலைவர்களுள் ஒருவராகத் தொண்டமான் பதவியேற்றிருந்தார். இனத்துவக் கலவரங்களின் விளைவாகக் கணிசமான பெருந்தோட்டத் தொழிலாளர் தோட்டங்களை விட்டு வெளியேறி வவுனியா, கிளிநொச்சி போன்ற மாவட்டங்களிற் குடியேறியமையும் குறிப்பிடத்தக்கது. ஆகவே அரசியல் ரீதியாக இவ்வாறாகத் தோட்டத் தொழிலாளரும் அவர்களுடைய தலைமையும் நாட்டின் பிரதான சிறுபான்மையினரான இலங்கைத் தமிழரை நோக்கி அசைந்து செல்ல முற்பட்டமை நடேசய்யர் கொண்டிருந்த எண்ணமாகிய இலங்கையிலிருந்த இந்தியர் நாட்டின் ஏனைய சமூகத்தவருடன் ஒருங்கிணைய வேண்டுமென்பதை ஓரளவுக்காவது நடைமுறையிற் பெயர்ப்பதாயிருந்தது.

அதே நேரத்தில் இத்தகைய பலாத்காரத்துக்குத் தொழிலாளர் அடிபணிந்து போகாது அதற்கெதிராகத் தாமும் தீவிரமான போக்கைக் கடைப்பிடித்து அதனை எதிர்க்கும் ஒரு போக்கும் படிப்படியாக வளர ஆரம்பித்திருந்தது. பலாத்காரத்தைப் பலாத்காரத்தால் எதிர் கொள்ளும் இந்த வளர்ச்சிக்கு அரசாங்கத்தின் ஆதரவு இல்லாதிருந்த போதும் தொழிற் சங்கங்கள் தமது அங்கீகாரத்தை வழங்கித் துணை செய்திருந்தன. (Kurian 1989 : 282). அதனாலேயே இலங்கைத் தமிழர் மீது பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்திய 1983 கலவரங்கள் தோட்டப் பகுதிகளில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தாது தடுத்துக் கொள்ள முடிந்தது. (Ibid:283 ).

இத்தகைய சம்பவங்களும் அதற்கான எதிர்த் தாக்குதல்களும் தோட்டத் தொழிலாளர் மத்தியிற் கூடியளவான அரசியல் விழிப்புணர்வுக்கு இடமளித்திருந்ததென்பதையும் மறுப்பதற்கில்லை. நாட்டின் இனப்பிரச்சினையையிட்டு அவர்கள் தம்மத்தியில் வாதிக்க முன்வந்ததுடன் அவர்களின் ஒரு சாரார் வடபகுதித் தீவிரவாதக் குழுக்களுடன் தொடர்பேற்படுத்திக் கொள்வதற்கும் தயங்கவில்லை. இந்தச் செய்முறையின் ஒரு பகுதியாகத் தம்மிடையே செயற்பட்ட அரசியல் தன்மையை அவர்கள் விமரிசிப்பதற்கும் தவறவில்லை. (Ibid). அரசாங்கம் தோட்டப்பகுதிகளிற் புதிதாக உருவாக முற்பட்ட வளர்ச்சிகளைக் கண்டறிந்து அவற்றை உரிய முறையில் அணுக முற்பட்டமை மூலம் தான் இந்தப் போக்குகளை மிதப்படுத்தி அதனாலேற்படக் கூடிய விளைவுகளையும் ஒரு குறிப்பிட்ட வரையறையினுள் மட்டுப்படுத்த முடிந்ததெனலாம்.

## புதிய வளர்ச்சிகளும் அரசாங்கமும்

அரசாங்கம் தோட்டப் பகுதிகளில் இடம் பெற ஆரம்பித்த மாற்றப்போக்குகளை உதாசீனம் செய்ய முடியாமைக்கு முக்கியமாக இரண்டு காரணங்களைக் குறிப்பிடலாம். அவற்றில் ஒன்று அரசியல் ரீதியானதாகயிருக்க மற்றது பொருளாதாரத் தேவைகளினால் உந்தப்பட்டதாயிருந்தது. பொருளாதார ரீதியாகப் பெருந்தோட்ட துறையே இன்னமும் அரச வருமானத்தில் கணிசமான பகுதியை உழைத்துக் கொடுத்துக் கொண்டிருந்த நிலையில் அங்கு புதிதாக அறிமுகமாகக் கூடிய எந்வொரு வளர்ச்சியும் அதிற் பாதிப்பினை ஏற்படுத்துமென்பதை அரசாங்கம் நன்கறிந்திருந்தது. எனவே, தொழிலாளருடன் பொருதுகின்ற ஒரு நிலைக்கு இடமளியாது புரிந்துணர்வுடன் கலந்த எச்சரிக்கையான அணுகுமுறையை அது கையாள வேண்டியிருந்தது. அதன் மூலம் பெருந்தோட்டத் துறையிலிருந்து கிடைக்கக் கூடிய நன்மைகளைக் குறைவிடாது அரசாங்கம் பேண முற்பட்டதெனலாம். மறுபுறம், அரசியல் மட்டத்தில் அரசாங்கத்தின் நோக்கம் தன்னைத் தனிமைப் படுத்திக் கொள்வதினின்றும் காத்துக் கொள்வதேயாகும். எற்கனவே தமிழ்த் தீவிர வாதிகளுடன் மோதலில் ஈடுபட்டிருந்த அரசாங்கம் புதியதொரு போர் முனையை முற்றிலும் மாறுபட்ட ஒரு சூழலில் ஆக்கிக் கொள்வது அதன் மீதான அழுக்கத்தைப் பெரிதும் அதிகரித்து அதன் பலம், திறமை என்பவற்றை மேலும் கேள்விக் குறிக்குட்படுத்தியிருக்கும். ஆகவே இவ்வாறானதொரு இக்கட்டான நிலையை முடிந்தவரை தவிர்த்துக் கொள்ளவே அரசாங்கம் விரும்பியது. மேலும் தான் நியாயமாகவும் புரிந்தணர்வுடனும் நடந்து கொள்கிறேன் என்பதை நிருபிப்பதற்குறிய ஒரு களமாகவும் தோட்டத் துறையைப் பயன்படுத்த விரும்பியிருந்ததெனலாம்.

எனவே பெருந்தோட்டத் துறையும் அதன் முதுகெலும்பாக விளங்கிய தென்னிந்தியத் தொழிலாளரும் இதுவரையில்லாத அளவுக்கு ஆதரவான ஒரு பார்வையை அரசாங்கத்திடமிருந்து ஈர்த்துக் கொள்ள முடிந்தது. இலங்கை சுதந்திரமடைந்த கட்டத்திற் கையாளப்பட்ட கடுமையான போக்குடன் ஒப்பிடும் போது இது முற்றிலும் மாறுபட்டதொன்றாயிருந்தது.

பெருந்தோட்ட துறையிலிருந்த தொழிற் சங்கங்களும் இந்த நிலைமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறவில்லை. சில கோரிக்கைகளை முன்வைத்துத் தொழிற்சங்க நடவடிக்கைகளில் அவை ஈடுபட முன்வந்த சந்தர்ப்பங்களிலெல்லாம், ஒப்பீட்டு ரீதியிற் சுலபமாகவே தமது கோரிக்கைகளை அவை வென்றெடுக்க முடிந்தன எனலாம். (5). இது விடயத்தில் இரு வேலை நிறுத்தங்கள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கன. முதலாவதாக, 1984 ஏப்ரல் மாதத்தில் இடம் பெற்றுப் பத்து நாட்கள் வரை நீடித்த வேலை நிறுத்தம். இது கணிசமான அளவு வேதன உயர்வுடன், இரு பாலாருக்கும் சம வேதனம், வாரத்தில் ஆறு நாள் வேலை என்ற உரிமைகளையும் ஈட்டிக் கொடுத்திருந்தது. இரண்டாவது வேலை நிறுத்தம் 1986 ஜனவரியில் மேற்கொள்ளப்பட்டது. இது தொழிலாளரின் "நாடற்றவர்" என்ற அந்தஸ்தை நீக்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. 1964 லும் (சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம்) 1974 லும் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களின் திருப்தியற்ற தன்மையைச் சுட்டிக்காட்டி எஞ்சியிருந்த ஏறக்குறைய 3 1/2 இலட்சம் தொழிலாளருக்கும் அவர்களின் இயற்கை வழித் தோன்றல்களுக்கும் குடியுரிமையை இது வேண்டி நின்றது. வேலை நிறுத்தம் சரியானபடி தொடங்குவதற்கு முன்னரே அரசாங்கம் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே இணக்கம் காணப்பட்ட விகிதாசாரத்தை எவ்வகையிலும் கருத்திலெடுக்காது இலங்கைப் பிரஜாவுரிமையை அதனை விரும்புகின்ற அனைவருக்கும் வழங்கச் சம்மதித்தது. "நாடற்றவர்" என்ற அந்தஸ்தை அறவே நீக்கிய இந்த வேலை நிறுத்தம் தொழிலாளருக்கு ஒரு முக்கியமான வெற்றி என்பதிற் சந்தேகமில்லை.

அதனை விடத் தோட்டத் தொழிலாளர் மத்தியிற் கூடியளவு செல்வாக்குப் பெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைத் தன்னுடன் அரவணைத்துக் கொண்டமையும் அரசாங்க நடவடிக்கைகளுள் முக்கியமானதொன்றாகும். இது அரசாங்கம், தோட்டத்தொழிலாளர் என்ற இரு சாராருக்கும் பரஸ்பரம் நன்மை பயப்பதொன்றாயிருந்தது. அரசாங்கத்தின் நிலையில், நாம் ஏற்கனவே குறித்த நோக்கங்களை அடைவதைச் சுலபப்படுத்தியிருந்ததுடன் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் ஒரு தலைமைப் பதவியை எற்று அதனுடன் தன்னை இணைத்துக் கொண்டிருந்த காங்கிரஸ் தலைமையைத் தம்பால் ஈர்த்தமை மூலம் இலங்கைத் தமிழரின் கோரிக்கைகளின் பின்னணியிலான ஒருமித்த பலத்தை ஊடறுக்கவும் முடிந்தது. இலங்கையில் இலங்கைத் தமிழரையும் அவர்களது கோரிக்கைகளையும் தனிமைப்படுத்தும் முயற்சியில் அரசாங்கம் வெற்றி கண்டதெனலாம். மேலும் அரசாங்கம் சிறுபான்மையினர் தொடர்பான பிரச்சினைகளில் மாத்திரமன்றி இந்தியாவுடன் தொடர்புபடும் வெளிநாட்டுக் கொள்கை பற்றிய பிரச்சினைகளிலும் மத்தியஸ்தம் வகிப்பதற்கான ஓர் ஊடகமாகக் காங்கிரஸ் தலைமையைப் பயன்படுத்துவது சாத்தியமாயிற்று.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் புறத்திலிருந்து நோக்கும் போது, அரசாங்கத்துடனான அதன் தொடர்பு பலதரப்பட்ட நன்மைகளை ஒரு தனிப்பட்ட மட்டத்திற் காங்கிரஸிக்கும் பொதுவாகத் தோட்டத்தொழிலாளருக்கும் ஈட்டிக் கொடுத்துள்ளது. சமூகப் - பொருளியல் ரீதியாகத் தொகுத்துக் கூறுவதாயின், நாட்டின் தரம் குறைந்த வர்க்கத்தவர் என்ற நிலையிலிருந்த பெரும்பாலான மலைநாட்டு மக்களை ஒரு மத்திய தரவர்க்கம் என்ற நிலைக்குத் தரமுயர்த்தியுள்ளமை ஒரு மிக முக்கிய சாதனை என்றே கூறலாம். கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி போன்றவற்றுடன் தொடர்பு படும் பல குறிகாட்டிகள் இதற்குரிய ஆதாரமாகச் சுட்டிக் காட்டப்பட முடியும். எனினும் அதனையும் விட முக்கியமானது அரசியல் மட்டத்தில் அவர்கள் பெற்றுக் கொண்டுள்ள அந்தஸ்தும் மதிப்பும் ஆகும். "நாடற்றவர்" என்று ஒரு நேரத்தில் ஒதுக்கப்பட்ட ஒரு சாரார் இன்று நாட்டைக் கட்டிக் காத்து அதனைத் தாங்குகின்ற ஒரு சாரார் என்பதை அரசாங்கம் அங்கீகரிக்கும் ஒரு நிலையையாவது அடைந்துள்ளனர். இரு துருவங்களாகப் பிரிந்து நிற்கும் நாட்டின் இரு பெரும் இனங்களை ஒரு பொது மேடைக்கு கொண்டு வந்து சமரசம் செய்து வைப்பதன் மூலம் நாட்டின் ஒருமைப்பாட்டை பேணும் ஒரு பெரும் பிரயத்தனத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இன்று ஈடுபட்டுள்ளது. இதில் அது வெற்றியடையுமா தோல்வியடையுமா என்பது முற்றிலும் வேறான ஒரு விடயம். எனினும் இலங்கை அரசியலில் தோட்டத் துறையினரின் மதிப்பும் அந்தஸ்தும் எவ்வளவு தூரம் உயர்ந்துள்ளன என்பதற்கான ஒரு சான்றாகவே இது கொள்ளப்பட வேண்டும். இன்னொரு மட்டத்தில் நலிவடைந்துள்ள இலங்கை இந்திய உறவுகளைச் சரி செய்யும் ஒரு பெரும் பொறுப்பும் அதனைச் சார்ந்துள்ளது.

### முடிவுரை

பெருமளவுக்கு அரசியற் சமூக மட்டத்திலிருந்தெழும் மேற்கூறிய எடுத்துக்காட்டுகள் சமூக - பொருளாதார உருமாற்றம் நோக்கிய

வளர்ச்சிகளென்றும் அவை நேர்க்கணியத் தன்மை கொண்டவையென்றும் ஒரு குறிப்பிட்ட மட்டத்திலிருந்து எடுத்துக்காட்டுவது சாத்தியமானதே. அவ்வாறாயின் இந்தியப் பரிமாணத்தை விட்டுக் கொடாது இலங்கையுடன் ஒன்றிணைய வேண்டுமென்ற நடேசய்யரின் குறிக்கோள் ஈடேறி விட்டதென்று கொள்ளலாமா ?

இந்த வினாவுக்கு "ஆம்" என்றும் விடையளிக்கலாம். அதே நேரத்தில் "இல்லை" என்றும் விடையளிக்கலாம். "ஆம்" என்று கூறுமிடத்துச் சமூக - பொருளாதார உருமாற்றத்தில் அரசியற் சமூக அம்சங்கள் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றவென்பது கருத்திலெடுக்கப்பட வேண்டும். இவ்வகையில் தோட்டத் தொழிலாளர் சமூக ரீதியாகப் புறக்கணிக்கப்பட்டமைக்குரிய ஒரு முக்கிய காரணம் அவர்கள் அரசியலுரிமை மறுக்கப்பட்ட ஒரு கூட்டத்தவராக இருந்தமையேயாகும். இந்நிலைமையில் அவர்கள் அரசியற் பெறுமதியற்றவர்களாயிருந்ததால் அவர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்ட செயல் திட்டங்கள், மற்றும் திட்டங்களை வகுப்பதற்கோ அல்லது அவற்றை முன்னின்று வழி நடத்துவதற்கோ உரிய தூண்டுதல் அரசியல்வாதிகள் மத்தியில் ஏற்படவில்லையெனலாம். ஆனால் அவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்ட பின்பு இத்தகைய அடிப்படைக் குறைபாடு களையப்படுவதற்கு வழி பிறந்திருக்கிறதென்பதிற் சந்தேகமில்லை. இது நடைமுறையிற் பெயர்க்கப்பட்டதற்கான சான்றுகள் இன்னமும் மிகக் குறைவானவையேயெனினும் எதிர் காலத்தில் இது தோட்டத் தொழிலாளரின் ஒருமித்த தர உயர்வுக்கு இட்டுச் செல்லுமென்று நம்பலாம்.

ஆனால் மறுபுறம், இச்சாதனைகளை நோக்குமிடத்து அவை குறிப்பிட்ட ஒரு பொருளியல் வரையறையினுள் இடம் பெற்ற மாற்றங்களே என்பது எளிதிற் சுட்டிக் காட்டப்படக் கூடியதொன்று. "பெருந்தோட்டம்" என்ற இந்த வரையறை இலங்கையின் பொருளாதார உருமாற்றத்திற்குரிய தகுந்த ஓர் அடிப்படையல்லவென்பதும் அதன் விளைவாக எதிர்நோக்கப்பட்ட பொருளாதார பிரச்சினைகளுக்கு அரசியல் மட்டத்திலிருந்து சில தீர்வுகள் நாடப்பட்ட போது அரசியற் பொருளாதார ரீதியாகப் பாரதூரமான சில விளைவுகளுக்கு இடமளித்தனவென்பதும் ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டன. நிலைமை ஒரு மட்டத்தில் மோசமாகிய பின் 1972, 1975 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சீர்த்திருத்தங்கள் கூட இந்த வகையிற் பயன் கொடுக்கவில்லை. அவை " பெருந்தோட்டம்" என்ற வரையறையின் மரபு ரீதியான அம்சங்கள் பலவற்றை விட்டுக்கொடாது தொடர்ந்தும் பேண முற்பட்டிருந்தன. அதனால் அத்தகைய பின்னணியிலிருந்து ஊற்றெடுக்கின்ற பிரச்சினைகளும் நெருக்கடிகளும் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

இவ்வாறானதொரு சூழலில் தான் இன்று பெருந்தோட்டங்களும் அவற்றிலிருந்து பெறப்படும் வருமானமும் மீண்டும் சர்ச்சைக்குரிய விடயங்களாகியுள்ளன. ஆனால் மீண்டும் " பெருந்தோட்டங்களின் முகாமை" என்ற விடயத்தைச் சுற்றியே இந்தச் சர்ச்சை வளர்ந்து செல்வதைக் காணலாம். ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை, அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம் என்பவற்றின் புனரமைப்புப் பற்றி ஆலோசனை வழங்குமாறு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழு அவற்றின் திறமையை மேம்படுத்தும் வகையில் தனியார் நிறுவனங்களுடன் முகாமைத்துவ ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளுமாறு எடுத்துக் கூறியிருப்பது (Report of the Task force on the Restructuring of the State Plantation Sector 1991 : 3) ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. இந்த ஒப்பந்தங்கள் ஐந்து முதல் ஏழு வருடங்களில் முடிவுக்கு வந்த பின்பு அவற்றின் முகாமையை மக்கள் மயப்படுத்துவது பற்றிச் சிந்திக்கப்பட முடியுமெனவும் எடுத்துக் கூறப்படுகின்றது. ஆகவே, "பெருந்தோட்டம்" என்ற அமைப்பில் அடிப்படைத் தன்மை வாய்ந்த மாற்றங்களைக் கொண்டு வரக் கூடிய பரிந்துரைகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை. மீண்டும் முகாமையை மாற்றியமைப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் எவ்வளவு தூரம் பெருந்தோட்டங்களின் திறமையை அதிகரிக்குமென்பது ஒரு புறமிருக்க, இம்முயற்சி அரசாங்கத்தின் தனியார்மயவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதியென்றும் பெருந்தோட்டங்கள் லாபம் உழைக்கவில்லையென்பது வெறும் ஒரு கண்துடைப்பே என்றும் குற்றம் சாட்டும் கருத்துக்களும் வெளிவந்துள்ளன. (Nadesan.1991) அதே நேரத்தில் தற்போதுள்ள பெருந்தோட்ட ஊழியத்தின் நிலை பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லையென்பதுடன், அதன் சமூக - பொருளாதார முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டிருப்பதற்கான ஆதாரங்களும் எதுவும் தென்படவில்லை. அதனாற் புதிய நடவடிக்கைகளில் பெருந்தோட்டத் துறையின் தொழிற் சங்கங்கள் சந்தேகம் கொண்டு தொழிலாளரின் நலனைப் பேணக் கூடிய சில கோரிக்கைகளை முன்வைத்த போது அரசாங்கம் அவற்றை ஏற்றுக் கொள்ள முன்வந்துள்ளது. எனினும் தொழிற் சங்கங்கள் ஒரு வகைத் தயக்கத்துடன் தான் அரசாங்க உத்தரவாதத்தை ஏற்றுக் கொண்டிருப்பதுடன் தேவையேற்பட்டால் தாம் தொழிற் சங்க நடவடிக்கைகளில் இறங்குவோமெனவும் எச்சரித்துள்ளன. (Island, 27th Novermber, 1991).

எவ்வாறாயினும், ஊழியச் செலவு உயர்வு பற்றிப் பிரஸ்தாபிக்கப் பட்டுள்ளதால் அதனைக் குறைப்பது ஒரு பிரதான நோக்கமென்பது குறிப்பாலுணர்த்தப்படுகின்றது. ஆனால் இது எவ்வாறு சாதிக்கப்படலாமென்பது பற்றி எதுவும் கூறப்படவில்லை. எமது நோக்கில் நாம் ஏற்கனவே வலியுறுத்தியவாறு பெருந்தோட்ட ஊழியத்தின் நிலை பற்றியும் அது எவ்வாறு ஒரு கட்டற்ற ஊழியமாக மாற்றப்படலாமென்பது பற்றியும் எடுத்துக் கூறப்படாத வரை பெருந்தோட்டத் துறை தொடர்பான மாற்றங்கள் அடிப்படைத் தன்மையற்ற மேல்வாரியான மாற்றங்கள் என்றே கொள்ள வேண்டும்.

ஆகவே தொகுத்து நோக்கில், நடேசய்யர் காலம் முதல் இன்றைய நிலை வரை இலங்கையின் பெருந்தோட்ட துறை ஒரு சுற்றுச்சுற்றி வரும் கட்டத்தில் உள்ளது. தனியார் உடைமையிலிருந்து கம்பெனி உடைமையாகவும் பின்பு அரச உடைமையாகவும் மாறி மீண்டும் அது கம்பெனி உடைமையாகும் தறுவாயில் உள்ளது. எனினும், இந்த முழுச்சுற்றிலும் அதன் அடிப்படை மரபு வழி அம்சங்கள் மாறாது நீடித்திருக்கும் தன்மை காணப்படுகின்றது. இந்நிலையில் நாம் நோக்கிய சமூக - பொருளாதார உருமாற்றம் ஒரு மேல்வாரியானதென்றே கொள்ள வேண்டும். அத்தகைய ஒரு நோக்கில் நாம் எழுப்பிய வினாவுக்கான விடை "இல்லை" என்பதாக அன்றி வேறாக இருக்க முடியாது.

## குறிப்புகள்

**(1).** இதற்கான காரணங்கள் இலங்கையின் அரசியற் பொருளாதார வரலாற்றிலிருந்தே ஊற்றெடுக்கின்றன எனினும் இவை இதுவரை சரியான முறையில் ஆராயப்பட்டிருப்பதாகக் கூற முடியாது.

**(2).** இத்தகைய வாழ்க்கை முறையின் பல்வேறு பரிமாணங்களும் இன்று வேறுபட்ட மட்டங்களில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டும் உள்ளன.

(3). குடியுரிமை பறிக்கப்பட்டமை முதலாளித்துவ வர்க்க நலன்களைப் பேணுவதற்கு எவ்வாறு துணை புரிந்ததென்பது வேறாக ஆராயப்பட்டுள்ளது. (நித்தியானந்தன், 1989).

(4). தொழிலாளர் பெரும் எண்ணிக்கையில் பெருந்தோட்ட அலுவல்களுக்கு வேண்டப்பட்ட அதே நேரத்தில், பெருந்தோட்ட உற்பத்திகளின் விலை மீது எதுவித கட்டுப்பாட்டையும் செலுத்த முடியாத நிலையில், தொழிலாளர் மீதான செலவைக் குறைக்க வேண்டியது அவசியமாயிருந்தது. அவர்களைக் குறைந்த வாழ்க்கை மட்டத்திற் பேணுவது அதற்கான முக்கிய ஊடகமாகச் செயற்பட்டது.

(5). இலங்கைத் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம் (Lanka Jathika Estate Workers Union) என்ற அரசாங்க சார்பான தொழிற் சங்கம் தனது அங்கத்துவ எண்ணிக்கையைக், குறிப்பாகச் சிங்களத் தொழிலாளர் மத்தியிற், பெருக்கிக் கொண்டமையும் இதற்கொரு காரணமாயிருக்கலாம். எனினும், ஏனைய தொழிற் சங்கங்களுடன் சேர்ந்து அது தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட முன்வரவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

### உசாத்துணைகள்


சாரல் நாடன் (1988) : "தேசபக்தன்" கோ. நடேசய்யர் ; ஒரு வரலாற்று ஆய்வு, மலையக வெளியீட்டகம், கண்டி.

நித்தியானந்தன், வி (1989) : இலங்கை அரசியற் பொருளாதார அபிவிருத்தி, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைகழகம், யாழ்ப்பாணம்.

Kodikara, S.U (1965): Indo-Ceylon Relations Since Independance, The Ceylon Institute of World Affairs, Colombo.

Kurian, Rachel (1989): State, capital and Labour in the Plantation Industry in Sri Lanka 1834 - 1984, gaboren te Trichur (India).

Ludowyck, E.F.C. (1966): The modern history of Ceylon, Weidenfield & Nicholson, London.

Moor, Mick (1985): The State and Peasant Politics in Sri Lanka. Cambridge University Press, Cambridge.

Nadesan.S (1991): peoplisation of the Plantations and the Trade Unions, The Island, 14th November.pp. 6 -7.

Nithiyanandan. V (1987): An Analysis of Economic Factors behind the Origin and Development of Tamil nationalism in Sri Lanka, in Abeysekera, Charles & Gunasinghe, Newton (eds) Facets of Ethnicity in Sri Lanka, Social Scientists Association. Colombo, pp 100 - 170.

Report of the Task Force on the Restructuring of the State Plantation Sector (1991), April (unpublished).

Sessional Paper XVIII (1947), Report of the Commission on the Rubber Industry in Ceylon, Government press, Colombo.

Sessional Paper XII (1949), Report of the Coconut Commission, Government Press, Colombo.

Sri Lanka business Development Centre (1991): Analysis of the Present Structure and Operations of the Janatha Estate Development Board and the Sri Lanka State Plantations Corporation and Recommendations for their Restructuring, Final report Submitted to the Task Force on Restructuring the Plantations, Colombo.

Thondaman . S (1987): My Life and Times : An Autobiography. The Media Council, ceylon Workers' Congress, Colombo.



14 ம் பக்கத் தொடர்ச்சி


## பூகோளம் வெப்பமயமாதல்......

ரீதியான அவதானிப்புக்களும், ஆராய்ச்சிகளும் மேலும் நடாத்தினாலேயே ஒரு திடமான ஒருங்கிணைந்த முடிவினை எடுத்து ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். வளிமண்டலத்தில் காபனீரொட்சைட், மெதேன் வெளியீடுகள் அதிகரித்துள்ளதென விஞ்ஞானிகள் ஏற்றுக் கொள்கின்றனர். இதனால் புவியின் வாழ்தல் (Habitability of Earth) பாதிப்படையலாம். கடந்த 100 ஆண்டுகளில் காபனீரொட்சைட் 25 சதவீதமாக அதிகரித்து விட்டதாகவும், ஆண்டொன்றுக்கு 0.5% அதிகரிக்கின்றது என்றும் சொல்லப்படுகின்றது. ஆகவே பொருத்தமான விஞ்ஞானிகளும், தீர்மானம் எடுப்பவர்களும் பொருத்தமான நுட்பமான சிபார்சுகளை இது தொடர்பாகச் செய்தல் வேண்டும்.


கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்திற்கு
திரு. [illegible]
அவர்கள் நன்கொடையாக அளித்தது


### உசாத்துணைகள்


1. Andrew Steer( 1992): The Environment for Development, Finance and Development. Vol. 29. No. 2. June pp. 18-21.

2. Anil Agarwal and Sunitha Narain (1991): Global Warming in an Unequal World . Development and Cooperation. No 5, pp. 11-14.

3. Jodha. N.S. (1992): A Comment on 'Global Warming in an Unequal World, Global Environmental Change, Human and Policy Dimensions. Vol.2, No. 2, June pp. 97- 98.

4. Mohan Munasinghe and Kenneth King (1992): Protecting the Ozone Layer. Finance and development. Vol.29, No.2, June pp 24-25.

5. Thomas Malone and Gary Yohe (1992): Comments on 'Global Warming in an Unequal World' Global Environmental Change, Human and Policy Dimensions. Vol. 2, No.2. June pp. 99-100.

6. Thomas Peter Gallon and S.Verma (1984): Man and Environment . Development and Cooperation. No.1, Jan./Feb. pp. 23-24.

7............................(1989): Environmental Pollution. Economic Review, May, pp.3 - 4.

# உலக வங்கியின் அமைப்பு ரீதியான சீராக்கல் கொள்கையும் வறுமை தணிப்பும்

சி. அம்பிகாதேவி

## அறிமுகம்

அமைப்பு ரீதியான சீராக்கல் என்பது வளர்முக நாடுகளின் பொருளாதார நெருக்கடிகளையும், பின்னடைவுகளையும், அதனால் அவை எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளையும் கவனத்திற் கொண்டு இவற்றைச் சீர் செய்யும் நோக்குடன், பேரினப் பொருளாதாரச் செயற்பாடுகளை சீராக்கி, அதனூடாக எதிர்பார்க்கப்படும் பொருளாதார இலக்கினை அடைவதற்கான ஒரு முயற்சியாகும். அமைப்பு ரீதியான சீராக்கலின் நோக்கம் நிலை நிற்கக் கூடிய ஒரு வளர்ச்சிக்கான நிலையை வளர்முக நாடுகளில் உருவாக்குவதாகும். இந்த வகையான சீராக்கல் நிகழ்ச்சித் திட்டம் உலக வங்கியினாலும், நாணய நிதியத்தினாலும் கடந்த ஒரு தசாப்த காலமாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் செயற்பாட்டினால் உலகபொருளாதாரத்தின் பின்தங்கிய நிலைமையில் குறிப்பாக புதியகைத் தொழில் நாடுகளில் சமூக நலக்குறிக்காட்டிகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மேற் கூறிய நிறுவனங்களின் அதிகாரபூர்வமான வெளியீடுகள் கருத்து வெளியிட்டுள்ளன. ஆனால் இந்நடுத்தர வருமான நாடுகளின் அண்மைக் கால மேல் நோக்கிய பொருளாதார வளர்ச்சிக்கு பிரிட்டன்வூட்ஸ் இரட்டை நிறுவனங்களது அணுகுமுறையா அல்லது இவை தம்மளவில் மேற்கொண்ட புதிய பொருளாதார முயற்சிகளா காரணம் என்பது பற்றிய வாதப்பிரதிவாதங்கள் ஒருபுறமிருக்க, மறுபுறம் குறைவருமான நாடுகளின் சமூக, பொருளாதார நிலைமைகள் மேலும் மோசமடைந்துள்ளன என்பதே உண்மையாகும். இந்நாடுகளில் பொருளாதார நெருக்கடிகள் எதிர்பார்க்கப்பட்டதையும் விடக் கூடுதலாகப் பாதிக்கப்பட்டதையும், சீராக்கல் நிகழ்ச்சி எதிர்வு கூறப்பட்டதையும் விட வேகம் குறைவாகச் செயற்பட்டதையும், லத்தின் அமெரிக்கா, உபசகாராப் பகுதிகளில் அடிமட்ட வருமானம் பெறுவோரின் சமூக நல நிலைமைகள் மேலும் மோசமடைந்ததையும், பொருளாதாரத் தேக்க காலம் நீடித்திருப்பதையும் எண்பதுகளில் அவதானிக்கமுடிகிறது.

இதுகால வரையிலான அமைப்பு ரீதியான சீராக்கற் செயற்பாட்டினை முழுமையாக ஆராயும் நோக்கில் இக்கட்டுரை சீராக்கலிற்கான தேவை என்பதிலிருந்து அதன் விளைவுகள் வரை பல்வேறு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. இங்கு

1. சீராக்கலின் தேவையை வேண்டி நிற்கின்ற அல்லது துரிதப்படுத்திய உலக பொருளாதார நிகழ்வுகள்/காரணிகள் பற்றியும்
2. சீராக்கல் நிகழ்ச்சியின் நடைமுறைப்படுத்தல் பற்றியும்
3. சீராக்கல் திட்டத்தின் மூலம் இதுவரை உலகப் பொருளாதாரம் அடைந்து கொண்ட பலாபலன்கள் பற்றியும் ,
4. சீராக்கலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மாற்றுக் கொள்கைகள் பற்றியும் ஆராயப்படுகின்றது.

**சி. அம்பிகாதேவி**
B.A (Hons) Cey; M.A (Jaffna)
**சிரேஷ்ட விரிவுரையாளர், பொருளியல்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## எண்பதுகளின் உலக பொருளாதார நெருக்கடி

எண்பதுகளில் சர்வதேச பொருளாதார சூழலானது எண்ணெய் விலை உயர்வு, தொடர்ந்தேர்ச்சியாக அதிகரித்து வரும் பணவீக்கம், வெளிநாட்டு, உள்நாட்டு நிதிப்பற்றாக்குறை, கடன் சுமை, கைத்தொழில் நாடுகளின் மெதுவான வளர்ச்சி வேகம் என்பவற்றை உள்ளடக்கியதாக இருந்துள்ளது. இந்நிலைமை வளர்முக நாடுகளின் தேசிய சர்வ தேசிய அரசியல் பொருளாதாரக் கொள்கைகளுக்கு அச்சுறுத்தலாக அமைகின்ற அதே நேரம் பல பொருளாதாரப் பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளன. முக்கியமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வேகம் குறைவு அல்லது எதிர் கணிய வளர்ச்சிப் போக்கு, உயர்ந்தளவு பணவீக்கம், உயர் கடன் சேவை விகிதம், குறைந்தளவிலான உள்நாட்டு மூலதன உருவாக்கம், அதிகரித்துவரும் வேலையின்மை, வறுமை, வருமான சமமின்மை என்பவற்றை மேலும் தீவிரப் படுத்தி உள்ளன. இவ்வாறான பேரின பொருளாதார நெருக்கடிகளே 1980 களின் ஆரம்பத்தில் இருந்து பல வளர்முக நாடுகளின் அமைப்பு ரீதியான சீராக்கலை நடைமுறைப் படுத்த தூண்டிய காரணமாகும். சீராக்கல் கொள்கையானது வளர்முக நாடுகளில் சென்மதி நிலுவைப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணல், கடன் சுமையைக் குறைத்தல், நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியை ஏற்படுத்திகொள்ளல் என்ற மூன்று முதன்மை நோக்கங்களின் அடிப்படையில் செயற்பட்டு வருகிறது. இதனால் இப்பிரச்சனைகளை முக்கியமாக கொண்டுள்ள நாடுகள் வங்கியின் சீராக்கல் நிகழ்ச்சித் திட்டத்தில் இணைந்து செயற்படுகின்றன. முதல் விளைவுப் பொருள் ஏற்றுமதி நாடுகள் நீண்டகாலமாக தொடர்ச்சியான பாதகமான சென்மதி நிலுவையை அனுபவித்துவரும் நாடுகளாகவும், தயாரிப்புத் தொழில் ஏற்றுமதி நாடுகள், கடன்சுமை, பணவீக்கம் என்பனவற்றை அனுபவித்து வரும் நாடுகளாகவும் விளங்குகின்றன. மேற்கூறிய இரு தொகுதி நாடுகளும் தமது நாட்டு வளங்களின் பெரும் பகுதியினைக் கடன் சேவையாகச் செலுத்துவதுடன் வர்த்தக



கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்திற்கு
அவர்கள்

மாற்று விகிதத்தின் அடிப்படையில் கொள்வனவுச் சக்தியையும் இழக்கின்றன. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏற்பட்ட கொள்வனவுச் சக்தி இழப்பானது வறுமையை தீவிரப்படுத்துவதற்குத் தூண்டுகோலாக அமைகிறது. (Ahluwalia et al,1978 : 305 ). எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் தளம்பலுடைய அதே நேரம் மெதுவான வளர்ச்சி வேகத்தைக் கொண்டுள்ள நாடுகளாக விளங்குகின்றன. எனவே இவை குறித்த சீராக்கற் கொள்கையின் நோக்கம் தேசிய, சர்வதேசிய மட்டத்தில் இந்நாடுகள் அனுபவித்துவரும் பிரச்சினைகளுக்கான இறுதித் தீர்வாக நிலைத்து நிற்கக் கூடிய மெய்ப் பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்ளல் ஆகும்.

அட்டவணை 1. சீராக்கலுக்குட்பட்ட நாடுகள் தொகுதி ஒவ்வொன்றும் எவ்வாறு பேரினப் பொருளாதார நெருக்கடி களுக்குட்பட்டுள்ளன என்பதை எடுத்து விளக்குகின்றது. எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1980 களில் மெதுவான வளர்ச்சிப் போக்கினைக் கொண்டுள்ளது. தயாரிப்புத்துறை ஏற்றுமதி நாடுகள் குறிப்பாக இலத்தின் அமெரிக்க நாடுகளில் பண வீக்க விகிதம் 200 க்கு மேற்பட்டதாகவும் கடன் சுமையானது மொத்த பொருட்களின் வீதமாக நோக்குகையில் 275 க்கு மேற்பட்டதாகவும் காணப்படுகின்றது. இந்நிலையில் இந்நாடுகளின் பேரினப் பொருளாதாரக் கொள்கைகளை அடைந்து கொள்வதற்கு சீராக்கல் முயற்சி அவசியமானதாகும்.

**அட்டவணை 1: எண்பதுகளில் அமைப்பு ரீதியான சீராக்கலுக்குட்பட்ட நாடுகளின் பேரினப் பொருளாதார நெருக்கடிக்குறிகாட்டிகள்.**

| நாடுகள் தொகுதி / தலா வருமானம் (U.S.$ - 1989) | மொத்த உள்நாட்டு மூலதனம்-வருடாந்த சராசரி வளர்ச்சி வீதம் | | வருடாந்த சராசரி G.D.P. வளர்ச்சி வீதம் | | வருடாந்த சராசரி பணவீக்க வீதம் | சென்மதி நிலுவை நடைமுறைக்கணக்கு நிலுவை / G.N.P | | மொத்த வெளி நாட்டு கடன் சேவை/ ஏற்றுமதி | | வரவு செலவுத்திட்ட மிகை/ குறை வளர்ச்சிவீதம் G.N.P | வருமான சமமின்மை (1) | வறியோர்கள் மொத்த சனத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1973-80 | 1980-89 | 1965-80 | 1980-89 | 1980-89 | 1973-80 | 1980-81 | 1980 | 1989 | 1989 | 1989 | 1988 |
| எண்ணை ஏற்றுமதிநாடுகள் | | | | | | | | | | | | |
| 1. இந்தோனேசியா (500) | 24.5 | 30.4 | 7.0 | 5.3 | 8.3 | 0.1 | -2.8 | 13.9 | 35.2 | -7.5 | 0.51 | 62 |
| 2. நைஜீரியா (250) | 22.8 | 13.6 | 6.1 | -0.4 | 14.2 | 1.6 | -1.4 | 4.2 | 21.3 | -10.5 | — | 29 |
| 3. வெனிசுவெலா (2450) | 34.2 | 22.0 | 3.7 | 1.0 | 16.0 | 1.6 | 1.6 | 27.2 | 25.0 | Nil | 0.27 | 5 |
| முதல்விளைவு ஏற்றுமதி நாடுகள் | | | | | | | | | | | | |
| 1. பொலிவியா (620) | 24.9 | 12.1 | 4.4 | -0.9 | 391.9 | -6.4 | -10.2 | 35.0 | 31.3 | -1.6 | — | — |
| 2. மொரோக்கோ (880) | 25.9 | 25.3 | 5.7 | 4.1 | 7.4 | -9.0 | -6.1 | 32.7 | 32.2 | -4.6 | 0.24 | 16 |
| 3. இலங்கை (430) | 20.6 | 25.8 | 4.0 | 4.0 | 10.9 | -7.2 | -10.2 | 12.0 | 17.8 | -2.1 | 0.23 | 10 |
| தயாரிப்புத்தொழில் ஏற்றுமதி நாடுகள் | | | | | | | | | | | | |
| 1. மெக்சிக்கோ (2010) | 24.2 | 23.1 | 6.5 | 0.7 | 72.7 | -4.0 | -1.8 | 49.5 | 39.6 | -4.8 | — | 10 |
| 2. மலேசியா (2160) | 28.7 | 33.2 | 7.4 | 4.9 | 1.5 | 0.6 | -2.9 | 6.3 | 14.6 | -2.6 | 0.27 | 8 |
| 3. பிரேசில் (2540) | 24.0 | 21.5 | 9.0 | 3.0 | 227.8 | -4.6 | -1.8 | 63.1 | 31.3 | -14.9 | 0.12 | 8 |

ஆதாரம் : World Development Report 1991, World Bank.

(1) அடிமட்ட 40% தினரை உயர்மட்ட 20% தினரின் வீதமாகக் கணிப்பிடப்பட்டது.

## சீராக்கல் கொள்கையின் நடைமுறைகள்

உலக வங்கியின் சீராக்கல் கொள்கை பற்றி அதன் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பின்வருமாறு எடுத்துக் கூறப்பட்டது.

*"வளர்முக நாடுகளின் நடுத்தர கால செயற்திட்டத்திற்கும் அவற்றின் சென்மதி நிலுவைப் பிரச்சனைக்கும் அமைப்பு ரீதியான சீராக்கல் கடன் வழங்கல் ஊடாக வங்கி உதவி செய்யும். இவ்வகையான செயற்திட்டமல்லா நிகழ்ச்சிக் கடன்கள் வளர்முக நாடுகளின் வளங்களை உற்பத்தி திறன் மிக்கவையாக மாற்றுவதன்மூலம் பொருளாதாரத்தின் துரித வளர்ச்சியை அடைந்து கொள்ள முடியும்".* (WBAR, 1980 : p 67 ).

உலக வங்கியின் சீராக்கல் கொள்கையின் செயற்பாடுகளாவன;

1. இறைக் கொள்கை, நாணயக் கொள்கையூடாக உள்நாட்டு மூலவளங்களைத் திரட்டுதல்.
2. திறமையான சாதன ஒதுக்கை விலைக் கொள்கை என்பவற்றின் ஊடாகப் பொதுத்துறை முதலீடுகளை திறனுடையதாக்குதல்.
3. வர்த்தகம், உள்நாட்டு பொருளாதாரம் ஆகியவற்றை தாராளமயப்படுத்துவதன் மூலமும் பொதுத்துறை முயற்சிகளை முன்னேற்றுதல்.
4. சீராக்கல் செய்முறைக்கு ஆதரவாக நிறுவனரீதியான ஒழுங்கு படுத்தலை சீர்திருத்துதல்.

உள்நாட்டு மூலவளங்களைத் திரட்டுதல் எனும் செயற்பாடு இறை நாணய கடன் கொள்கைகள் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது. இக் கொள்கைகள் வரிச் சீர்திருத்தம் செய்வதன் மூலம் அரசாங்க வருவாயை அதிகரித்தல், மானியக் குறைப்பின் ஊடாக அரசாங்க செலவினத்தைக் கட்டுப் படுத்தல், வட்டிவீத சீர்திருத்தம், நாணயப் பெறுமதி சீராக்கம் என்பவற்றின் மூலம் கடன் கொள்கையை, நாணய கொள்கைகளைச் சீர் திருத்தல் என்ற வகையில் இது செயற்படுத்தப்படுகிறது. இதன் மூலம் எதிர் பார்க்கப்படும் விளைவு வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையின் அளவைக் குறைப்பதாகும். பொதுத் துறை சாதன ஒழுங்கு படுத்தலை திறமையுடையதாக மாற்றுதல் என்ற செயற்பாட்டின் கீழ் பொதுத்துறை முதலீடுகளை நியாயமான முறையில் செயற்பட வழிவகுத்தலாகும். அடுத்து பொருளாதார தூண்டுதல்களின் சீரமைப்பு செயற்பாட்டின் கீழ் வர்த்தக சீராக்கலை அதாவது ஒரு பண்ட ஏற்றுமதியில் தங்கியிருப்பதற்குப் பதிலாக பன்முகப் படுத்தப்பட்ட ஏற்றுமதி, இறக்குமதி தீர்வைகள் அல்லது தொழிற் பாதுகாப்புகளைக் குறைந்தமட்ட அளவில் பேணுதல் என்பதையும்மேற்கொள்கிறது. அத்துடன் உற்பத்திக் காரணிகளில் அமைய செலவை பிரதிபலிக்கக் கூடிய வகையில் சந்தையில் பொருட்களின் விலை நிர்ணயத்தை மேற்கொள்வதும் முக்கியமாகும். இது சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு பற்றாக் குறையின் அளவினைக் குறைத்து உறுதியான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இறுதியாக நிறுவன ரீதியான துறைகளைப் பலப்படுத்தல் என்பது மேற்கூறிய செயற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்கு வசதியாக சில ஆதார சேவைகளை நிறுவுவதைக் குறிப்பிடலாம்.

உதாரணமாக விவசாய கொள்கைக்கு விவசாய விரிவாக்க சேவையையும், வர்த்தக சீர்திருத்தம் வரிக் கொள்கை என்பவற்றிற்கு உதவியாக சுங்க பகுதியையும் இவ்வாறான நிறுவன ரீதியான முயற்சிகள் என குறிப்பிடலாம். மேற்கூறிய வகையிலான பேரினப் பொருளாதார கொள்கைகளையும் அவற்றுடன் இணைந்த நிறுவன ரீதியான செயற்பாடுகளையும் கவனத்தில் கொண்ட ஒரு நீண்ட கால கடன் திட்டமாக உலக வங்கியின் சீராக்கல் கடன் திட்டம் விளங்குகிறது. சீராக்கல் கடன் திட்டத்தின் முதன்மை செயற்பாடுகளை அட்டவணை 2 இல், 3வது நிரல் விளக்குகிறது. முக்கியமாக பொருளாதார செயற்பாடுகளில் அரசாங்கத்தின் மிகைச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தல், அதனடிப்படையில் இறைக் கொள்கைகளை கட்டுப்படுத்துதல், வர்த்தகத்துறை, நிதித்துறை தாராளமயமாக்குதல், நாணயப் பெறுமதி இறக்கம் என்பன முக்கிய செயற்பாடுகள் ஆகும்.

## சீராக்கலின் பெறுபேறுகள்

வங்கியின் சீராக்கல் கொள்கையின் முதன்மை நோக்கம் வளர்முக நாடுகள் சார்பாக நிலைத்திருக்க கூடிய அபிவிருத்தியினை அடைந்து கொள்வதற்கான முயற்சியை மேற்கொள்வதும் இதற்காக தேவைப்படும் நாடுகளுக்கு வெளிநாட்டு வளங்களைத் திரட்டி வழங்குவதுமாகும். வங்கியின் சீராக்கல் முயற்சிகள், குறித்த இலக்கினை அடைய முற்பட்டபோது அவை அந்நாடுகளின் கீழ் மட்டத்தவர்களை மேலும் வறுமைக்குள்ளாக்கியது மட்டுமன்றி சில நாடுகளின் அபிவிருத்திக் குறிகாட்டிகள் எதிர்பார்க்கப்பட்டதிலும் குறைவாக நடந்தேறியமைக்கான ஆதாரங்களை உலக வங்கியுடன் தொடர்புடைய அண்மைக்கால ஆய்வுகளில் இருந்து அறிய முடிகிறது. ( Ribe and Carvalho; 1990 ).

அட்டவணை 2 இல் 4வது நிரலில் சீராக்கல் கொள்கையால் நாடுகள் அடைந்த பலாபலன்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. பணவீக்கம், வருமான சமமின்மை, வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை, வறுமையின் பரம்பல் என்பவற்றில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமை பொதுவான செயற்பாடாக உள்ளது. உதாரணமாக இந்தோனேசியாவை எடுத்து நோக்கின் சீராக்கலின் போது நடுத்தர நாடாக இருந்து சீராக்கல் முடிவடையும் நிலையில் (1989 இல் முடிந்தது) குறைவருமான நாடு என்ற வகையில் தலா தேசிய உற்பத்தியில் வீழ்ச்சி கண்டிருக்கிறது. 1986 இல் யு.எஸ்.டொலர் 490 ஆக இருந்த இந்தோனேசியாவின் தலாவருமானம் 1987 இல் 450 ஆகவும் 1988 இல் 430 ஆகவும் குறைவடைந்துள்ளது. ( Tjondronegono et al, 1992 ).

சீராக்கல் கொள்கையின் கீழ் பொதுச் செலவுக் குறைப்பு என்பது கீழ் மட்ட வருமானம் பெறுபவர்களைத் தாக்க கூடிய வகையில் செயற்பட்டது.

(1) அரசாங்கத்தின் நலச்செலவீடுகளில் குறைப்பு எனபதனால் உணவு மற்றும் விவசாய உள்ளீடுகளின் மானியங்கள் குறைப்பு செய்யப்பட்டன.

(11) பொது முதலீடு மீள் ஒழுங்கு படுத்தல் அல்லது திறமையான சாதன ஒதுக்கீடு என்பதனால் கட்டுமானம் மீதான அரசாங்க செலவீனம் குறைக்கப்பட்டது.

இவ்விரு செயற்பாட்டின் மூலம் இறுதியாக பாதிக்கப் படுபவர்கள் சமூகத்தின் கீழ் மட்டத்தவர்களும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களும் ஆவர். நலன் புரிச் செலவுகளின் மூலம் போசாக்கு மட்டத்தையும் எழுத்தறிவு மட்டத்தையும் கணிசமான அளவு உற்பத்தி திறனையும் பாதுகாத்து வந்த உழைப்பாளர் வர்க்கம், சமூக நலக் கொள்கைக் குறைப்பின் காரணமாக இவ்வகைக் குறிகாட்டிகளைப் போதுமான அளவுக்கு நிலை நிறுத்த முடியாதுள்ளது. இத்துடன் இணைந்த செயற்பாடாக கட்டுமான வசதிகளின் மீதான அரச செலவீனம் (1) தொழிலாளர்களின் மெய் கூலிக்குறைப்பு (11) பொது வேலைத்திட்டங்களில் சில குறைக்கப்படல் எனபவற்றின் ஊடாக குறைக்கப்பட்டபோது, இத்துறைகளில் வேலைவாய்ப்பு

அட்டவணை -2 : நாடுகளின் அடிப்படையில் சீராக்கல் கொள்கையின் நடைமுறை விளைவுகள்

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| நாடுகள் | நெருக்கடியின் தன்மை | முதன்மை சீராக்கற் கொள்கைகள் | சீராக்கலின் போது பொருளாதரவிளைவுகள் |
| (1) இந்தோனேசியா | எண்ணெய் விலை வீழ்ச்சி, வர்த்தக மாற்று வீதக் குறைவு | வட்டி வீத தாராள மய மாக்கல், பெறுமதியிறக்கம், வரிச்சீர்திருத்தம், வருமான வரி அறிமுகம், செலாவாணி வீத முகாமைத்துவம் மூலதனச் செலவுக் குறைப்பு சமூக செலவினக் குறைப்பு | வருமானச் சமமின்மை குறைக்கப்பட்டது. ஆனால் வறுமை கூடியுள்ளது (62%), தலாவருமான வீழ்ச்சி. |
| (2) .நைஜீரியா | எண்ணெய் விலை வீழ்ச்சி உறுதியின்மையும் கடன் சேவை அதிகரிப்பும் | எண்ணெய் இறக்குமதியில் மட்டும் தங்கியிருத்தற்குப் பதிலாக வேறு துறைகளையும் - தயாரிப்புத் தொழில் - விஸ்தரிப்பு முயற்சி, கட்டுப் படுத்தப்பட்ட இறக்குமதிகள் | மொத்த உள்நாட்டு உற்பத்தி. வீழச்சி, வரவு செலவுத்திட்டப் பற்றாக் குறை அதிகரிப்பு (-10.5%), வறுமை அதிகரிப்பு (9%). |
| (3) இலங்கை | 1984, 89 தவிர்ந்த 80 களில் தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்களின் விலை வீழச்சி. 80 களின் பின்னரைப் பகுதியிலிருந்து பாதுகாப்பு செலவினம் கூடுதல், வரவு செலவுத்திட்டப் பற்றாக் குறை அதிகரிப்பு. | நலச்செலவுக் குறைப்பு, வர்த்தக தாராள மயம், நாணயப் பெறுமதியிறக்கம் ஏற்றுமதித்துறை தாராளமயம் வட்டி வீத சீராக்கம் | வருமானச் சமமின்மை அதி கரிப்பு, கிராமிய வறுமை அதி கரிப்பு, வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை அதிகரிப்பு |
| (4) மலேசியா | றப்பர், தகரவிலை வீழ்ச்சி வர்த்தக மாற்று வீத சிதைவு, பொதுமுதலீடு கூடியதால் இறைக் கொள்கையில் விரிவுத் தாக்கம் | இறுக்கமான இறைக்கொள்கை தனியார் மயப்படுத்தல் | நகர வறுமை கூடியதாக உள்ளது. |
| (5) மெக்சிக்கோ | 80 களின் முற்பகுதிகளில் வட்டி வீதக் கொடுப்பனவு வெளிநாட்டுக் கடன்சுமை, உயர் பண வீக்கம் இவற்றினால் இறைக்கொள்கைசென்மதி நிலுவைப் பிரச்சினை. | இறுக்கமான இறைக்கொள்கை நாணயக் கொள்கை, செலா- வனி நாணயப் பெறுமதியிறக்- கம், வர்த்தகம், தாராளமயப் படுத்தல், பொதுத்துறை முயற் சிகளைத் தாராளமயப்படுத்தல். | பணவீக்க உயர்வு (65%) பங்குச் சந்தை நெருக்கடி |

பெற்றவர்களில் பெரும்பாலானோர் கீழ் மட்ட வருமானம் பெற்றவர்களாகவும் இருந்தமையால் இவ்வகை சீராக்கல் முயற்சியானது இவர்களை மேலும் பாதிப்படையச் செய்கிறது. அடுத்து விவசாய உள்ளீடுகளுக்கான மானியக் குறைப்பினை மேற்கொண்ட போது இது விவசாயிகளின் இலாப எல்லையைக் குறைப்பதற்கு வழிவகுக்கின்றது. இத்துடன் முதல் விளைவில் ஏற்பட்ட தேறிய லாபம் சில சந்தர்ப்பங்களில் எதிர்கணியமாக அமைந்ததனால் இவர்கள் வறுமைக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டது. 1980 களின் நடுப்பகுதியில் உலக சந்தையில் தகர விலை வீழ்ச்சியடைந்த போது, சுரங்கத் தொழில் ஏற்றுமதி நாடுகளின் முன்னணியில் ஒன்றான பொலிவியாவில் இவ்விலை வீழ்ச்சியின் விளைவாகப் பல சுரங்கத் தொழிலாளர் வேலை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எவ்வாறெனினும் சீராக்கல் முயற்சியின் மேற்கூறிய நிகழ்வுகளும், உலக சந்தை நிலமைகளும் சமகால நிகழ்வாக செயற்பட்டிருந்தமையால், குறைவருமான நாடுகளின் அடிமட்டத்தவரின்பொருளாதார நிலைமை மேலும் மோசமடையத் தொடங்கியது. இந் நிலையில் நகர- கிராமிய வருமானச் சமமின்மை அதிகரித்தல், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வருவோர் தொகை அதிகரித்தல், உற்பத்தித்திறன் வீழ்ச்சி என்பன தவிர்க்க முடியாதபடி தோற்றம் பெறுகின்றன.

## சீராக்கலும் சமூக செலவினமும்

அண்மைக் காலங்களில் சீராக்கற் கொள்கையின் விளைவாக பொருளாதாரத்தில் தோன்றியுள்ள சமூக செலவினம்(Social cost) பற்றிக் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. சீராக்கல் கொள்கையினால் கூடுதலாகப் பாதிக்கப்பட்டவர்கள் வறியவர்களே. அதாவது மெய்க்கூலி, மானியம் என்பவற்றின் குறைப்பு, வேலை இழப்பு என்பன வறியவர்களின் கொள்வனவுச் சக்தியில் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலும் வளர்முக நாடுகளின் கடந்த காலப் பொருளாதாரக் கொள்கைகளும், உள்நாட்டு கலகங்கள், இனக்கலவரங்கள் என்பனவும் இந்த வறிய பிரிவினரை மிகவிரைவில் வறுமைக்குட்படுத்தியது. மேற்கூறிய பிரச்சினைகளின் அடிப்படையில் சில வளர்முக நாடுகள் வறியோரை இலக்காகக் கொண்டு சிறப்பு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

சீராக்கலின் சமூக செலவு என்பது சீராக்கல் கொள்கையினால் பாதிக்கப்பட்டவர்களின் எதிர்கால நன்மை கருதி, மாற்றுத்திட்டங்களை அமுல்படுத்தி, அதன்மூலம் அவர்களை வறுமையிலிருந்து விடுவிப்பதைக் குறிப்பிடுகின்றது. சீராக்கல் நிகழ்ச்சியினால் சமூகத்தின் கீழ்மட்டத்தவருக்கு உடனடியாக ஏற்பட்ட தாக்கத்தை தணிப்பதற்கும், அவர்களை அபிவிருத்தி நீரோட்டத்தில் பங்கு பெறச் செய்வதற்குமென உதவி வழங்கும் நிறுவனங்கள்/ நாடுகளினால் மேற்கொள்ளப்படும் சில சிறப்புத் திட்டங்களே சமூகச் செலவு என்பதற்குள் அடங்குகின்றன. இவ்வகையான சமூகச் செலவுத் திட்டங்களாகத் தெரிவு செய்யப்பட்ட நுகர் பொருட் தொகுதி சார்பாக மானியங்களை அமுல்படுத்தல், சிறப்பு வேலைத்திட்டங்கள், போசாக்குச் செயற்திட்டங்கள், வேலை இழந்தவர்களுக்கு நட்டஈடு, இலகு கடன் என்பவற்றை உள்ளடக்கிய மீள் ஒழுங்குபடுத்தல் திட்டம் (Redeployment programe) இடம்பெயர்ந்த நகர்த்துறை தொழிலாளர்க்கு மீள் குடியேற்றம் என்பன அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. மானியங்கள் தொடர்பான செயற்பாடுகள் என்பது வறியவர்களால் நுகரப்படும் பொருட்களுக்கு மீண்டும் அவர்களின் கொள்வனவு ஆற்றலை அதிகரிக்கும் பொருட்டு உலகவங்கியின் உதவியுடன் அந்நாட்டு அரசாங்கங்களினால் வழங்கப்படும் உதவு தொகையாகும். சீராக்கற் கொள்கையின் கீழ் மானியங்கள் மீதான அரச செலவினம் குறைக்கப்பட்டபோது இலகுவில் பாதிக்கப்பட்டவர்கள் உணவு மானியத்தைப் பெற்ற வறியவர்களே. இவ்வாறான மானியங்களை அமுல்படுத்துவதற்கான இலக்குடைய பிரிவினராக (Targeted Group) போசாக்குக் குறைந்த சிறார்கள், கர்ப்பிணி/ பாலூட்டும் தாய்மார் போன்றோர் முக்கியமாகக் கவனத்திற் கொள்ளப்பட்டனர். இவ்வாறான மானியத் திட்டங்களை மொறக்கோ, மெக்சிக்கோ, பிலிப்பைன்ஸ், வெனிசூலா என்பன அமுல்படுத்தி வருகின்றன. மொறக்கோவிலும் பிலிப்பைன்ஸிலும் வறியோரின் பிரதான உணவு வகைமீதும் மெக்சிக்கோவில் சில தெரிவுசெய்யப்பட்ட பகுதிகளில் உணவு, பால்வினியோகம், பாடசாலை மதிய உணவு என்பவற்றின் மீதும் வறிய விவசாயிகளைக் கவனத்தில் கொண்டு உரமானியத் திட்டம் மீதும் இச்சமூக செலவுகள் அமுல்படுத்தப்படுகின்றன.

அடுத்து சிறப்பு வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டங்களாக சீராக்கல் காலத்தில் வேலை இழந்தவர்களுக்கும் மெய்க் கூலி குறைக்கப் பட்டவர்களுக்கும், குறிப்பாக சந்தைக் கூலியைவிட குறைவான கூலி வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் நட்ட ஈடு வழங்கி அவர்களின் மெய் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் சில நிதிவசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வகையான செயற்திட்டங்களுக்கு உதாரணமாக பொலிவியாவில் தாபிக்கப்பட்ட அவசர சமூகநிதியையும் சிலியில் தாபிக்கப்பட்ட அவசர வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தையும் குறிப்பிடலாம். இவற்றைத்தவிர மடகஸ்கார், கானா, டோகோ போன்ற நாடுகளின் பாதிக்கப்பட்டவர்கள் சுய தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்காக நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் சிறப்புக்கடன்கள், மீள் பயிற்சிகள், உபகாரப்பணம் என்பன அமுல் படுத்தப் படுகின்றன. பொலிவியாவில் 1987 இல் ஆரம்பிக்கப்பட்ட அவசர சமூக நிதி இலக்குடைய பிரிவினரை நோக்கி செயற்படுவதில் திறனுடையதாக இருந்துள்ளது. இதன்கீழ் 14 போசாக்குத் திட்டங்கள் 1988 இல் இருந்து அறிமுகம் செய்யப்பட்டு பொலிவியாவின் மொத்த வறிய சனத்தொகையில் 40 வீதத்தினருக்கு இத்திட்டத்தின் மூலமான பலாபலன்கள் கிடைக்கச் செய்துள்ளது.

சீராக்கல் காலத்தில் கட்டுமானத்துறை முதலீட்டு குறைப்பின் விளைவாக வேலை இழந்த நகர்ப்புற வறியோரை மீண்டும் தேசிய உற்பத்தியில் பங்கெடுக்கும் பொருட்டு முக்கியமாக விவசாய உற்பத்தியில் ஈடுபடவைப்பதற்காக பயிர்ச்செய்கை பிரதேசங்களை நோக்கி மீள் குடியேற்றும் முயற்சியில் வங்கி ஈடுபடுகின்றது.

மேற்கூறிய குறுங்கால உடனடித்திட்டங்களை விட புவியியல் அடிப்படையில் வறிய பிரதேசங்களில் பல்வேறு துறைகளையும் உள்ளடக்கிய பாரிய நீண்டகாலத் திட்டங்கள் உலக வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றில் ஆபிரிக்காவின் உப சகாரா பிராந்தியங்களுக்கென 1985 அளவில் சிறப்பாகத் தாபிக்கப்பட்ட சிறப்பு செயற்றிட்டம் ( Special Action Programe) 1987 இல், சீராக்கலின் சமூக பரிமாணங்கள் ( Social Dimensions of Adjustment - S D A ) என்பன நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் அடிமட்ட 40 வீதத்தினரை இணைக்கும் முயற்சிகளாகும். வறியோர் சார்பான இவ்வகைத் திட்டங்களின் செயற்திறன்களை மதிப்பிடுவதற்கு இவற்றின் காலமுதிர்ச்சி குறைவாக உள்ளமை ஒரு தடையாக உள்ளது.

வறியவர்களைப் பொருளாதார அபிவிருத்தி நீரோட்டத்தில் கலந்து கொள்ளச் செய்வதன் மூலமே நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியை அடைந்து கொள்ள முடியும். வளர்முக நாடுகள் சார்பாக உலகவங்கி இவ்வகையான கொள்கைகளைக் கொண்டிருந்த போதிலும் இக் கொள்கை நடைமுறையின் இறுதி விளைவாக உலகின் ஒரு பகுதி மக்கள் இதிலிருந்து விலக்கப்பட்டவர்களாகவே இன்னமும் உள்ளனர். இவ்வகையில் குறைவருமான நாடுகளில் விலகிய வளங்களை உற்பத்தி திறனுடையவையாக மாற்றுவதன் மூலமே இந்நாடுகளின் பொருளாதாரத்தில் துரித வளர்ச்சியை ஏற்படுத்தலாம். அத்துடன் இவ் வளர்ச்சியை நிலைநிறுத்துவதற்கு நிறுவன ரீதியான முயற்சிகளும் அதனை ஏற்படுத்திக் கொடுக்க கூடிய சாதகமான அல்லது குழப்பமற்ற அரசியல் பொருளாதார சூழல்களும் இந்நாடுகளில் நிலவுவது அபிவிருத்திக்கான முன்தேவையாகும்.

(தொடர்ச்சி... 48 ம் பக்கத்தில்)

# தனியார் மயமாக்கல்

**தேவராஜன் ஜெயராமன்**

இன்று இலங்கையில் தனியார்மயமாக்கல் பற்றி பரவலாகப் பேசப்படுகின்றது. இது தொடர்பான செய்திகள், கட்டுரைகள் என்பன பலபுதினப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பலர் மத்தியில் தனியார்மயமாக்கலும் மக்கள் மயப்படுத்தலும் ஒன்றா? அல்லது இரண்டும் வேறுபட்ட செயற்பாடுகளா என்ற ஐயம் காணப்படுகிறது. இக்கட்டுரை மூலம் தனியார்மயமாக்கலும் மக்கள்மயப்படுத்தலும் ஒன்றா? தனியார்மயமாக்கல் மூலம் எதிர்பார்த்த நன்மைகள் எவை? எந்தளவுக்கு அவை அடையப்பட்டுள்ளது ஆகிய வினாக்களுக்கு விடை காணுவது அவசியமானதாகும்.

தனியார்மயமாக்குதல் அல்லது தனியார்மயப்படுத்தல் எனப்படுவது அரசிற்கு சொந்தமான தொழில்முயற்சிகளை அதாவது பொதுத்துறை தொழில்முயற்சிகளை தனியாரிடம் கையளிப்பது அல்லது விற்பது என்பதனைக் குறிக்கின்றது. அந்த வகையில் இத்தனியார்மயமாக்கல் செயற்பாடானது இலங்கையில் மட்டுமன்றி பல உலக நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கொள்ளப்பட்டும் வருகின்றது. அபிவிருத்தியடைந்த நாடுகள், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள், சோஷலிச நாடுகள் பலவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம். பிரிட்டனில் இருபதுக்கும் மேற்பட்ட வெவ்வேறு வகையான தொழில் முயற்சிகள் தனியார்மயமாக்கப்பட்டுள்ளது. பிரான்சில் பலநிறுவனங்கள் தனியார்மயமாக்க அடையாளம் காணப்பட்டும், ஏற்கனவே சில நிறுவனங்கள் தனியார்மயமாக்கப்பட்டும் உள்ளது. ஜேர்மனி, ஜப்பான், கனடா, நெதர்லாந்து, மெக்சிக்கோ, ஸ்பெயின், துருக்கி ஆகிய நாடுகளிலும் தனியார்மயமாக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலும் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது. பங்களாதேஷில் பலபிடவை, இரசாயன கைத்தொழில் ஆலைகள் தனியாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் அரிசி, பருத்தி, மா ஆலைகள் தனியார் மயமாக்கப்பட்டுள்ளன.

ஆனால் இலங்கையைப் பொறுத்து "தனியார்மயமாக்கல்" மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட செயற்பாடானது "மக்கள்மயப்படுத்தல் என்ற பதம் மூலம் மாற்றமடைந்துள்ளது. இவையிரண்டும் ஒருவகையான செயற்பாடுகளைக் குறிக்கும் பதங்களா என ஆராய்வோம். ஆங்கிலத்தில் தனியார்மயமாக்கல், மக்கள்மயப்படுத்தல் என்பன முறையே(Privatization, Peoplisation) என அழைக்கப்படுகின்றது. ஆங்கில அகராதியில் தனியார்மயமாக்கலைக் குறிப்பிடும் Privatization என்ற சொல்லிற்கு விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் மக்கள்மயப்படுத்தலைக் குறிப்பிடும் Peoplisation என்ற சொல் காணப்படவில்லை. இந்தவகையில் இது ஒரு புதிய கலைச் சொல்லாக இலங்கையில் பயன்படுத்தப்படுகிறது எனவும் எண்ணத்தூண்டுகின்றது. இந்தவகையில் இவ்விரண்டு சொற்களின் கருத்தினை ஆராயமுற்படுவோம். தனியார்மயமாக்கல், மக்கள்மயப்படுத்தல் ஆகிய இரு செயற்பாடுகளும் பொதுத்துறைக்கு சொந்தமான சொத்துக்களை தனியார் நிறுவனங்களிடம் கையளித்தல் அல்லது விற்பனை செய்தல் என்ற கருத்தினை வழங்குகின்றது. ஆனால் மக்கள்மயப்படுத்தல் எனப்படுவது பரந்தளவிலான முறையில் பொதுத்துறை சொத்துக்கள் உரிமை மாற்றப்படுவதனைக் குறிக்கின்றது. மக்கள்மயப்படுத்தலின் போது பொதுத்துறைக்கு சொந்தமான சொத்துக்களை தனியே தனியார்நிறுவனங்களிற்கு விற்பனை செய்வது மட்டுமன்றி, பொதுமக்கள், ஊழியர்கள் ஆகியோருக்கும் பங்குகள் வழங்கப்படும் நடவடிக்கைகளை உள்ளடக்கிய செயற்பாடாகும். இதன் மூலம் மக்கள்மயப்படுத்தல் கருமமானது பெருமளவில் பொதுமக்கள் உடமையாளராவதற்கான வசதியினை அளிக்கின்றது.

மக்கள் மயப்படுத்தல் திட்டத்தின் கீழ் பொதுத்துறை முயற்சியின் உடமையில் 51% முதல் 60% மான பங்குகள் கூட்டுமுதலீட்டாளருக்கு (Corporate Investor) வழங்கப்படுகிறது. 10% மான பங்குகள் ஊழியருக்கு அன்பளிப்பாக வழங்கப்படுகிறது. 30% மான பங்குகள் பொதுமக்களுக்கு பங்குச் சந்தையூடாக வழங்கப்படுகின்றது. இந்தவகையில் மக்கள்மயப்படுத்தப்பட்ட ஒரு நிறுவனத்தில் உடமையாளராக மூன்று வகுதியினர்கள் காணப்படுவார்கள்.

1. கூட்டுமுதலீட்டாளர்கள் 51 – 60%
2. ஊழியர்கள் 10%
3. பொதுமக்கள் 30%

உதாரணமாக இலங்கை ஒக்சிஜின் கம்பனி லிமிட்டெட்டில் (Ceylon Oxygen) நோர்வேயைச் சேர்ந்த Norske Hydro நிறுவனம் 60% மான பங்குகளையும், ஊழியர்கள் 10% பங்குகளையும் பொதுமக்கள் 30% மான பங்குகளையும் உடமையாளராகக் கொண்டுள்ளனர். எனவே இது மக்கள் மயப்படுத்தப்பட்ட ஒரு நிறுவனம் என்ற அந்தஸ்தினை பெற்றுள்ளது. அதாவது கூட்டுமுதலீட்டாளர், பொதுமக்கள், ஊழியர்கள் ஆகியோர் உடமையாளராகும் போது மக்கள் மயப்படுத்தல் நடவடிக்கை பூரணத்துவம் அடைகின்றது எனக்கூறுவது பொருத்தமானதாகும். மக்கள் மயப்படுத்தல் மூலம் கூட்டு முதலீட்டாளருக்கு பங்குகள் வழங்குவதன் மூலம் அனுபவமுள்ள சிறந்த, திறன்மிக்க முகாமையினை நிறுவனத்தில் ஏற்படுத்த முடியும். ஊழியருக்கு 10% மான பங்குகள் இலவசமாக வழங்கப்படும் போது ஊழியர்களும் உடமையாளராவதற்கான வாய்ப்பினை அளிக்கின்றது. ஊழியர்கள் நிறுவனத்தில் சேவைபுரிந்த

தேவராஜன் ஜெயராமன்
B.Com(Hons); MBA
விரிவுரையாளர்
வணிக முகாமைத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஆண்டுகளின் அடிப்படையில் இலவசமாக பங்குகள் வழங்கப்படுவது நிறுவனத்தில் ஊழியர்களுக்கான தொடர்பினை அதிகரிப்பது மட்டுமன்றி அவர்களின் சேவைக்கு மதிப்பளிப்பதுடன் அதனை நியாயப்படுத்துவதாகவும் அமைகின்றது.

பொதுமக்களுக்கு 30% மான பங்குகளை கொள்வனவு செய்ய வாய்ப்பளிப்பதன் ஊடாக பொதுமக்களின் முதலீடுகள் ஊக்கப்படுத்தப்படுகின்றது. அதாவது சாதாரண மக்களும் தமது சேமிப்புகளை பாரிய திட்டங்களில் முதலீடு செய்வதற்கான வாய்ப்பினை மக்கள்மயப்படுத்தல் திட்டம் வழங்குகின்றது. இந்தவகையில் மக்கள்மயப்படுத்தல் திட்டம் மூன்று வகுதியினரை முதலீடு செய்வதற்கான வாய்ப்பினை அளிப்பதன் ஊடாக மூன்று வகையான நோக்கத்தினை அடைவதற்கு உதவுகின்றது எனக் கூறுவதும் பொருத்தமாகும். இலங்கையைப் பொறுத்து, 1985ஆம் ஆண்டளவில் பொதுத்துறை நிறுவனங்களின் கூடிய நிதிச்சுமை காரணமாக அரசு தனியார்மயமாக்கலை கொள்கை அளவில் ஏற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டது. பொதுத்துறை நிறுவனங்களில் காணப்பட்ட பிரதான குறைபாடுகளாக பின்வருவன அடையாளம் காணப்பட்டன.

(1) பல பொதுக் கூட்டுத்தாபனங்கள் நட்டத்தில் இயங்கியமை.

(2) கூட்டுத்தாபனங்களில் தேவைக்கு அதிகமான ஊழியர்கள் காணப்பட்டமை.

(3) பழைய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டமை.

(4) பணித்துறைக்கட்டுப்பாடு. இது சிவப்புநாடாவுக்கு வழிவகுத்தது.

(5) அனேகமான கூட்டுத்தாபனங்கள் திறமையானவர்களை கவரவும், அவர்களைக் கூடியகாலம் சேவையில் வைத்திருக்கவும் முடியவில்லை.

(6) அபிவிருத்தித்திட்டங்களிற்கு ஒதுக்கப்பட்ட நிதிகளை பலவீனமான கூட்டுத்தாபனங்களின் செயற்பாடுகளிற்கு மானியமாகப் பயன்படுத்தப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் கூட்டுத்தாபனங்கள் தொடர்பாக மூன்று மாற்றுவழிகள் காணப்பட்டன. அவையாவன;

(அ) கூட்டுத்தாபனங்களை மூடுதல்

(ஆ) கூட்டுத்தாபனங்களைத் தொடர்ந்தும் இயக்குவிக்கும் பொருட்டு நிதியினை வழங்குதல்

(இ) கூட்டுத்தாபனங்களைத் தனியார்மயமாக்குதல்.

இம்மூன்று மாற்றுவழிகளையும் தனித்தனி பரிசீலனை செய்யும் போது, கூட்டுத்தாபனங்களை மூடுதல் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியினைப் பொறுத்து புத்திசாலித்தனமானதல்ல. விரலில் காயம் ஏற்படும் போது, அக்காயத்தினைக் குணமாக்குவதற்குப் பதிலாக விரலினை வெட்டி எறிவதனை ஒத்ததாக இது அமையும். கூட்டுதாபனங்களைத் தொடர்ந்தும் இயக்குவிக்கும் பொருட்டு நிதியினை வழங்குதல் அரசின் நிதிச்சுமையினை மீண்டும் அதிகரிக்கும். இந்தவகையில் தனியார்மயமாக்கலைப் பற்றிச் சிந்திப்பதே சிறந்ததும், சாத்தியமானதொன்றாகும் என்ற கருத்து உணரப்பட்டதனால் தனியார்மயமாக்கல் தொடர்பான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன. 1985ம் ஆண்டில் தனியார்மயமாக்கலை செயற்படுத்தும் ஆரம்பகட்டமாக ஆறு அங்கத்தவர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு பின்வரும் விடயங்கள் தொடர்பாக ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி வேண்டப்பட்டது.

(1) கம்பனிகளாக மாற்றப்படவேண்டிய பொதுக் கூட்டுத் தாபனங்கள், அரசினால் பொறுப்பு ஏற்கப்பட்ட கம்பனிகள்,மாற்றப்படவேண்டிய ஒழுங்குமுறை, கம்பனிகளாக மாற்றப்படவேண்டிய காலம்.

(2) ஒவ்வொரு பொதுக்கூட்டுத்தாபனத்தினதும் சொத்து பொறுப்பு பற்றிய மதிப்பீடு.

(3) கம்பனிகளாக மாற்றப்படவுள்ள பொதுக் கூட்டுத்தாபனம் அல்லது சுவீகரிக்கப்பட்ட கம்பனிகளில் பங்குகளை விற்பனை செய்வது தொடர்பான நடைமுறைகள்.

(4) கம்பனிகளாக மாற்றப்படவுள்ள பொதுக்கூட்டுத்தாபனங்களில் ஊழியர்களை உடமையாளராக மாற்றுவதற்கான திட்டம்.

(5) கம்பனிகளாக மாற்றப்படும் போது வேண்டப்படாத ஊழியர்களின் சேவைகள் தொடர்பாக கொடுக்க வேண்டிய நஸ்டஈடு

ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையைத் தொடர்ந்து, பொதுக்கூட்டுத்தாபனங்களையும், அரசினால் சுவீகரிக்கப்பட்ட கம்பனிகளையும் பொதுக்கம்பனிகளாக மாற்றும் பொருட்டு "23 ஆம் இலக்க 1987 ஆம் ஆண்டு பொதுக் கூட்டுத்தாபனங்களையும் அரசினால் சுவிகரிக்கப்பட்ட கம்பனிகளையும் பொதுக் கம்பனிகளாக மாற்றும் சட்டம்" 1987 மே மாதம் 15 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது. தனியார்மயமாக்கல் என்னும் போது அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் முகாமையினை தனியாரிடம் கையளித்தல் என்பது பொதுவான கருத்தாகும். எனினும் தனியார்மயமாக்கல் என்னும் போது அரசுதனியுரிமை வகித்து வந்த நிறுவனங்களில் தனியாரையும் ஈடுபட அனுமதி அளித்தல், அரசநிறுவனங்களின் முகாமையினை தனியாரிடம் கையளித்தல், அரச ஒப்பந்த வேலைகளில் தனியாரும் ஈடுபட அனுமதியளித்தல் ஆகிய சகல அம்சங்களும் தனியார்மயமாக்கல் என்ற கருத்தினைக் குறிக்கும். பல சர்வதேச நிறுவனங்களின் ஆதரவுடன் தனியார்மயமாக்கல் வேகமாக செயற்படத் தொடங்கிய பொழுதிலும், இது ஒரு சர்ச்சைக்குரிய விடயமாக இலங்கையில் காணப்பட்டது. பலபகுதியினரால் இது விமர்சிக்கப்பட்டது. அரசியல் வாதிகள் இதற்கு எதிராக பிரசாரம் மேற்கொண்டனர். தனியார்மயமாக்கல், தனியார் தனியுரிமை (Private Monopoly) தோன்றுவதற்கு வழிவகுக்கும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. அத்தியாவசிய சேவைகளும் காலப்போக்கில் தனியார்மயமாக்கப்படலாம். இதனால் வருமானம்

குறைந்த மக்கள் அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்ளமுடியாது போகலாம் என்ற பல்வேறு வகையான கருத்துக்கள், விமர்சனங்கள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் தனியார்மயமாக்கல் செயற்பாட்டினை மேற்கொள்ளும் பொருட்டு சர்வதேசரீதியாக அழுத்தங்கள் ஏற்பட்டன. கடன்வழங்கும் நிறுவனங்கள், உதவி வழங்கும் நாடுகள் என்பனவும் நிதியமைச்சும் வழங்கிய அழுத்தங்கள் தனியார்மயமாக்கலை ஊக்குவிப்பதாகக் காணப்பட்டது.

தனியார்மயமாக்கலை மேலும் பயனுடைய செயற்பாடாக மாற்றும் பொருட்டும், நாட்டின் சகலமக்களும் அத்திட்டத்தின் மூலம் நன்மை அடையும் பொருட்டும், தனியார்மயமாக்கல் விரிவுபடுத்தப்பட்டு "மக்கள்மயப்படுத்தல்" என்ற புதிய பெயரும், வடிவமும் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. மக்கள் மயப்படுத்தல் மூலம் நாட்டின் சகல மக்களும் தேசிய சொத்தில் உடமையாளராக முடியும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டு, அது வலியுறுத்தப்பட்டது. தனியார்மயமாக்கலை ஊக்குவிப்பதற்குப் பின்வருவன காரணிகளாக அமைகின்றது எனக் கூறுவது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதொன்றும், நியாயப்படுத்தப்படக் கூடியதுமாகும். அவையாவன:

1. உடனடிக் காசுத்தேவை அரசிற்கு காணப்பட்டது. பற்றாக்குறை பாதீட்டை நிவர்த்தி செய்யவரிகளை உயர்த்துவதிலும், கடன்தொகையினை அதிகரிப்பதிலும் பார்க்க அரசநிறுவனங்களை விற்றல் புத்திசாலித்தனமானது என யதார்த்தமாக உணரப்பட்டது.

2. வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு இது வசதியளிக்கின்றது.

3. தனியார்மயமாக்கல் ஆனது இலாபத்தையும் உயர்ந்த வரி வருமானத்தையும் ஏற்படுத்திக் கொடுக்கும். இது எதிர்கால காசோட்டத்தினை உறுதிப்படுத்தும்.

4. தனியார்மயமாக்கல் மூலம், நிறுவனங்களில் சிறந்த முகாமையினை ஏற்படுத்தி, திறமையினைக் கூட்டமுடியும். இதன்மூலம் நுகர்வோருக்கு சிறந்த சேவையினை அளிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

5. தொழிநுட்பவிருத்தி, உற்பத்தி அதிகரிப்பினை ஏற்படுத்த முடியும்.

மக்கள்மயப்படுத்தல் திட்டம் மூன்று கட்டங்களாக இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. முதலில் மக்கள்மயப் படுத்தப்பட்ட அரசநிறுவனங்கள் அவை மக்கள் மயமாக்கப்பட்ட பின்னர் விஸ்தரிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தின் அடிப்படை நோக்கம். இதனை இலக்காகக் கொண்டு நிறுவனத்தை விஸ்தரிக்கக்கூடிய நிதி, தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட ஸ்தாபனங்களுக்கு பெரும்பாலான பங்குகள் விற்கப்படுகின்றது. அடுத்த கட்டமாக அரசநிறுவனங்களின் பங்குகளை அதன் ஊழியருக்கு அன்பளிப்பாக வழங்குதல் அரசநிறுவனங்களின் பங்குரிமையை பரவலாக்கப்படவேண்டும் என்ற கருத்திற்கு அமைய பொதுமக்களிற்கும் பங்குகள் வழங்கல்.

மக்கள்மயப்படுத்தலானது தனது குறிக்கோளை எந்தளவுக்கு அடைந்துள்ளது என்பதற்கு சில வெளியீடுகள் மூலம் வெளிக்கொணரப்பட்ட புள்ளிவிபரங்களை கவனத்தில் கொள்ளலாம். பூகொட டெக்ஸ் டைல்ஸ் மில் தனியார்மயமாக்கலின் பின் 140 மில்லியன் ரூபாவை விஸ்தரிப்பு, நவீனமயப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளின் பொருட்டு ஈடுபடுத்தியுள்ளது. ஆனால் கடந்த பத்து ஆண்டுகளில் ஈடுபடுத்தியது 150 மில்லியன் ரூபாவாகும். இந்தவகையில் ஆய்வு செய்யும் போது பத்து ஆண்டுகளில் மேற்கொண்ட முதலீடுகளின் ஏறக்குறைய சமஅளவு ஒருசில மாதங்களில் மக்கள்மயப்படுத்தல் மூலம் மேற்கொள்ளப்பட்டதனை அறியமுடிகிறது. இது ஒரு சாதனை என்று கூறுவது மிகையாகாது.

அடுத்து மக்கள் மயப்படுத்தலில் முதலாவது கட்டமாக யுனைட்டைட் மோட்டோர்ஸ் லிமிட்டெட்டில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அதன் லாபம் 15% ஆல் அதிகரித்தது. தோல்பொருள் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியானது 50% ஆல் அதிகரித்தது. இதன் மூலம் ஊழியர்களின் சம்பளமும் 50% ஆல் அதிகரித்தது. மேலும் தனியார்மயமாக்கல் மூலம் அரசின் நிதிச்சுமை குறைவதற்கும், நவீனமயப்படுத்தலுக்கும் வழிவகுத்தது.

மறுபுறத்தில் தனியார்மயமாக்கல் சில எதிர் விளைவுகளையும் கொண்டுள்ளது எனக்கூறுவது மறுப்பதற்கு இல்லை. தனியார்மயமாக்கல் தனியுரிமைக்கு வழிவகுப்பதுடன் தனியார்மயமாக்கலின் மூலம் சிலசேவைகளை வருமானம் குறைந்தவர்கள் பெற்றுக் கொள்ளமுடியாது போகும் நிலை ஏற்படலாம். வேலையின்மைக்கும் வழிவகுக்கும். எந்த ஒரு செயற்பாடும் முற்றுமுழுதாக அனுகூலங்களை மட்டும் கொண்டிருக்கும் எனக் கூறுமுடியாது. அந்தவகையில் தனியார்மயமாக்கலுக்கும் இது பொருந்தும். அத்துடன் இலங்கையில் தனியார்மயமாக்கல் மூலம் நாடு முழு அளவிலான பலனைப்பெற வேண்டின் வளர்ச்சிடைந்த ஒரு மூலதனச் சந்தை காணப்பட வேண்டும். ஆனால் இலங்கையில் அவ்வாறான ஒரு வளர்ச்சியடைந்த மூலதனச்சந்தையில்லை. தற்போது மூலதனச்சந்தை விருத்திதொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் அடிப்படையில் அலகு நம்பிக்கை நிதியங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. அலகு நம்பிக்கை நிதியம், முதலீட்டாளரிடம் இருந்து முதலீடுகளைத் திரட்டி சட்டரீதியாக உருவாக்கப்பட்ட நம்பிக்கை நிதியம் மூலம் நிர்வகிக்கப்படும். தொழில்சார் முகாமையாளர்கள் (Professional Managers) முதலீட்டாளர் சார்பில் இப்பணத்தினை சரியான திட்டங்களில் முதலீடு செய்வர். முதலீட்டாளருக்கு முதலீட்டு நிதியத்தில் அலகுகள் (Units) பங்குகள் வழங்கப்படும். முதலீட்டு நிதியத்தினால் கிடைக்கும் வருவாய் கொள்வனவு செய்த அலகுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பகிரப்படும் அலகு நம்பிக்கை நிதியங்கள் தொழில்சார் முகாமையாளர்களால் முகாமை செய்யப்படும். பல்வேறுவகையான திட்டங்களில் முதலீடு செய்வதால் ஆபத்து குறையும். வரிச்சலுகைகளையும் பெறவாய்ப்புண்டு.

(தொடர்ச்சி 43ம் பக்கத்தில்......)

# சுவாமி விபுலாநந்தரும் அறிகைச் செயல்முறையும்

சபா ஜெயராசா

அறிகைச் செயல் முறை (Cognitive Process) என்பது உயர்நிலையான சிந்தனை இயக்கத்தினைக் குறிப்பிடும். சமூக முரண்பாடுகள் எப்பொழுதும் அறிகை அமைப்பின் மீதும் செல்வாக்குச் செலுத்திய வண்ணமிருக்கும். சுவாமி விபுலாநந்தர் (27. 3. 1892 – 19. 7. 1947) வாழ்ந்த காலத்துக் கல்விச் செயல் முறையின் முரண்பாடுகளைக் கண்டறிவதும், அவற்றின் வழியாக அவரது அறிகைச் செயல் முறையில் நிகழ்ந்த தாக்கங்களையும் துலங்கல் வழியாகக் கண்டறிவதும் இக்கட்டுரையின் இலக்குகளாகும்.

இந்நூற்றாண்டின் தொடக்க காலத்திலிருந்து கல்வியிற் காணப்படும் முரண்பாடுகள் மூன்று பரிமாணங்களாக விளக்கப்படுகின்றன.(1).

(அ) முன்னரிலும் கூடுதலான சமூக சமத்துவம் நிகழ்ந்து வருகின்ற வேளை மாணவரைத் (தனிமைப்படுத்தி) வேறுபடுத்தி மதிப்பீடு செய்யும் உபாயங்கள் முன்னரிலும் கூடுதலாக வளர்ச்சி பெறத் தொடங்கின.

(ஆ) மாற்று வகையான கல்வி நடவடிக்கைகள் பன்முகப்பட்டு வளர்ச்சியடைந்து வருகின்ற வேளை (மாற்று வகைப்படாத) பாரம்பரியமான கல்வி விழுமியங்களை வழுவாது கட்டிக்காக்கும் நடவடிக்கைகளும் விசையுடன் தொழிற்படலாயிற்று.

(இ) தொழில் சார்ந்த ஆற்றல்களைக் கல்விச் செயல்முறையினூடாக வளர்க்கும் முயற்சிகள் மேலோங்கி வந்தாலும், தூய புலமை அறிவுக்கு மட்டும் கூடிய அழுத்தங்களைக் கொடுத்தாலும் (வைராக்கியத்துடன்) கடைப்பிடிக்கப்படலாயின.

இவை கல்விக்கு மட்டுமுரிய முரண்பாடுகளாகக் காணப்படவில்லை. சமூக ஆற்றலின் ஒரு குறியீடு என்றவகையிற் கல்வியிற் காணப்படும் முரண்பாடுகள் சமூகத்தின் கூட்டு மொத்தமான இயக்கங்களின் வெளிக்கிளம்பலாகவே அமைகின்றன. பல்வேறு பட்ட சமூகப் பரிமாணங்களோடும் சுவாமி விபுலாநந்தர் சங்கமித்திருந்தார். பாடசாலை ஆசிரியர், கல்லூரி அதிபர், பல்கலைக்கழகப்பேராசிரியர், போர்வீரர், துறவி எழுத்தாளர், பேச்சாளர், பாடசாலை முகாமையாளர், சமூக சேவையாளர் என்ற பாத்திரங்களை அவர் பொறுப்பேற்றார்.

"அறிவு" என்பது ஆற்றல்களையும், திறன்களையும், அனுபவங்களையும் கண்டுபிடிப்புகளையும் உள்ளடக்கிய தொடர்ச்சியையும் வளர்ச்சியையும் கொண்ட பெருந்தொகுதி. அந்தப் பெருந்தொகுதியானது காலம், இடைவெளி, சமூக இயல்பு, தனிமனிதம் என்ற முரண்பாடுகளாற் சமனாகப் பங்கீடு செய்யப்படவில்லை. தொழிற்பிரிவு சிறக்குமியல்பு என்பவை சிக்கல் பொருந்திய சமூக இயல்புகளை மேலும் சிக்கலாக்கி வருகின்றன.

எண்ணக்கருக்கள், கோட்பாடுகள், விதிகள் முதலியவற்றை உருவாக்குதலும் பயன்படுத்தலும் புறநிலை அணுகுமுறைகளாகும். இயற்கை விஞ்ஞானம், கணிதம், சமூகவிஞ்ஞானம் முதலியவை புறநிலை அறிவின் தொகுதிகளாக வளர்ச்சி பெற்றுள்ளன. தரவுகளையும் தகவல்களையும் தமது சுய விருப்பங்கள், மனவெழுச்சிகள், என்பவற்றுக்கேற்றவாறு ஒழுங்கமைத்து விளக்கம் தருதல் அகநிலையான அறிவாக்கமாகக் கருதப்படும்.

அறிவானது சமூக செயல்முறையின் வாயிலாக வளர்த்தெடுக்கப்படுகின்றது. தனிமனித இயல்புகள் சமூக இயல்புக்கேற்றவாறு உருவாகும் நிலையில் முற்றிலும், புறவயமானது என்றோ, தூய அகவயமானது என்றோ அறிவை முடிந்த முடிபாகக் கூறுபோட முடியுமா என்ற கருத்துக்கள் இந்நூற்றாண்டின் தொடக்க காலத்துச் சிந்தனை மரபுகளின் வினாக்குறிகளாக எழுந்தன.

இவ்வாறான "இருமை" நோக்கை விடுத்து கல்வியின் சமூக அழுத்தமும் பயனுடைமையும் அடிகளாரின் அறிகையிலே மேலோங்கியிருந்தது. ஹரித்துவாரத்தில் ஆரிய சமாஜத்தாரால் நடத்தப்பட்ட குருகுலம் கல்வி நிலையத்தையும் அக்கல்வி நிலையம் சமூகத்துடன் சங்கமமாகி நிறைவேற்றிய பணிகளையும் அடிகளார் ஆழ்ந்து நோக்கினார். இக்கல்விக் கழகத்தில் வித்தியாலங்காரன் பட்டம் பெற்ற மாணவன், சென்னையில் எம். ஏ பட்டம் பெற்ற மாணவனோடு ஒத்து நோக்கப்படுதற் குறைந்தவனாகக் காணப்பட்டான். இவன் தாய் மொழியிற் கல்வி பயின்றவனாதலாற் தன்னூர்க்கும் சென்றதும் தான் பெற்ற செல்வத்தைப் பிறருக்கும் அனுபவிக்கும்படி கொடுக்கிறான். இதனால் இவன் பயின்ற கல்வி ஆயிரமடங்கு பயன் தருகின்றது.(2).

அறிவுக்குரிய சமூக அழுத்தங்கள் விரிவடைய "அகம்" "புறம்" என்ற இருமைத் தன்மை நலிவடையும். தேசமும் அகிலமும் என்ற இருமை நோக்கும் வலுவிழக்கும் பிற மொழி மாந்தரிடமிருந்து ஒன்றும் பெறலாகாதென்று வாதிப்பாரொருசாரார். மேலை நாட்டாரது "ஸயன்ஸ்" எம்மிடமிருந்து அழிந்து போயிற்று என்பர். அங்கனமாயின் அதனைப் புதிதாக ஆக்கிக் கொள்வது அவசியந்தானே என்போம். தொல்காப்பியனாரையும் அவரனைய பெரியோரையும் ஆசிரியராகக் கொண்ட நாம், ஹக்ஸி, டார்வின், தொம்ஸன், கெல்வின் முதலியோரையும் ஆசிரியராகக்

கலாநிதி சபா ஜெயராசா
முதுநிலை விரிவுரையாளர், கல்வியற்றுறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கொள்ளுவமோவெனின் அறிவுடையோரைச் சாதி, சமய பேதம்பாராது ஏற்றுக்கொள்ளுதல் கடனென்போம்,(3).

அறிவுத் தொகுதியின் இயல்பும், சுரண்டலுக்குள்ளாகிய மக்களின் இருப்பும், அடிகளாரது சிந்தனையை ஈர்த்தன. இந்நிலையில் எமது பாரம்பரிய அறிவுத் தேட்டத்தை மீளாய்வு செய்ய வேண்டிய நிலை அவரிடத்துக் காணப்பட்டது. ஒடுக்குவோர், ஒடுக்கப்படுவோர் என்ற இருதுருவத்தினருக்கேற்ப அறிவு கூறுபடுத்தப்படுதலை அடிகளார் வெறுத்தொதுக்கினார். செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்குமிடையே "சுத்தம்" என்ற சுவர் மாத்திரம் காணப்படவில்லை. "கல்விபெறாமை" என்ற பாரிய இடைவெளியும் காணப்பட்டது.

சமூகத்தில் எதிரெதிரான பண்பாட்டு வலுக்கள் செயற்பட்ட வண்ணமுள்ளன(4). பண்பாடு - எதிர்ப்பண்பாடு (COUNTER CULTURE) என்பவற்றுக்கேற்ப அறிவின் பிரயோகமும் வேறுபடுகின்றன. வாழ்க்கையின் கேள்விகளுக்கு அறிவை முகம் கொடுக்க வைக்கும் பொழுது வாழ்க்கையிற் பண்புநிலையான மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென்ற அறிகை கொள்ளல் வலிமை பெறுகின்றது. எதிரெதிரான பண்பாட்டுக் கோலங்கள் நிலவும் சமூகத்தில் ஆக்கங்களை ஒரு சாரார் புரிந்து கற்றலும் இன்னொரு சாரார் புரியாது கற்றலும் ஏற்படுகின்றன. புரியாது கற்றலும் தவறாக விளங்குதலும் இன்மை நிலைப்பட்ட கற்றல், ( DISLEARNING) எனப்படும். இவை தொடர்பான ஆழ்ந்த விளக்கத்துக்கு வேதாந்த நெறி பெரிதும் துணை செய்தது. மனிதரின் அகத்தே புதைந்துள்ள சுடரை வெளிக் கொண்டு வரல் வேதாந்தக் கல்வி நெறியிலே தொடர்ந்து மீளவலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. நவீன கல்வி மரபுகளையும், தொல் சீர் இந்துக் கல்வி மரபுகளையும் இணைக்கும் புதிய அறிகைப் பரிமாணங்களை அடிகளார் வளர்த்தெடுத்தார்.

"அறிவு" என்பது சந்தர்ப்பங்களின் ஏணியாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இந்நூற்றாண்டின் தொடக்க காலத்திலிருந்தே கல்விச் செயற்பாடுகளுக்கும், நிலைக்குத்தாக நிமிரும் சமூக அசைவுகளுக்குமிடையே துல்லியமான இணைப்புகள் வெளிப்படத் தொடங்கின. இந் நிலையில் வாய்ப்புள்ளோரே மேலும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி அறிவை ஏணியாக்கியமை சமூக அநீதியாகவும் புலப்பட்டது. அறிவை மக்கள் மயப்படுத்தும் செயல்முறையின் மீது அடிகளாரின் உளவாழ்க்கையும் உடல்வாழ்க்கையும் ஆழ்ந்து வேரூன்றின.

அறிகைச் செயல் முறையானது மனிதனின் நிலைமாற்றத்துக்கு இட்டுச் செல்லல் வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. அறிவு பெறுதலில் நிகழும் எண்ணளவு மாற்றங்கள் பண்பளவு மாற்றங்களை வருவிக்கவல்லது. இந் நிலையில் அறிவுத் தொகுதியை கலை என்றும் விஞ்ஞானம் என்றும் பாகுபடுத்துதல் கூட்டுமொத்தமான பண்பினை அறியவொட்டாது திசைதிருப்பி விடுகின்றது. அவ்வாறே அறிகையும் ஆனந்தமும் வேறு பிரிக்கமுடியாதவை என்று கல்வியியலாளர் முன்வைத்த கருத்துக்கள் நிலவி வந்தன. ஆனந்தம் என்பது இறைசாராததென்ற வாதத்தை அடிகளார் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனந்தமும் (Happiness) இறைசார்ந்த பரிசுத்தமும் (Holyness) வேறு பிரிக்க முடியாதவை என்று அடிகளார் கருதினார். "அழகே செம்மை, உண்மையே அழகு, அழகே செம்மை, செம்மையே உண்மை, செம்மைஉண்மை அழகென்றும் இவற்றை வடநூலார் சிவம் சத்தியம் சுந்தரம் என்பர் (5).

ஆன்மாவைத் தெரியப்படுத்தும் அகவிசையாகவும், புறவிசையாகவும் கல்விச் செயற்பாடுகள் இடம்பெறல் வேண்டுமென்று இந்தியக்கல்விக் கோட்பாடுகளிலே தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. ஆன்மீக ஈடுபாட்டுக்கும் கவிதை கற்பித்தலுக்குமுள்ள தொடர்புகள் கலைத்திட்ட வடிவமைத்தலில் வற்புறுத்தப்பட்டன. இதன் முக்கியத்துவம் கடந்த நூற்றாண்டின் பிற்கூற்றிலே மத்தியு ஆர்னோல்ட் போன்றோரால் வலியுறுத்தப்பட்டது (6).

கவிதையே கல்வியை மானுடப்படுத்துகின்றது. கவிதையே வாழ்க்கையை விமர்சிப்பதற்குப் பொருத்தமான வடிவமாக அமைகிறது. வாழ்க்கையின் சாராம்சமே கவிதையின் உள்ளடக்கம், என்றவாறான கருத்துக்கள் அக்காலகட்டத்திலே மேலோங்கியிருந்தன. நவீன விஞ்ஞான விளக்கங்களை உட்பொதிந்த வலுவான உரை நடையாக்கத்தின் அடிப்படையிலே தமிழ்க்கட்டுரை இலக்கியத்தை வெளிப்படுத்திய அடிகளார் கவிதையின் கல்வியியல் தொடர்புகளை ஆழ்ந்து சிந்தித்தார். தமிழ் மொழியானது கவிதைச் செழிப்புள்ள மொழியாக இருந்தாலும், மில்ரன் வேட்ஸ்வேர்த் கீற்ஸ், ஷெக்லி, ரெனிஸன், பைரன், சேக்ஸ்பியர் முதலியோரது கவிதைகளை மொழி பெயர்த்துக் கவிதையின் கரையிலா முக்கியத்துவத்தை வலியுறுத்தினர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்கூற்றிலும், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பக் காலகட்டத்திலும் கல்வியியலில் "மனிதரும் கணப்பொழுதும்" (The man and the movement) என்ற எண்ணக்கரு சிறப்பிடம் பெறலாயிற்று (7). சமூகத்திலே மனிதரும் கணப்பொழுதும் பொருத்தமான முறையிலே ஒன்றிணைக்கப்படுவதற்குக் கல்விச் செயல் முறை உதவுவதன் வாயிலாக ஓர் ஆரோக்கியமான சமூகம் கட்டியெழுப்பப்படும் என முன்மொழியப்பட்டது. மனிதரும் கணப்பொழுதும் பற்றிய சிந்தனை கல்வியியலிலே வளர்ந்தமையைத் தொடர்ந்து இலக்கிய கல்வியிலே "சந்தர்ப்பங்கூறுக" என்ற வினா இங்கிலாந்தில் இடம்பெறத் தொடங்கியது. தமிழ் கற்பித்தலிலும் அதன் தாக்கம் பரவியது. "சந்தர்ப்பங்கூறுக" என்று அமைக்கப்படும் வினா வெறும் பொறிமுறையாகச் செய்யுளை அணுகி பரீட்சையிலே அதிக புள்ளிகளைப் பெறும் ஒரு நடவடிக்கையாக அமையக் கூடாது என்று வற்புறுத்திய அடிகளார் கவிதைக்கும் உயர் நிலையான அறிகைச் செயல் முறைகளுக்குமிடையேயுள்ள தொடர்புகளை வற்புறுத்தினார்" ஏனைய துறைகள் உள்ளத்தின் ஒவ்வொரு திறத்தினைப் பற்றிநிற்கச் செய்யுள் மாத்திரம் உள்ளம் முழுவதையும் பற்றிநிற்கும். ஆதலினாலே மதிப்பிடற்கரியதொரு நிறைவினையும் மறுமலர்ச்சியையும் அது உள்ளத்திற்கு அளிக்கும்(8) என்று குறிப்பிட்டார்.

இந்நூற்றாண்டின் ஆரம்பக்கட்டத்தில் அனைத்து அறிவியற்றுறைகளிலும் கணிதம், பெளதிகவியல் என்பவற்றின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படலாயிற்று. குறிப்பாக காலம், இடைவெளி, அளவீட்டுமுறைகள் முதலியவை தொடர்பான ஆய்வுகள் வற்புறுத்தப்பட்டது. அறிவின் முன்னேற்றத்துக்கும் "பரவலான அருவமாக்கல்" (Extensive abstraction) அவசியம்

என்று கூறப்பட்டது.

" வெள்ளை நிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது" (9).

இப்பண்பைக் கவிதை வடிவிலே அடிகளார் விதந்துரைத்தார். அடிகளார் கொண்டிருந்த அறிகை அமைப்புகள் மீது செல்வாக்குச் செலுத்திய காரணிகளுள் கணித அணுகுமுறைகள் சிறப்பிடம் பெறுகின்றன. கணிதத்தை மெய்யியலின் வழிமுறையாகக் கருதும் அணுகுமுறைகள் (Mathematics as a Means of philosophy) அடிகளாரது காலத்தில் வளர்ச்சி பெற்றிருந்தன(10). சமன்பாடு செய்தல், காரணிகளைப் பகுத்தாராய்தல், சுருக்குதல், தொடைகளாக்குதல் முதலிய கணித அணுகுமுறைகளை அவர் தமது யாழ் நூலின் முறையியலிலே பயன்படுத்தினார். கணித அணுகுமுறைகள் நீண்டகால நினைவிற்பதித்தலையும் வேண்டிய போது மீட்டெடுத்துப் பயன் படுத்தலையும் வற்புறுத்துகின்றன. அறிவு அனைத்தினுக்கும் ஆதாரமாகவுள்ளது. ஞாபக சக்தி நேற்றுப் பெற்ற அநுபவத்தோடு இன்று பெற்ற அநுபவத்தையும் வைத்து நோக்கி ஒற்றுமை வேற்றுமை காண்பதினாலே அறிவு நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து கொண்டு போகிறது (11).

அடிகளாரிடத்து "குறியீட்டு அமைப்பியல்" (Symbolic Structure) பற்றிய சிந்தனைகளும் காணப்பட்டன. இதற்குக் கணிதம் துணை செய்தது. கணிதம் என்பது தனித்து எண்விருத்தியினை மட்டும் கருத்திலே கொள்ளும் ஓர் இயலாக இருத்தலாகாது எனக் கணிதவியலாளர் வற்புறுத்தினர். சமூகத்தையும், பிரபஞ்சத்தையும் விளங்கிக்கொள்ளக் கணித அறிவு துணை செய்ய வேண்டும். சிக்கலான நிகழ்வுகளையும், இயல்புகளையும் விளங்கிக் கொள்ளத்தக்க உளவலுவைத் தருவதாகவும் கணிதஅறிவு இருத்தல் வேண்டுமென வற்புறுத்தப்பட்ட வேளை குறியீட்டு அமைப்பியலின் முக்கியத்துவம் மீளவலியுறுத்தப்படலாயிற்று.

1905 ஆம் ஆண்டளவில் விஞ்ஞானக்கல்வியைப் பொறுத்தவரை இரண்டு முக்கிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றன(12). அவை ;

அ)-கணிதவியலாளரும், கல்வியலாளரும், மெய்யியலாளருமாகிய வைற்ஹெட் என்பார், "மெய்யியல் பரிமாற்றங்கள்" என்ற ஆய்வை வெளியிட்டார். பொருள் முதல் உலகு பற்றிய கணிதமுறையிலமைந்த விசாரணைகளை அந்த ஆய்வு துரிதப்படுத்தியது.

ஆ) விஞ்ஞானி ஈன்ஸ்ரின் " சார்புக் கோட்பாடு" பற்றிய முதலாவது ஆய்வுக்கட்டுரையை வெளியிட்டார்.

உலகின் கல்விச் செயற்பாடுகளிலும் சிந்தனை முறைமைகளிலும் இவையிரண்டும் தொடர்ச்சியான செல்வாக்குகளை ஏற்படுத்துவதற்குத் தூண்டுகோலாக அமைந்தன. இவை அடிகளார் மீதும் செல்வாக்குகளை ஏற்படுத்தின. மேலைத்தேய - கீழைத்தேயக் கலை இலக்கியங்கள் தொடர்பான ஒப்புநோக்கலை அடிகளார் மேற்கொள்வதற்கும் சார்புக்கோட்பாடு துணை செய்தது. இச்சந்தர்ப்பத்தில் முற்றிலும் பழமையிலே, மூழ்கித் தமது அறிகையமைப்புக்களை மாற்றிக் கொள்ளாத அணுகுமுறைகளை அடிகளார் சுட்டிக் காட்டினார்.

பூதபௌதிக அறிவு நாளுக்குநாள் வளர்ந்து வருமிந்நாளில் சைவசமயத்தின் அடிப்படையான கொள்கைகட்கு மாறுபடாத புதிய உண்மைகளை அறிஞர் எடுத்துரைப்பாராயின் அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்(13). மேலைப்புலக் கல்வியில் ஏற்படும் விருத்திகளுக்கு ஏற்றவாறு எமது கல்வியிலும் விரிவுகள் மேற்கொள்ள வேண்டுமென்ற செயற்பாடுகள் தமிழும் ஆங்கிலமும் கற்ற குழாத்தினரின் இலட்சியமாக அமைந்தது.

1905 ஆம் ஆண்டளவில் ஈன்ஸ்ரினுடைய சார்புநிலை பற்றிய சிறப்புக் கோட்பாடு வெளிவந்தமையைத் தொடர்ந்து உலக அறிகைச் செயற்பாடுகளிலே பல்வேறு செல்வாக்குகள் ஏற்படத்தொடங்கின. இயற்கை விஞ்ஞானிகளாயிருந்தோர், ஆன்மீகவியலிலும் மெய்யியலிலும் ஈடுபடலாயினர். சடப்பொருட்களின் திணிவு, விசை, என்பனவற்றுடன் மட்டும் அறிவு கட்டுப்பட்டிருத்தலாகாது என்ற கருத்தை விஞ்ஞானிகள் முன்வைக்கலாயினர். கைத்தொழிற்புரட்சியைத் தொடர்ந்து பொருள்முதற் கண்ணோட்டத்தில் ஒரு தலைப்பட்சமாக விசையூட்டப்பட்ட ஆய்வுகள் மட்டும் கல்விவளர்ச்சிக்குப் போதுமானதல்ல என்ற உணர்வு மேலோங்கத் தொடங்கியது. உலக ஆய்வறிவாளர் மட்டத்திலே நிலவிய இக்கருத்துக்களின் செல்வாக்கு அடிகளாரின் ஆய்வுகளிலே துலங்கியது. யாழ்நூல் என்பது யாழின் பௌதிகவியற் பண்புகளை அணுகிய வேளை, ஆன்மிகத் தேடலுக்குரிய களமாகவும் அமைந்தது.

பௌதீக அளவீடுகள் மேலும் முன்னேற்றமடைதலோடு அறிவின் வளர்ச்சியும் முன்னேறி வந்துள்ளது. கட்புலனாகப் பொருள்களைக் கண்டறியும் உபாயங்கள் வளர்க்கப்பட்டு வந்துள்ளன. தன்னை அறிதல், தன்னுணர்வு பெறல் என்பதற்கும், புறவுலகை அறிதல் புறநிலை அறிவு என்பவற்றுக்குமிடையே இணங்காணும் முயற்சிகளையும் வளத்தெடுக்கும் கல்விமுயற்சிகள் நிகழலாயின. (All objective knowledge is knowledge of sprite) (14). அனைத்துப் புறநிலை அறிவும் தெய்வீக அறிவாக வற்புறுத்தப்பட்டது. இவ்வாறான அறிகைச் செயற்பாடு சுவாமிகளின் சிந்தனை அமைப்புகளோடு இயைபு கொண்டவனாக விளங்கியது. உலக வாழ்வில் வெறுப்பு வருவது நினைக்கக்கூட கஸ்டமாயிருக்கிறது. எவ்வளவு மடமை நம்முடைய அன்பையும், உதவியையும் பெற்றுப் பதிலுக்கு பேரன்பும் பேருதவியும் செய்ய நாய், பூனை மரம் வரையும் எண்ணிறைந்த உயிர்கள் இருக்கின்றன. என்ன அருமையான உலகம்(15) என்றவாறு புறவுலக நிகழ்வுகளை எங்கும் நிறைந்த தெய்வீக அறிகையமைப்பாக சுவாமிகள் அனுபவிப்பதைக் காணலாம். அழகு பற்றிய சுவாமிகளின் அறிகை முறைமையில் இதனை மேலும் விரிவாகக் காணமுடியும்.

வெகுசன உற்பத்திமுறைமை வளர்ச்சியடைய அத்தகைய உற்பத்தி முறைமைக்கேற்ற கல்வியை வழங்கும் (Masification of Education) நடவடிக்கைகள் விரிவடைந்த காலகட்டத்தில் அழகியற்கல்வியை தெய்வீகத்துடன் இணைத்து ஒருவித மீட்சியை காணும் செயற்பாடுகள் இரவீந்திர நாத் தாகூரிடம் காணப்பட்டன. அதனை ஒத்த அனுபவங்களைச் சுவாமிகளிடத்தும் காணமுடியும். அழகியலுக்கு இறையில்சார்ந்த அகல்விரி பண்புடைய ஒரு விளக்கத்தை அவர் வழங்கினார். இசை, ஓவியம், நடனம், நாடகம், என்ற பல்துறைகளையும் தழுவியதாக அழகியல்

நயப்பு விரிவடையும் எனவிளக்கினார். அடிகளார் எழுதிய "நிலவும் பொழிலும்" என்ற கட்டுரை அழகியலுக்குரிய அகல்விரி விளக்கத்தைக் கொண்டுள்ளது. "காம விழைவினைங்கி அருநெறிநின்று வீடு பெற முயல்வாருக்கு அவ்வீடு பேற்றினை நல்கும் தனிப் பெரும் தலைவன்றானே இனியவற்றுளெல்லாம் இனியவனாவன். அழகுடைப் பொருளனைத்திலும் தலைவனது ஒளி விளக்கத்தைக் கண்டு பரவசப்படுவது அன்பராயினாருக்கு பரவசப்படுவது அன்பராயினாருக்கு இயல்பாம்."

சுவாமி விபுலாநந்தர் உருவாக்கிய அறிகைச் செயல்முறையில் மொழிக்கல்வி பற்றிய அவரது நோக்கு சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றது. இலக்கணம் கற்றல் என்பது வெறுமனே சூத்திரங்களை அறிதலும் விளக்குதலும் பிரயோகித்தலும் அன்று. மொழி செயற்படும் சமூகத்தின் முழுமையான புலக்காட்சியை இலக்கணக்கல்வி ஏற்படுத்தல் வேண்டும். மொழி கற்றல் என்பது மொழி இயக்கமுறும் சமூகத்தின் செயலமைப்பை அறிந்து கொள்ளும் நடவடிக்கையாகும். பலநூற்றாண்டுகளாகத் திரண்டெழுந்த சமூக அனுபவங்களின் தொகுப்பாக மொழி அமைகின்றது. மனிதரின் உயர் உள்ளத் தொழிற் பாட்டுக்கும் மொழிக்குமிடையே தொடர்புகள் உண்டு.

இவற்றின் பின்புலத்தில் அறிகைச் செயல் முறையை விளக்குதல் பொருத்தமானது. அறிகை உளவியல் ஒவ்வொரு மனிதரதும் உள அமைப்புகள், மொழிவாயிலாகவும், ஆக்க வடிவங்கள் வாயிலாகவும் சமூகத்தை விளங்கிக் கொள்ளும் புலக்காட்சி வாயிலாகவும் வெளிக்கிளம்பும். இதனை அனுபவங்களின் திரளமைப்பு (Schema) என்றும் குறிப்பிடுவர். ஒருவரின் உளத் தொழிற்பாட்டிலே காணப்படும் வீழ்ச்சியினையும் அறிகைச் செயல்முறை விளக்கும். புலமை சார்ந்த பல்வேறு பாத்திரங்களை அடிகளார் ஏற்றமையால் பன்முகப் பரிமாணங்களின் தொகுப்பாக அவரின் செயற்பாடுகள் விளங்குகின்றன.

புலமை சார்ந்த ஒவ்வொரு தோற்றப்பாடும் அறிகைத் தோற்றப்பாடாகவே கொள்ளப்படும். சுவாமிகளின் காலத்தில் நிகழ்ந்த புலமை சார்ந்த தோற்றப்பாடுகளை ஒப்பு நோக்கும் பொழுது அவரின் பங்களிப்பு மேலும் துலங்கும். தமிழ் மொழி பன்முக ஆற்றல் கொண்ட மொழியாக கிளைகள் பரப்பி வளர்வதற்குரிய களம் அடிகளாரால் மிகுந்த புலமையார்வத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## அடிக்குறிப்புகள்


1. Phlip H.Taylor and Colin M. Richards(1986): An Introduction to Curriculum studies: Nfer Nelsoun, Berkshire, p.1.

2. விபுலாநந்த சுவாமிகள் (1972): இலக்கியக்கட்டுரைகள், கல்வி வெளியீட்டுத்திணைக்களம், கொழும்பு, ப. 46.

3. அருள்செல்வநாயகம் (1963): விபுலாநந்த செல்வம், கலைமகள் காரியாலயம், சென்னை, ப.46

4. Musgrave.F (1974): Ecstasy and Holiners. Metnuev, London pp . 86- 89.

5 விபுலாநந்த சுவாமிகள், இலக்கியக் கட்டுரைகள், முற்சுட்டிய நூல், ப 367.

6. Metheu Arnold, Report on Elementary schools 1852-1882, H.M.so, London, p.201.

7. Bentock. G.H. (1984): studies in the history of Educational Theory. allev and Unwin, london p.216.

8 விபுலாநந்த சுவாமிகள், இலக்கியக்கட்டுரைகள், முற்சுட்டிய நூல் ப. 02.

9. அருள் செல்வநாயகம், (1956): விபுலாநந்ததேன் என்ற நூலில் எடுத்தாளப்பட்ட கவிதை. பாரிநிலையம், சென்னை, ப. 01.

10. அருள் செல்வநாயகம் (தொ) (1961): விபுலாநந்த வெள்ளம், ஓரியண்ட் லாங்மன்ஸ், சென்னை, ப. 115.

11. Victor lowe,(1962): Understanding Whitehead. John Hopking press, Baltimore, pp 57 - 8.

12. சச்சிதாநந்தம்பிள்ளை, எஸ் (1926): "சைவசமயத்தின் தற்காலநிலை" செந்தமிழ்ச்செல்வி திருநெல்வேலி, ப.கக௨.

13. John Parsmore (1980): Hundred Years of Philosophy, pelican Books, London, p. 333.

14. அருள் செல்வநாயகம் ( தொ) விபுலாநந்த அமுதம், கலாநிலையம், கொழும்பு ப. 12.

15. விபுலாநந்த அடிகள் இலக்கியக்கட்டுரைகள், முற்சுட்டிய நூல்கள் ப. 28. 27.


39ம் பக்கத் தொடர்ச்சி......

### தனியார் மயமாக்கல்

எனவே இத்தகைய அலகு நம்பிக்கை நிதியங்களின் வளர்ச்சியானது, மூலதனச்சந்தையினை விருத்தியடையச் செய்து தனியார்மயமாக்கலிற்கு உதவும் எனினும் இலங்கையைப் பொறுத்து மூலதனச்சந்தை வளர்ச்சியும் தனியார்மயமாக்கலும் ஒரேகாலகட்டத்தில் மேற்கொள்வதனால் எதிர்பார்த்த பலனை பெறமுடியவில்லை எனக் கூறுவதும் பொருந்தும். எவ்வாறினும் தனியார்மயமாக்கல் குறுகியகால எல்லையுள் குறிப்பிடத்தக்களவு பலனைத் தந்துள்ளது எனக் கூறுவது மறுப்பதற்கில்லை. தனியார்மயமாக்கல் நடவடிக்கை இன்னும் முற்றுப் பெறாது, ஆரம்ப நிலையில் காணப்படுவதனால் அது தொடர்பான பூரணமதிப்பீட்டை மேற்கொள்ளமுடியாது. மேற்கொள்வதும் சாத்தியமற்றது. இதன் முழுப் பலாபலன்களையும் இன்னும் சில வருடங்களின் பின்பே முற்றாக மதிப்பிடமுடியும்.

**உசாத்துணைகள்.**


(1) Tandon B.C (1983):management of Public Enterprises Chaitanya Publishing house, Allahabad, India.
(2) Lanka Guardian Vol 14 No 18, No 19.

# வைஷ்ணவமும் விசிட்டாத்வைதமும்

நா. ஞானகுமரன்

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு சைவசமயம் திகழ்வது போல வாசுதேவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு விளங்கும் சமயம் வைஷ்ணவமாகும். இந்து சமயத்தின் முப்பெரும் பிரிவுகளான சைவம், வைஷ்ணவம், சாக்தம், எனும் பிரிவினுள் வைஷ்ணவ சமயமும் உள்ளடங்குதல் இந்து மதத்தில் அது பெறும் முதன்மையினைப் பறைசாற்றுவதாகின்றது. இன்றும் இந்தியாவில் பல்வேறுபட்ட பகுதிகளிலும் வைஷ்ணவ சமயத்தினை ஏற்றிப் போற்றிப் பின்பற்றுபவர்களினைக் காணக்கூடியதாக உள்ளது. நாராயணன், விஷ்ணு, பரந்தாமன், புருஷோத்மன், வாசுதேவன், திருமால், அச்சுதன் போன்ற இன்னும் பல்வேறு நாமங்களில் முழுமுதற் கடவுளை இனங் காண்பவர்களாக வைஷ்ணவர்கள் விளங்குகின்றனர்.

புராண, இதிகாசங்களில் வைஷ்ணவ சமயத்திற்குரியோர் பாகவதர்கள், பாஞ்சராத்திரிகள், ஏகாந்தர், சாக்வதர், ஓரிறைவாதிகள் எனப் பலவாறாக அழைக்கப்பட்டமை நோக்குதற்குரியதாகும். வைஷ்ணவக் கருத்துக்களின், கொள்கைகளின் மூலத்தினைக் கிறிஸ்துவுக்கு முற்பட ஐந்தாம் நூற்றாண்டுகளில் இனங்காணக்கூடியதாகக் கொள்ளப்படும் வகையில் பழமை பொருந்தியதாக விளங்குகின்றது. இருக்கு வேதத்திலுள்ள புருஷசூக்தத்தில் சுட்டப்பட்ட ஒரு சில கருத்துக்கள் வைஷ்ணவத்தின் பிற்பட்ட வளர்ச்சி நிலைக்கு அடிப்படையானதாய் அமைந்துள்ளன. சதபதப் பிராமணத்தில் சுட்டப் பெற்ற நாராயணன் பற்றிய செய்திகளும் வைஷணவத்தின் நிலைப்பாட்டினை உறுதி செய்யும் தரத்தனவாக அமைந்தன. மேலும் வைஷ்ணவ உபநிடதங்கள் எனும் வகையில் அவியக்தோபநிடதம், கருடோபநிடதம், நாராயண உபநிடதம், கிருஷ்ண உபநிடதம், காலி - சந்தாரணோபநிடதம், கோபாலோத்தரதாபனி உபநிடதம், திரிபாட் - விபூதி-மஹா நாராயண உபநிடதம், வாசுதேவ உபநிடதம், கோபாலதாபினி உபநிடதம், நரசிம்ஹோத்ர தாபினி உபநிடதம், ராமரகசிய உபநிடதம், ராமதாபினி உபநிடதம் போன்ற பதினாறு உபநிடதங்களினை எடுத்தாளுதலும் வைஷ்ணவத்தின் சிறப்பு நிலையினைச் சொல்லாமல் சுட்டி நிற்பதாகின்றது. மஹாபாரதம், பாகவத புராணம், விஷ்ணு புராணம், ஆகியன வைஷ்ணவக் கருத்துகளுக்கு நல்லதோர் ஆதார நூல்களாக அமைந்தன. மேலும் கருடபுராணம், பத்ம புராணம், வராகபுராணம், நாரதீய புராணம் போன்ற புராணங்களும் வாஸிஸ்ட், ஹாரித, வியாச, பராசர, காசியப்ப போன்ற ஸ்மிருதிகளும் வைஷ்ணவக் கருத்துக்களினைத் தெளிவாக்கவல்ல நூல்களாகஅமைந்தன (1).

நா. ஞானகுமரன்
B.A(Hons) Cey; M.A(Yaff); Ph.D.(Jabalpur)
சிரேஸ்ட விரிவுரையாளர், மெய்யியல்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆரம்ப காலத்தில் வைஷ்ணவ சமயம் ஏகாந்திக தர்மம் எனப் பெரிதும் எடுத்தாளப்பட்டது(2). பாகவத சமயத்தின் வளர்ச்சி நிலையே வைஷ்ணவம் எனும் வகையில் சிறப்புப் பெற்றிருந்த பாகவதம் பிற்பட முதன்மைக்குரியதாக விளங்கிற்று. பாகவதம் பெரிதும் பத்தியோடு தொடர்பு கொண்டதென்பதனைச் சொல்லிலக்கண விளக்கம் சுட்டி நிற்கின்றது. பாகவத், பாகத, பாகவத ஆகிய சொற்கள் பாஜ் எனும் அடிச் சொல்லினின்று எழுந்ததாகக் கருதுவர்(3). ஆரம்ப காலத்தில் இச்சொல் பகிர்ந்தளித்தல், பிரித்துக்கொடுத்தல் எனவாகப் பொருள் கொள்ளப்பட்டது. பாகவதத்தோடு பக்தியானது இனங்காணப்பட்ட போது நாராயணனுடன் பகிர்வதாக இப்பாகவதம் பொருள் சுட்டுவதாகக் கொள்ளப்பட்டது. பாக என்பது நாராயணனாகவும் அதன் வழி பாக என்பது பகவான் எனவும் அழைக்கப்படலாயிற்று. பாகவதத்தில் வாசுதேவன் முதன்மையும் முக்கியத்துவமும் பெறும் கடவுளாவர்.

வேதத்தில் "பாக்" எனும் தெய்வம் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது காணலாம். "பாக்" என்பதன் வழி நன்மையை வழங்குபவராகவும் பிற்பட நன்மைக்குரியவராகவும் பொருளமைந்தது. வடமொழி இலக்கணத்திற்கமைய "பாகவத்" என்பது கடவுள் கொண்டிருக்கும் நன்மையானது என்பதனைச் சுட்டுவதாகும். விஷ்ணு புராணத்தில் புகழ் (ஐஸ்வரியம்) செம்மை (தர்மம்) சொத்து (சம்பத்) அறிவு (ஞானம்) வைராக்கியம், பிரபல்யம் ஆகியவை பாக என அழைக்கப்படுவதாகவும் இவற்றைக் கொண்டுள்ளவன் பாகவத் என அழைக்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளமை காணலாம்(4). காலக்கிரமத்தில் வாசுதேவன் நாராயணன், விஷ்ணுவுடன் இனங்காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

சமய தத்துவ அடிப்படையினைப் பாகவத சமயமானது மகாபாரதத்தின்வழி பெரிதும் கொண்டிருந்தது. வாசுதேவ, கிருஷ்ண வழிபாட்டின் அம்சங்கள் இதில் குறிப்பிடத்தக்கதாகும். கார்லேயின் கருத்துப்படி பாகவத சமயமானது நான்கு நிலைப்பாடியில் நோக்கத்தக்கதாகும். முதலாவதாக கி. மு 300 வரை விளங்கியதாகக் கருதப்பெறும் கிருஷ்ண வாசுதேவ வழிபாட்டினடிப்படையில் நிலவிய ஒருமைவாத இறையியல். இந்நிலையிலேயே பக்தி சார்ந்த தன்மை அடிநிலையாக விளங்கியது. கி. மு 300 ஆண்டளவினதாக கருதப்படும் இரண்டாவது நிலையில் கிருஷ்ணன் விஷ்ணுவுடன் இனங்காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இக்காலக்கட்டத்திலேயே விஷ்ணு முதன்மை பொருந்திய கடவுளராக உயர்ச்சி பெற்றிருந்தது.

மூன்றாவது காலக்கட்டத்தில் பாகவத சமயமானது வைஷ்ணவமாக பரிணமித்தது எனக் கூறலாம். இக்காலப்பகுதியானது கார்லேயைப் பொறுத்தவரை கிறிஸ்தவ சகாப்தத்தினின்று கி.பி 1200 வரையிலான பகுதியெனலாம். இறுதிப் பகுதியாக இராமானுஜரின் முறைப்படுத்தப்பட்ட தத்துவார்தியான வளர்ச்சிக்குரிய காலப்பகுதியாகும்(5).

நாராயணனே அதி உயர் கடவுள் என்றும் எல்லா உயிரினங்களையும் மேன்நிலைக்கு உயர்த்தவுள்ளங் கொண்டவரென்றும் எல்லாவற்றுடனும் ஒன்றாய் உள்ளவரென்றும் சதபதப் பிராமணம் சுட்டுகின்றது (6). மேலும் தியாகத்தின் வடிவம் பாஞ்சராத்திரம் எனவும் அத்தியாகத்தினை ஆற்றவதன் வழி அவன் தனது நோக்கத்தினைப் பெற்றுக் கொள்கின்றான் என்கிறது. பாஞ்சராத்திரியில் நூல் செய்தமையால் இந்நெறி பாஞ்சராத்திரி எனப் பெயர் பெற்றதாகத் தத்துவப்பிரகாசர் கொள்கிறார்(7). பாஞ்சராத்திரிகள் பாகவதர்கள் ஆகிய இரு பகுப்பினர்களும் நாராயணனையே தங்கள் அதி உயர்ந்த தெய்வமாக எடுத்தாண்ட போதிலும் ஆரம்ப காலத்தில் நிலவிய ஒருசில கருத்து வேறுபாடுகளினால் வைஷ்ணவத்தின் ஒரு வேறுபட்ட பிரிவுகள் போன்ற ஒரு தோற்றத்தினை அளித்தது. பாஞ்சராத்திரிகர் பழமையான ஆசாரங்களையும் நடைமுறை ஒழுங்குகளினையும் ஏதோ ஒரு வகையில் ஏற்றுநிற்கின்றனர். மேலும் வர்ணப் பாகுபாட்டினை ஆரம்பகாலத்தில் பெரிதும் அலட்சியப் படுத்தியவர்களாகத் திகழ்ந்தனர். குப்த காலத்தில் இக்கருத்துப் போக்கிலும் மாற்றமிருந்தமை நோக்கக்கூடியதாகும். பாகவத சமயமானது பிராமணிய கருத்தியலின் செல்வாக்கினைக் கொண்டதாகவும் ஆட்சியாளர்களினால் பெரிதும் ஏற்கப்பட்டதாகவும் விளங்கிற்றென்பர்(8). எனினும் இரு பிரிவினரும் நாராயணனையே தமது உயிர் தெய்வமாகக் கொண்டிருந்தனர் என்பது மறுப்பதற்கில்லை. பாஞ்சராத்திரர் சடங்குகளைப் பிராமணர்களைப் போல் மேற்கொண்ட போதிலும் ஏன் பிராமணர்கள் பாகவதர்களைப் போல் தோற்றமளித்த போதிலும் சமூகத்தில் பாகவதர்கள் பிராமணர்களைப் போல மதிக்கப்படுவதில்லை எனும் நிலைப்பாடும் நிராகரிக்கப் படுவதற்கில்லை. இதனால்தான் சாத்வதர் குறைவாக சமூக அந்தஸ்துடைய வர்ணத்தினராக சுட்டப்பட்டனர். இவ்வகையில் சாத்வதர் பாகவதர் என்பவர்கள் ஒத்த பொருளுடையவர்களாகக் கொள்ளப்பட்டமையைக் காணலாம் (9). வேதக் கடவுளல்லாத நாராயணனும் வேதக் கடவுளான விஷ்ணுவும் வைஷ்ணவத்தின் உயர்வான கடவுளாகவும் ஒரே கடவுளாகவும் எடுத்தாளப்பட்ட நிலைமைக்கு அடிப்படையை எவ்வாறு தெளிவாகக் கூறமுடியாதுள்ளது போலவே வைஷ்ணவத்தில் எடுத்தாளப்படக்கூடிய பாஞ்சாரத்திரிகள், பாகதர்கள், சாக்வதர், ஏகாந்தர் போன்றோர் இடையிலும் பாரிய வேறுபாடுகளினைத் தெளிவாக்குதல் சாத்தியமில்லை.

ஏகாந்தகதர்மம் எனும் வகையில் அல்லது ஓரிறைவாதம் எனும் வகையில் வைஷ்ணவ சமயமானது ஆரம்ப காலத்தில் இனங்காணப்பட்டமைக்குச் சான்றளிப்பது போல் பகவத்கீதையிலும் இக்கருத்து நிழலாடக் காணலாம். வெவ்வேறு நாமங்களில் வழிபட்டாலும் ஈற்றில் அவன் என்னையே வந்தடைகின்றான் எனப் பகவான் பகவத் கீதையில் சுட்டுவதும் இங்கு நோக்கத்தக்கதாகும். கடமை கடமைக்காகவே என்பது போல் பலனை எதிர்பாராது கடமையை ஆற்ற வழிகாட்டி நிற்கின்றது. ஒவ்வொரு உயிரும் வினையாற்ற வேண்டியதன் திட்பத்தை நுட்பமாக எடுத்தாள்வதில் கீதை காட்டும் கர்மயோகத்திற்கு இணையானதொன்றினைக் காண்பது அரிதென்றே கூறலாம்.

சமயமெனும் பாங்கில் ஒவ்வொரு ஆன்மாக்களையும் நல்வழிப்படுத்தி உயர்வான நிலைக்கு வழிகாட்டி நிற்பதில் வைஷ்ணவம் பின்னிற்கவில்லை. ஆதிபூதனாய் எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல, எல்லாம் அறிந்த, உயர்வான ஞானருபியாய் நின்ற நாராயணன் வேதத்தினை அருளிச் செய்தான் என்றியம்புவர். நாராயணன் எனப் பெயர் பெற்ற நிலையில் திருப்பாற்கடலில் யோக நித்திரை செய்யும் பரந்தாமன் தனது திருவுந்திக் கமலத்தினின்று பிரமாவை உண்டாக்கி அதன்வழி பிரபஞ்சத்தைப் படைப்பித்துப் பிரமாவினிடத்தின்றே உருத்திரனையும் சங்கரிப்பதற் பொருட்டு உண்டாக்கித் தானே பிரபஞ்சத்தினை இரட்சித்துக் காப்பவனாக இருந்து பிரபஞ்சத்தின் படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழிலுக்குரிய நாயகனாகத் திகழ்கின்றான் என எடுத்தியம்பி நிற்பர்.

மனித வாழ்வின் சீரிய நோக்கினை அடைந்திடத் துணைபுரிவதே சமயமெனும் எண்ணக்கருத்திற்கு வைஷ்ணவம் உதவி புரிவதாய் விளங்குகின்றது. மனித மனத்தைப் புனிதமாக்க, நல்லதொரு மனப்பாங்கினை ஏற்படுத்திக் கொடுப்பதில் வைஷ்ணவம் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. சுயநலமற்ற வகையில் பரந்தாமனில் முழுமையாகச் செலுத்துகின்ற அன்பின் கோலம் பக்தி மார்க்கமாகப் பிரவாகித்தோடுதலை இங்கு காணலாம். பாகவத சமயம் என்பதற்கு விளக்கம் அளிக்குமாற்போல வைஷ்ணவமும் பக்தியையும் அஹிம்சையையும் போதிக்கும் சமயநெறியாகத் திகழ்கின்றது. ஒவ்வொரு மக்களினையும் எந்த வகையான வேறுபாடுகளுமின்றி அரவணைத்து அழைத்துச் செல்வதில் வைஷ்ணவம் காட்டும் பக்தி மார்க்கம் முன்னிற்கிறது.

வைஷ்ணவத்தின் வளர்ச்சி நிலையானது சங்கரரின் தத்துவார்த்த தர்க்க ரீதியான விளக்கத்தின் அடிப்படையில் எழுந்த "அத்வைதக் கோட்பாடு" வளர்ச்சியில் உள்ளடங்க வேண்டியதான தன்மை வரலாற்று நோக்கில் அமைவுற்றமை காணக்கூடிய தொன்றாகும். பிரமம் பூரணமானதும் அழியாததும், ஒப்புயர்வற்றதும் ஆனந்தமானதும், என்றுமுள்ளதும் எல்லையற்றதும் எனப்பலவாறாகச் சங்கரரினால் எடுத்தாளப்படுகின்றது. மேலும் பிரமம் ஒன்றே உள்பொருளும் உண்மைப்பொருளுமாகும் என்பதனை நிறுவமுயல்கின்றார். இவ்வகையில் அவர் காட்டும் அத்வைதம் இரண்டற்றது எனும் பொருளை மையமாகக் கொண்டு ஒன்றே உள்ள பொருளென்பதனை நிறுவுகின்றது.

பிரமம் உள்பொருளாக அமைய ஆன்மா, உலகு, ஈஸ்வரன் போன்ற அனைத்தும் தோற்றப் பொருட்களாக எடுத்தாளப்பட்டன. உண்மையானது எவ்வாறு அமையுமென ஆராயமுற்பட்ட சங்கரர், அது மாற்றமில்லாததும் என்றுமுள்ளதும் சுயமுரண்பாடற்றது மாக இருக்க வேண்டுமெனக் கண்டு கொண்டார். இவ்விளக்கத்திற்கு உட்படும் வகையில் பிரமமே உண்மையானதெனக் கொண்டார். பிரமத்தினை உண்மையானது எனக்கூறுகின்ற அதேவேளை மாற்றத்திற்குரியதும், சுயமுரண்பாடு கொண்டதும், அழிவுக்குரியதுமான கட்டிடங்கள், மரங்கள், போன்ற கட்புலனுக்குரிய பொருட்களை உண்மையானதெனக் கொள்வது தர்க்க ரீதியில் பொருத்தமற்றதெனக் கண்டார். எப்போதும்கூடிய உண்மை, குறைந்த உண்மை என்பது சாத்தியமில்லை என்பதால் பிரமத்தை உண்மையாகக் கொண்டது மாத்திரமன்றி ஏனையவற்றைத் தோற்றப் பொருட்களாக எடுத்தாண்டார். தோற்றப்பொருள் என்பது இல்லாத பொருள் எனச் சங்கரரின் கருத்தில் அமையவில்லை என்பது இங்கு

மனத்திடைக் கொள்ளத்தக்கதாகும். இதனால் தான் சங்கரர் அவை உண்மையுமல்ல, பொய்யுமல்ல, தோற்றப் பொருட்கள் என விளம்பி நின்றமை காணலாம்.

சங்கரருக்குப் பின்வந்த இராமானுஜர் சங்கரரைப் போல வேதாந்தசூத்திரம், உபநிடதங்கள், பகவத்கீதை போன்ற நூல்களுக்கு உரை வழங்கி ஒழுங்குமுறையான ஒரு தத்துவ அமைப்பினை முன்வைத்தவரில் ஒருவராவார். விசிட்டாத்வைதம் எனும் வகையில் .இராமனுஜரின் தத்துவக் கொள்கை விளங்குகின்றது. சுருங்கக் கூறின் விசேடித்த அத்வைதக் கொள்கையாக இது அமைவுற்றதெனலாம். வைஷ்ணவப் பாரம்பரியத்தில் உதித்த இராமானுஜர் வைஷ்ணவ சமயத்தின் வளர்ச்சி கருதி சங்கரரது தத்துவச் செல்வாக்குட்பட்ட அத்வைதத்தினை ஆழமாக நோக்க வேண்டிய சூழலுக்குட்பட்டிருந்தார். சங்கரரது தர்க்க, தத்துவ நோக்கினை முற்றாக நிராகரிக்க முற்படாத இராமானுஜர் சங்கரர் விட்ட தவறுகளினைத் திருத்தி உயர்ந்ததொரு நெறியினைப் படைக்க முற்பட்டிருந்தமை விசிட்டாத்வைதத்திற்கு ஊடாகப் புலனாகின்றது.

சங்கரரது அத்வைதம் தத்தவார்ந்த நோக்கில் பலராலும் ஏற்றிப் போற்றப் பட்டிருந்தாலும் அனைத்து ஆன்மாக்களினையும் நல்வழிப்படுத்தி அழைத்துச் செல்லவல்ல நிலையில் அமைந்திருக்கவில்லை என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதே. வித்தையினால் நாம் அவித்தையினை அகற்றிப்பரிபூரணமாம் பிரமத்தை அறியலாம் அல்லது உணரலாம் என்பது அத்வைதத்தில் தெளிவாக்கப்பட்டிருந்தாலும் மக்களில் பெரும்பாலோனோர் அறிவின் மாத்திரத்தினால் உண்மையினை முழுமையாக உணரும் தகமையினைப் பெற்றிருக்காதவர்கள் என்பது தெளிவிற்குரியதே. இந்நிலையில் மக்கள் பலருக்கும் நன்மை பயப்பதான தத்துவமாக அத்வைதம் அமைவதில் சில சிக்கல்கள் எழுவது தவிர்க்கப்பட முடியாததாக இராமானுஜருக்குப் புலப்பட்டது. இதனால் மக்களை வழிப்படுத்த வல்ல சமய நெறி தத்துவத்துடன் இணைந்திருக்க வேண்டுமென்பதனை உணர்ந்தார். தத்துவமும் சமயமும் தனித்தனியாக இருப்பதில் பயனில்லை என்பதனைக் கண்டார். மேலைத்தேய தத்துவ ஞானியான லைபினிட்ஸ் போல தத்துவத்தினையும் சமயத்தையும் ஒன்றிணைத்து விளக்கிய பெருமைக்குரிய தத்துவவாதியாக இவர் தரிசனப்பரப்பில் விளங்குகின்றார். வடக்கில் நிம்பாக்கர் வைஷ்ணவத்தினை வளர்த்துச் சென்ற தன்மைபோல தெற்கில் இராமானுஜர் வளர்த்துச் சென்றார். இராமானுஜரின்பின் விசிட்டாத்வைதமானது வைஷ்ணவத்தினைத் தத்துவரீதியிலும் சமயநெறியிலும் ஓர் ஆழமான காத்திரமான பாதையில் அழைத்துச் செல்ல வழிகாட்டிற்று.

பரம்பொருளான வாசுதேவனையே அதி உயர்ந்த கடவுள் என்பதனைச் சந்தேகத்திற்கிடமின்றி ஏற்றுக் கொண்ட இராமானுஜர், சங்கரரைப் போல உண்மைப்பொருளை ஒன்றென ஏற்பதில் முரண்படவில்லை. அத்வைதம் இரண்டற்றது எனும் பொருள் சுட்டி நிற்கின்றது. அதாவது இருமையற்ற நிலையினைக் குறிப்பதாகும். பிரமத்தினை ஒரேஒரு உண்மைப் பொருளாகக் கொண்ட அதே வேளை ஆன்மா, உலகினை உண்மையல்லாததுமான ஒரு தோற்றப் பொருளாகச் சங்கர அத்வைதம் விளக்குகின்றது. இந்நிலை இராமனுஜருக்கு உடன்பாடாய் அமையவில்லை. வாசுதேவனின் தன்னிகரில்லா உயர்தன்மையை ஏற்ற நிலையிலும் ஆன்மா, உலகினைத் தோற்றப் பொருளாகக் கொண்டமை ஏற்புடையதாக இருக்கவில்லை. இத்தன்மையினால் சங்கரரின் அத்வைதக் கொள்கையின்று வேறுபட்டுத் தன் விசிட்டாத்வைதத்தினை விளக்குகின்றார். இவரது தத்துவத்திற்கமைய கடவுள் வாசுதேவன் ஒருவனேயாவான். ஆனால் அவர் சில விசேடங்களைக் கொண்டுள்ளார். தனியான்மாக்கள் இயற்கை ஆகிய இரு பொருட்களும் கடவுளுக்குத் தொடர்புடைய விசேஷணங்கள் என்றும் அவற்றிற்கு மேலோங்கி அவற்றைக் கட்டுப்படுத்தும் சுதந்திரமுள்ள பொருள் விசேஷ்யம் என்றும் அழைக்கப்படுகின்றன. மேலான சுதந்திரமுள்ள பொருள் ஒன்று என்பதால் தான் உள்பொருள் ஒன்றென்னும் நிலை ஏற்பட்டதாகக் கூறுவர்.

சாதாரண மனிதனின் உயிரானது இயங்கிக் கொண்டு இருக்கின்றது. அதாவது உயிர் உடலைக் கட்டுப்படுத்துகிறது. உயிரினது விருப்பிற்கு, தன்மைக்கேற்ப உடல் இயங்குகின்றது. இந்த உடலை, உயிர் கட்டுப்படுத்துவது போல உயிரை இறைவன் கட்டுப்படுத்துகின்றான். இறைவனது விருப்பிற்கு ஏற்பவே உயிர் இயங்குகிறது. இங்கு உடலோடு உயிரை ஒப்பிடுமிடத்து உயிர் சுதந்திரமுள்ள பொருளாகவும் விசேடமுள்ளதாகவும் கருதப்படுகிறது. இவற்றை இறைவனோடு ஒப்பிடும் பொழுது இவை இரண்டிற்கும் மேலான சுதந்திரமுள்ள பொருளாக இறைவன் கருதப்படுகின்றான். இவ்வாறு இறைவனை விசேடமுள்ள பொருளாகக் கருதுகின்ற காரணத்தால் இவரது கொள்கை விசிட்டாத்வைதம் என அழைக்கப்படுகின்றது.

கடவுள் தொடர்புடைய விசேஷங்களில் ஒன்றான இயற்கையை நோக்கின் புலனுணர்ச்சியற்ற முறையை இங்கு குறித்து நிற்கின்றது. அசித் அல்லது புலனுணர்ச்சியற்ற முறை என்பது உணர்ச்சியில்லாததென மறுவார்த்தையில் கூறலாம். சித்உணர்ச்சியுள்ள முறையாக உயிருள்ள பொருட்கள், செடிகள், மிருகங்கள், மனிதன் ஆகியனவற்றை உள்ளடக்கும். சுருக்கமாகச் சித் என்பது வாழ்வின் ஆட்சி என்றும் அசித் என்பது சடத்தின் ஆட்சி என்றும் கூறலாம்.

காணக்கூடிய உலகில் கடவுள் தன்னையே விளக்கும் வழிகள் தான் சித்தும் அசித்துமாகும். ஆகவே தத்தவ அறிவானது சித்து, அசித்து, ஈஸ்வரன் எனும் முப்பொருள்களைத் தெளிவாக விளக்குவதுதான் எனலாம். யதீந்திர மததீபிகை என்னும் விசிட்டாத்வைத நூலில் இத்தகைய கருத்துக்களைச் சுருக்கமாகக் காணலாம். பாதராயணர், பிரமம் என்று போதிக்கும் நோக்கத்துடன் இந்தப் பிரமத்தின் இயற்கையை ஆராயத் தொடங்கி விளக்கினார். இதே வகையில் சித் அசித்தால் தகுதியாகும் ஒரே உண்மை பிரமம் என்ற விஷ்ணு அல்லது நாராயணன், அல்லது வாசுதேவன் என விளக்குகின்றார்,(10). இதுவே விசிட்டாத்வைத தத்துவமாகின்றது. சித், அசித் எனும் இரண்டும் இறைவனை முற்றிலும் சார்ந்துள்ளது. இதனை இராமானுஜர் அப்பிரதசித்தி எனும் நிலையால் தெளிவாக விளக்குகின்றார். உயிர், உலகு ஆகியன இறைவன் அங்கங்களாகும். இறைவன் இவ்வங்கங்களைக் கொண்டியங்குகின்றான். உயிரும் உலகும் இறைவனின் அங்கங்களாக அமைவதால் அவை அவரால் வழிநடத்தப் பெறுவதாகவும் தாங்கப் பெறுவதாகவும் முற்றிலும்

அவருக்காகவே இருப்பதாகவும் கருதப்படுகின்றன. உலகு, உயிர், இறைவன் ஆகியவற்றின் வேறுபடுத்தப்பட முடியாத ஒற்றுமை பழத்தினின்று பிரிக்க இயலாச் சுவைக்கு ஒப்பிடப்படுகின்றது.

சைவசித்தாந்திகள் போல உலகு, உயிர் இறைவன் ஆகிய மூன்றினையும் உள்பொருளாக ஏற்றுக்கொண்ட இராமானுஜர், சரீர சரீரத் தொடர்பில் இறைவனின் சரீரமாக ஆன்மாவினைக் கொண்டார். இறைவன் சடத் தன்மை அற்றவரென்றும் ஆன்மாவே சடத்தன்மையான உடலுடன் சேருமென்றும் விளக்குகின்றார். ஒவ்வொரு ஆன்மாவும் தரும பூத ஞானம் உடையதென்றும் கர்ம வினைகளின் பயனாகப் பிறப்பெடுக்கும் என்றும் கூறப்படுகின்றது. அதற்கேற்ற வகையில் இறைவன் உடல்களைப் பகிர்ந்தளிப்பார் எனவும் சுட்டுவர். ஆன்மாக்கள் இறைவனை வணங்கி இறைவனுக்கும் சமமான ஒரு நிலையை அடைதல் தகுமெனப்படுகின்றது. ஆன்மாக்கள் இறைவனுடன் சேருவதற்காக தகுதி உடையனவாக இருக்கின்றன. இந்த ஆன்மாக்கள் அறிவே சொரூபமானவை. ஆனால் அறியாமையினால் உலகத்தில் ஒன்றுபட்டு கட்டுண்டு காணப்படுகின்றன. ஞானம், கர்மம், பக்தி, போன்ற வழிமூலம் உயர்நிலையினை அடையலாம் என இராமானுஜர் வழிகாட்டினார். இந்த உலக வாழ்விலிருந்து வைகுண்டப் பதவியடைவதே எமது வாழ்வின் இறுதி இலக்காகும். இதுவே ஆன்ம விடுதலையுமாகும்.

ஒவ்வொரு ஆன்மாவிற்கும் சுதந்திரசித்தம் உண்டு. இராமானுஜர் கருத்துப்படி கட்டுப்பாடு இருந்த போதிலும் அக்கட்டுப்பாட்டின் ஊடாக ஒரு முன்னேற்றத்தை அடைய ஒரு வழியுண்டு. இந்தச் சுதந்திரத்தைக் கொண்டு ஆன்மா ஓர் உயர்ந்த நிலையை அடைதல் வேண்டும். இதுவே முத்தியாகும். எல்லோருக்கும் ஒரே சுதந்திரம்தான் உண்டு என்று கூறுவதாகவில்லை. இச்சுதந்திரத்தைக் கொண்டு ஆன்மா முத்தியடைய இறைவன் உதவி செய்கின்றான் என்பர். பல மார்க்கங்களை எடுத்தாண்டாலும் ஆன்மா பக்தி மார்க்கத்தின் ஊடாகவே இலகுவில் உலகப் பந்தங்களினின்று நீங்க வழியுண்டு என இராமானுஜர் திடமாகக் கருதினார்.

ஞான நிலையானது தியானம், நித்தியாசனம் ஆகிய நிலையில் தான் பெறப்படுவதாகும். கர்மமென்பதிலும் சுயநல மனப்பாங்கு கலந்து விடுவதினால் நாம் முடிவில் நற்பலனைப் பெறல் சாத்தியமற்றதாகின்றது. எனவேதான் பக்தியினை உயர்நிலைக்கு அழைத்துச் செல்லவல்ல சாதனமாக இராமானுஜர் எடுத்தாண்டார். பக்தி என்பது இறைவனிடம் செலுத்தும் அன்பேயாகும். ஒவ்வொருவரும் சமூகத்தில் இவ்வன்பின் பரிணாமத்தினைப் பல்வேறு வகைகளில் காணுகின்றோம். தாயன்பு, பிள்ளைப்பாசம், சகோதரவாஞ்சை, குருவில் அன்பு, பெரியோரில் அன்பு, மனையாளில் அன்பு எனப் பல்வேறு ரூபங்களில் காணுகின்றோம். அன்பு, பாசம், காதல், வாஞ்சை எனப் பலவாறு அழைக்கப்படுவது போல் இறைவனிடம் செலுத்தும் அன்பு பக்தியாக எடுத்தாளப்படுகின்றது. அன்பு இவ்வளவு பேரைத்தான் அடக்கும் என்றோ, அல்லது இவ்வளவு அளவுக்குத்தான் செல்லும் என்றோ அல்லது இவ்வளவு காலம் தான் நிலைக்குமென்றோ சொல்லும் தரத்தன்று. ஏழேழு பிறப்பிற்கும் பந்தம் தொடர்கதையாக விளங்குவதாகச் சுட்டுவர். மேலும் அன்பு செலுத்துவதென்பது ஓர் உள நடத்தையாகும். இது ஒவ்வோர் மனிதராசிகளுக்கும் இலகுவில் சாத்தியமாகக் கூடியதொன்றாகும். இதனால்தான் வள்ளுவர் கூட "அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாள்" என வினாவுதல் காணலாம்,(12).

வாசுதேவன் பண்புகளின் உறைவிடம் எனவும் நல்லியல்புகளின் களஞ்சியம் எனவும் சுட்டப்படுகின்றார். சுவர்க்கத்தின் பொருள் என்றும் பூரண அழகு, வசீகரம், மென்மை ஆகியன உடையவர் என்றும் பக்தனால் சுலபமாக அடையக்கூடியவனென்றும் அடைய விழைவோர்க்கு அன்பின் சமுத்திரமென்றும் சுட்டப்படுகின்றன. "தன்னிடத்தில் மனதை வைத்து தன்னிடத்து புத்தியைச் செலுத்துபவன் தன்னிடத்திலேயே வசிப்பவன் என்பதில் சந்தேகமில்லை" எனப் பகவான் பகவத்கீதையில் சுட்டுதல் காணலாம், (13). வேதகாலத்தினின்று இன்றுவரை பக்தியானது ஒரு தொடர்கதை வரலாறு உடையதாக விளங்குகிறது. எனினும் ஆரம்ப காலத்தில் பக்திமார்க்கம் பற்றி விளக்குகையில் குறைந்த நிலையிலிருக்கும் ஆன்மா மேம்பட்ட ஒருநிலையை அடையமாட்டாது எனும் வகையில் கருதினார். ஆனால் இராமானுஜர் கடவுளைப்பற்றி பூரண அறிவைப் பெறப்பக்தி மார்க்கம் போதியதொன்றெனக் கருதினார். பக்தியானது மேலான உணர்ச்சி மாத்திரமன்றி அறிவோடு கூடிய ஓர் உணர்ச்சி என்பதுடன் அறிவோடு கூடிய ஓர் உயர்ந்த உந்துதலுமாகும். கடவுளை மனத்தால் விரும்பும் போது உள்ளுணர்வு மூலமாகக் கடவுள் உணரப்படுகின்றார். இந்த வகையில் பக்தி மார்க்கத்தின் மூலமாகக் கடவுளை உணர்ந்தது மட்டுமன்றி எம்மையும் நாம் பூரணப்படுத்திக் கொள்கிறோம். இவ்வாறு பூரணப்படுத்தலின் மூலம் பூரண அறிவு கிட்டுகிறது. சங்கரர் பக்தி மார்க்கத்தைப் பற்றிக் கூறுகையில் அது இறந்த நிலையில் அறிவைத் தர மாட்டாது எனவும் உள்பொருள் பற்றிய அறிவை ஞானத்தின் மூலமாகத்தான் அறிய முடியுமெனவும் எடுத்துக் காட்டினார். ஆனால் இராமனுஜர் சங்கரரின்று பக்தி மார்க்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து உயர்தர அறிவு அமைவதற்குப் போதிய ஒன்று எனவும் எடுத்துக் காட்டினார்.

இராமானுஜர் பக்திவழி மனிதன் கடவுள் பற்றிய முழு அறிவினையும் நோக்கி நகர்கின்றான் என்கின்றார். இதற்குப் பல நிலைகளையும் உட்படுத்துகின்றார். உணவினைக் குறைத்தல் மற்றவற்றினின்று விடுபட்டுக் கடவுளிடம் பற்று வைத்தல், கடவுளைத் தொடர்ந்து தியானித்தல், பிறருக்கு நன்மை செய்தல், எல்லோரும் நல்லாயிருக்க வாழ்த்துதல், உண்மையாயிருத்தல், பலாத்காரமின்மை, தானம் நம்பிக்கை போலறவற்றினைக் குறிப்பிட்டு இவை பக்தி நிலைக்குச் சாதகமான நிலைகளாக எடுத்தாளுகிறார்,(14). இராமானுஜர் காட்டும் பக்தியின் ஒவ்வொரு படிநிலையின் வளர்ச்சியில் தூய்மை அடைகின்றோம் எனும் கருத்து உயர்ந்த ஒழுக்க நிலைக்கு ஒப்பிடக்கூடியதாக அமைகின்றது. ஒவ்வொரு மனித உள்ளத்தின் புனிதப் பயணத்தின் முன்னேற்றமே சமயம் என்பது போல் வைஷ்ணவம் விளங்குதல் தெளிவிற்குரியதாகும். ஒவ்வொரு பக்தனும் அன்பு, பண்பு உண்மை, தியாக மனப்பான்மை, அஹிம்சை, தன்னலமின்மை, தொண்டு எனும் நல்லொழுக்கங்களைக் கொண்டிருக்க வேண்டுமென்பதாற் போல் அமைகின்ற நிலை இந்து மதத்திற்குரிய உயர்நிலைப் பாட்டினைப் பிரதிபலிப்பதாகின்றது.

இந்தியாவில் குறிப்பிடத்தக்க சமயச் சார்பான தத்துவத்தினைக்

கட்டியெழுப்பிய நாயகனாக இராமானுஜர் கருதப்படுகின்றார். இராமானுஜரின் இறைநிலைக் கருத்துவாதமே மத்துவர், வல்லபாச்சாரியர், சைதன்யர், இராமானந்தர், கபீர், நாமதேவ், துளசிராம் போன்றோரின் கருத்துநிலை வளர்ச்சிக்கு அடிப்படையாயிற்றென்றால் தவறாகாது. வைஷ்ணவத்திற்கு தத்துவரீதியான, சமய ரீதியான தளமொன்றைச் செப்பனிட்டவராக இவர் பங்களிப்பமைதல் நோக்கத் தக்கதாகும்.

## உசாத்துணைகள்:


1. Das gupta, Surendranath, A History of Indian Philosophy Vol. 111,Motilal Banarasidass, New Delhi 1975. p.13.
2. R.G. Bhandakar.Vaisnavism Saivism and Minor religious Systems, Bhandarkar oriental Research Institute, Poona - 1982.p.142.
3. Suvira Jaiswal - The Origin and development of Vaisnavism , munshirm Manoharalal. Delhi -1967. p. 38.
4. Radhakrishnan.S, Development of Bhagavata Religion
5. Ibid
6 சதபதப் பிரமாணம் X111 - 6 -1
7. அருணந்தி சிவாச்சாரியார்- சிவஞானசித்தியார் பரபக்கம். பாடல் 265
8. Suvira Jaiswal op.cit. p. 212.
9. Dasgupta op .cit, pp. 14, 15.
10. M.yamunacharya, Ramanuya's teachings in his own words. Bhavan's Book University, Bharatiya Vidya Bhavan India. 1963. p .41.
11. திருக்குறள் - 71.
12 Bhagavadgita - 12- 8.
13. S. Radhakrishnan., Indian Philosophy ,Vol. 11, London. 1927. p. 719.
14. பச்சமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர்ஏறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிரயான் போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருள்ளானே.
தொண்டரடிப்பொடியாள்வார்


36 ம் பக்கத் தொடர்ச்சி

**உலகவங்கியின் அமைப்புரீதியான......**

### உசாத்துணைகள்


(1) Ahuluwalia, M.S.,Carter N.G. and H.B. Chenery (1979) : Growth and Poverty in Developing Countries, Journal of development Economics, No. 6, pp. 299 - 341.

(2) Bourguignon, F.J. De Melo and C. Morrisson (1991): Poverty and Income Distribution during adjustment: Issues and evidence from the OECD Project. World Development VOL. 19, No 11, November, pp. 1485 - 1506.

(3) Gunatileke, G. et al (1992): Rural Poverty in Sri Lanka. Asian Development Review, VOL 10, No I, pp. 164 - 197.

(4) Ribe, H and Soniya Carvalho (1990): Adjustment and the Poor, Finance and Development, VOL 27, No. 3. September, pp. 15-17.

(5) Tjondronegoro, S.M. P. et al (1992): Rural Poverty in Indonesia. Asian Development Review, VOL 10. No 1, pp. 67-90.

(6) World Bank, WBARs 1980-1989

(7) World Bank, World Development Report 1991.



**மார்க்கம் - இதழ் 1 1992**

அபிவிருத்தி என்னும் கருப்பொருளை மையமாகக் கொண்டு, பின்வரும் கட்டுரைகளை மார்க்கம் முதலாவது இதழ் கொண்டுள்ளது.

1. பூகோளப் பிரச்சினைகள் வேண்டிநிற்கும் புதிய கருத்தொருமிப்பு.
2. அபிவிருத்தி, தொடர்பு,பண்பாடு.
3. அபிவிருத்தியடைந்த நாடுகளும் 3 வது உலக அபிவிருத்தியும்.
4. சார்க் அமைப்பின் சாதனைகள்
5. தென் ஆசியாவின் பன்மதச் சமூகங்களில் மதச்சார்பின்மை.
6. காபனீரொட்சைட் அதிகரிப்பும் காலநிலை மாற்றங்களும்.
7. சமூகக் கடன் ஊக்குவிப்பவர்கள்.
8. ஜனசக்தித் திட்டம்.
9. விஞ்ஞான விருத்தியின் வளர்ச்சி.
10. நுண்கலைகளில் பத்திரசம்.

மார்க்கம் இதழைப் பெறவிரும்புவோர் Marga Institute என்ற பெயரில் 25/- ரூபாவுக்கான காசோலை/மணிஓடரைப் பின்வரும் முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

**விலாசம்:**

Assistant Director,
Publication & Communication
Marga Institute
P.O.Box 601
61,Isipathana Mawatha
Colombo 5

# தேசிய வருமான வட்டப்பாய்ச்சல்

(CIRCULAR FLOW OF NATIONAL INCOME)


பகுதி - 1

உலகயுத்தத்தை தொடர்ந்து வந்த காலப்பகுதியில் தேசிய கணக்குகளின் (National Accounts) முக்கியத்துவத்தை உணர்ந்த ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் எல்லா நாடுகளிலும் அதன் கணிப்பீடுகளில் சீரான முறைகளைக் கடைப்பிடிப்பதற்கு வற்புறுத்தி வந்துள்ளது. பொருளாதாரப் பகுப்பாய்விற்கும், கொள்கைத் திட்டமிடல் போன்ற நடவடிக்கைகளிலும் தேசிய கணக்குகளே தற்பொழுது பேரினப் பொருளியல் ஆய்வுகளில் பிரதான பங்கு வகிக்கின்றது.

தேசியக் கணக்குகள் ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி வெளியீடு, வருமானம் என்பவற்றின் வட்டப்பாய்ச்சல் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. தேசியவருமானவட்டப்பாய்ச்சல் என்பது குறித்த ஒரு காலப்பகுதியில் வீட்டுத்துறை, நிறுவனத்துறை என்பவற்றிற்கிடையில் இடம்பெறுகின்ற தேசிய வருமானப் பாய்ச்சலைக் குறிக்கின்றது.

இவ் ஆய்வில் பொருளாதாரத்திலுள்ள தனிப்பட்டவர்கள் வீட்டுத்துறை (நுகர்வுப்பகுதி), நிறுவனத்துறை (உற்பத்திப்பகுதி) என்ற இரண்டு வகையாகப் பிரித்து ஆராயப்படுகின்றனர். வீட்டுத்துறை என்பது பொருளாதாரத்திலுள்ள உற்பத்திக்காரணிகளின் உடமையாளர்களாகவும், நிறுவனத்துறை உற்பத்தி செய்த பொருட்களை நுகர்பவர்களாகவும் தொழிற்பட, நிறுவனத்துறை என்பது பொருள் உற்பத்தியில் ஈடுபடுகின்ற அல்லது பயன்பாட்டை உருவாக்குகின்ற தொழிற்பாட்டை செய்யும் அலகாகவும் உள்ளது.

ஓர் எடுகோள் முறையான சந்தைப் பொருளாதாரமொன்றிலே தேசியவருமான வட்டப்பாய்ச்சல் எவ்வாறு தொழிற்படுகின்றது என்பதை பின்வரும் வரிப்படம் விளக்குகின்றது.




1. முடிவுப் பொருட்கள் சேவைகள்
2. முடிவுப் பொருட்கள் சேவைகள் மீதான கொடுப்பனவு (செலவு)
3. காரணி வருமானம் (வாடகை, கூலி, வட்டி, இலாபம்)
4. உற்பத்திக் காரணிச் சேவைகள் (நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி)
5. இடை நிலைப் பொருட்கள்

இவ்வரிப்படத்தில் அம்புக்குறியைக் காட்டும் கோடுகளானது, பாய்ச்சல் எந்தெந்தத் துறைகளுக்கிடையில் நடைபெறுகின்றது என்பதைக் குறித்து நிற்கின்றன. பாய்ச்சல் படத்தின் கீழ் பகுதியில் உள்ள கோடுகள் மூலம், உற்பத்திக்காரணிச் சேவைகள் வீட்டுத்துறையிலிருந்து உற்பத்தி நோக்கம் கருதி நிறுவனத்துறைக்கு பாய்வதையும் அக்காரணிச் சேவைகளுக்கு சன்மானமாக காரணி உடமையாளர்கள் பெறுகின்ற வாடகை, கூலி, வட்டி, இலாபம் ஆகிய வருமானங்களும் காட்டப்படுகின்றன. மேல் பகுதியில் உள்ள கோடுகள் நிறுவனத்துறை உற்பத்தி செய்த முடிவுப் பொருட்களும், சேவைகளும் வீட்டுத்துறையை நோக்கி பாய்வதையும் இவற்றிற்காக வீட்டுத்துறை செய்கின்ற செலவுகள் நிறுவனத்துறையை நோக்கி பாய்வதையும் காட்டுகின்றன. இச்செயல்முறை இவ்வாறு தொடர்ந்து முடிவுப்பொருட்கள் சேவைகளுக்காகவும் உற்பத்திக்காரணிச் சேவைகளுக்காகவும் இரு துறைகளிடையேயும் பாய்வதை விளக்குகின்றன. சுருக்கமாகக் கூறினால் உற்பத்தி பாய்ச்சல் மூலமாக வருமானப்பாய்ச்சலும், வருமானப்பாய்ச்சலினூடாக செலவுப்பாய்ச்சலும் ஏற்படுகின்றன. இவ்வட்டப்பாய்ச்சல் மேலும் இரு உபபாய்ச்சல்களாக ஆராயப்படலாம்.

## (i). மெய்ப்பாய்ச்சல் (Physical Flow)

பாய்ச்சல் படத்தில் காட்டப்பட்டுள்ள வெளிப்பாய்ச்சல் கோடுகள் (1,4) இரண்டும் மெய்ப்பாய்ச்சல்களைக் குறித்துநிற்கின்றன. வீட்டுத்துறையிலிருந்து நிறுவனத்துறைக்கு உற்பத்திக்காரணிச் சேவைகள் பாய்வதும், நிறுவனத்துறையிலிருந்து பொருட்கள், சேவைகள் வீட்டுத்துறைக்கு பாய்வதும், பௌதீக ரீதியில் நிகழ்வதையே இது வெளிப்படுத்துகின்றது.

## (ii) பணப்பாய்ச்சல் (Cash flow)

உட்பாய்ச்சல் கோடுகள் (2, 3) இரண்டும் பணப்பாய்ச்சல்களைக் குறித்து நிற்கின்றன. நிறுவனத்துறையிலிருந்து வீட்டுத்துறைக்கு காரணி வருமானம் பாய்வதும், நிறுவனத்துறை உற்பத்தி செய்த பொருட்கள், சேவைகளைக் கொள்வனவு செய்யும் போது வீட்டுத்துறைக்கு ஏற்பட்ட செலவு நிறுவனத்துறைக்கு

பாய்வதும் பணரீதியில் நிகழ்வதையே இது விளக்குகின்றது.

## எடுகோள்கள்

தேசிய வருமான வட்டப்பாய்ச்சல் விளக்கப்படம் பின்வரும் எளிமையான எடுகோள்கள் சிலவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும்.

(1) பொருளாதாரத்தில் உற்பத்திக் காரணிக்கு உடமையாக வீட்டுத்துறையும், உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடு கின்ற நிறுவனத்துறை ஆகிய இரண்டு துறைகள் மட்டுமே இயங்குகின்றன

(2) நிறுவனத்துறை உற்பத்தி செய்யும் பொருட்கள் அனைத்தும் நுகர்ச்சிக்குரிய பொருட்களாக இருப்பதுடன் வீட்டுத்துறை பெற்ற வருமானம் முழுவதும் இப்பொருள்கள், சேவைகள் கொள்வனவு செய்வதற்காகவே செலவிடப்படுகின்றன. அதாவது இங்கு வீட்டுத்துறையின் வருமானம் முழுவதும் செலவிடப்படுவதால் "சேமிப்புத் தன்மையற்ற பொருளா தாரம்" என்பதை எடுகோளாகக் கொள்ளவேண்டும்.

(3)இங்கு அரச தலையீடுகள் கிடையாது என்பது மற்றுமொரு எடுகோள்ஆகும். அதாவது அரசாங்கம் வரிவிதிப்பு,மானியம் வழங்குதல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என்பதையே இது குறிக்கின்றது.

(4)இப்பொருளாதாரம் வெளிநாட்டுத் தொடர்பற்ற ஓர் "மூடப்பட்ட பொருளாதாரம்" ஆகும். ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக் கைகள் மூலமான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் எதுவுமற்ற பொருளாதாரமாகும்.

இவ்வெடுகோள்கள் நடைமுறைக்குப் பொருத்தமற்றவையாக உள்ளதால், எமது இந்த ஆய்வை நடைமுறைச்சாத்தியமாக்க வேண்டுமாயின் எடுகோள்களைப் படிப்படியாக நீக்குதல் வேண்டும்.

## தேசியவருமானவட்டப்பாய்ச்சலிருந்து பெறக்கூடியமுடிவுகள்

(1) தேசிய வருமான வட்டப்பாய்ச்சலின் தொழிற்பாடுகள் மூலம் தேசியவருமரனம் உற்பத்தி, வருமான, செலவீட்டு ஆகிய மூன்று வழிகளில் கணிக்கலாம் என்ற முடிவைத்தருகின்றது. வீட்டுத்துறைக்கு நிறுவனத் துறையிலிருந்து பாயும் காரணி வருமானங்களின் அடிப்படையில் வருமானவழியிலான மதிப்பீடுகளும், நிறுவனத்துறை உற்பத்தி செய்த பொருட்கள், சேவைகளின் பணப்பெறுமதிகளின் அடிப்படையில் உற்பத்தி வழியிலான மதிப்பீடுகளும், வீட்டுத்துறை, நிறுவனத்துறை உற்பத்திசெய்த பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் அடிப்படையில் செலவீட்டு வழியிலும் தேசிய வருமானத்தை மதிப்பட முடியும்

(2) இவ்வாறு மூன்று வழிமுறைகளிலும் கணிப்பிடும் இறுதிமொத்தம் கோட்பாட்டு ரீதியில் ஒன்றக்கொன்று சமமாக இருக்கும். நிறுவனத்துறை உற்பத்தி செய்த ஒரு பொருளின் பணப் பெறுமதி அப்பொருளின் உற்பத்திக்கு பயன்படுத்திய காரணிகளுக்கு வழங்கிய கொடுப்பனவாகிய வாடகை, கூலி, வட்டி, இலாபம் என்பவற்றிற்கு சமமாகும். மொத்த வருமானம், மொத்த உற்பத்தி பெறுமதி ஆகிய இரண்டும் ஒரே பொருளின் இருபக்கங்களாகும். ஒரு பொருளுக்குப் பொருந்துகின்ற இந்த உண்மை குறித்த ஒரு காலப்பகுதியில் ஒரு பொருளாதாரத்தில் உற்பத்தி செய்த எல்லா முடிவுப் பொருட்கள், சேவைகளுக்கும் பொருந்தும் போது உற்பத்தியும், தேசிய வருமானமும் ஒன்றுக்கொன்று சமப்படும்.

வீட்டுத்துறை காரணிச் சேவைகளை வழங்கியதன் மூலம் தாம் பெற்ற வருமானத்தை நிறுவனத்துறை உற்பத்தி செய்த பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு செலவிடுவர். அதாவது ஒரு பொருளாதாரத்தில் வருமானம் உழைப்பவர்களால் குறித்த ஒரு காலப்பகுதியில் உற்பத்தி செய்த பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்பட்ட செலவினைக் கூட்டும் போது மொத்தச் செலவைக் கணிக்கமுடியும். எனவே வீட்டுத்துறை செலவிடுவது உற்பத்தித்துறையினின்றும் பெற்ற வருமானமாக இருப்பதனால் தேசியவருமானமும், தேசியச் செலவும் ஒன்றுக்கொன்று சமப்படும். மேலும் வீட்டுத்துறை மொத்தமாகச் செலவு செய்த தொகை நிறுவனத்துறை உற்பத்தி செய்த பொருட்கள் சேவைகளின் பெறுமதிக்கு சமமாக இருப்பதால் தேசியச் செலவும், தேசிய உற்பத்தியும் ஒன்றுக்கொன்று சமப்படும். எனவே தேசிய வருமான வட்டப்பாய்ச்சலானது தேசியவருமான மதிப்பீடுகள் மூன்று வழிமுறைகளில் மேற்கொள்ளப்படலாம் என்பதையும், அவ்வாறு கணிப்பிடப்பட்ட இறுதி மொத்தப் பெறுமதிகள் கோட்பாட்டு ரீதியில் ஒன்றுக்கொன்று சமமானது என்ற முடிவையும் தருகின்றன.

## சமநிலைத் தேசிய வருமானம்

சேமிப்புத்தன்மையற்ற, அரச தலையீடற்ற, மூடப்பட்ட பொருளாதாரமொன்றிலே வருமானமும், செலவும் சமப்படுகின்றன. இவ்வெடுகோள்களில் முதலாவது எடுகோளைத் தளர்த்துவோமாயின் பொருளாதாரத்தில் மக்கள் தமது வருமானத்தில் ஒரு பகுதியை சேமிக்கின்ற தன்மையை அவதானிக்கமுடியும். இத்தகைய ஒரு பொருளாதாரத்தில் பல்வேறு தேசிய வருமான மட்டங்களில் சேமிப்பும், முதலீடும் சமப்படுகின்ற போது நிர்ணயிக்கப்படுவதே சமநிலைத் தேசிய வருமானம் ஆகும். சேமிப்பு என்பது வீட்டுத்துறையிலிருந்து வெளியேறுவதால் தேசிய வருமான வட்டப்பாய்ச்சலில் வெளிப்பாய்ச்சலாகவும், முதலீடு என்பது நிறுவனத்துறைக்குள் வருவதனால் உட்பாய்ச்சலாகவும் அமைகின்றன. ஆனால் திறந்த, அரசதலையீடுள்ள பொருளாதாரமொன்றிலே உட்பாய்ச்சல் மாறிகளான முதலீடு, அரசாங்கச் செலவு, ஏற்றுமதிகள் ஆகியவை வெளிப்பாய்ச்சல் மாறிகளான சேமிப்பு, அரசாங்க வரிகள், இறக்குமதிகள் என்பவற்றிற்கு சமமாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் சமநிலைத் தேசிய வருமானம் நிர்ணயிக்கப்படும்.

பகுதி 11

தேசிய வருமானப்பாடத்திட்டத்திலுள்ள எண்ணக்கருக்களை அல்லது அவற்றுக்கிடையிலான வேறுபாட்டினை சமன்பாடு மூலமாக காட்டுதல்.

## (அ) உற்பத்தி வழியிலுள்ள சமன்பாடுகள்

- மொத்தத் தேசிய உற்பத்தி = மொத்தஉள்நாட்டு உற்பத்தி + வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம்.
- வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணிவருமானம் = வெளிநாட்டிலிருந்து கிடைத்த காரணி வருமானம் – வெளிநாட்டுக்கு அனுப்பிய காரணி வருமானம்.
- சந்தை விலையில் தேசியஉற்பத்தி = காரணிவிலையில் தேசிய உற்பத்தி + தேறிய நேரில்வரிகள்.
- தேறிய நேரில்வரிகள் = நேரில்வரிகள் – உதவிப்பணம் (மானியம்)
- நிலையான விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தி = $\frac{\text{நடைமுறைவிலைகளில் மொத்தத்தேசியஉற்பத்தி} \times 100}{\text{நடைமுறையாண்டின் விலைச்சுட்டெண் (உள்ளார் மொத்தத் தேசிய உற்பத்திச்சுருக்கி)}}$
- உள்ளார் மொத்த தேசிய உற்பத்திச்சுருக்கி = $\frac{\text{நடைமுறைவிலைகளில் மொத்தத்தேசியஉற்பத்தி}}{\text{நிலையான விலைகளில் மொத்தத்தேசியஉற்பத்தி}} \times 100$
- தேறிய தேசிய உற்பத்தி = மொதத்த் தேசிய உற்பத்தி – மூலதனத் தேய்மானம்
- உற்பத்தி பெறுமதி = இடைத்தரக்கொடுப்பனவுகள் + கூட்டியபெறுமதி
- கூட்டிய பெறுமதி = வாடகை + கூலி + வட்டி + இலாபம் + பெறுமானத்தேய்வு

## (ஆ) வருமானவழியிலுள்ள சமன்பாடுகள்

- மொத்த உள்நாட்டு வருமானம் = வாடகை + கூலி + வட்டி + இலாபம்
- மொத்தத் தேசியவருமானம் = மொத்த உள்நாட்டு வருமானம + வெளிநாட்டில் இருந்து கிடைத்ததேறிய காரணி வருமானம்
- தேறிய தேசிய வருமானம் = மொத்தத் தேசியவருமானம் – மூலதனத்தேய்மானம்
- மெய்த் தேசிய வருமானம் (மூடப்பட்ட பொருளாதாரமாயின்) = $\frac{\text{நடைமுறைகளில் தேசிய வருமானம்}}{\text{நடைமுறையாண்டின் விலைச்சுட்டெண்}} \times 100$
- மெய்த் தேசிய வருமானம் (திறந்த பொருளாதாரமாயின்) = நிலையான விலைகளில் மொத்த தேசிய உற்பத்தி (அல்லதுவருமானம்) + ஏற்றுமதிகளால் வர்த்தக மாற்று விகிதத்தில் எழுந்த விளைவுகள்
- தனியார் (குடித்தன) வருமானம் = தேசிய வருமானம் – கூட்டுவரிகள் பகிரப்படாத இலாபம் – சமூகபாதுகாப்பு உதவுதொகைகள் + மாற்றல்கொடுப்பனவுகள்
- செலவிடக்கூடிய வருமானம் (கையளிக்கத்தகு வருமானம்) = தனியார் (குடித்தன) வருமானம் – தனிநபர் வருமானவரிகள்

## (இ) செலவீட்டு வழியிலுள்ள சமன்பாடுகள்

- மொத்த உள்நாட்டுச் செலவு = மொத்த நுகர்வுச் செலவு + மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்

- மொத்த நுகர்வுச்செலவு = தனியார் நுகர்வுச்செலவு + அரசாங்க நுகர்வு (நடைமுறை)ச் செலவு
- தனியார் நுகர்வுச்செலவு = உள்நாட்டுப்பொருட்களும், சேவைகளும் + பொருட்களினதும் காரணியல்லாச் சேவைகளினதும் இறக்குமதிகள்.
- மொத்த உள்நாட்டுமூலதன ஆக்கம் = மொத்த உள்நாட்டுநிலையான மூலதன ஆக்கம் + இருப்புகளில் மாற்றங்கள்.
- மொத்தத் தேசியச் செலவு = மொத்த உள்நாட்டுச் செலவு + பொருட்கள், சேவைகளின் ஏற்றுமதி – பொருட்கள், சேவைகளின் இறக்குமதி
  அல்லது
  = மொத்த உள்நாட்டுச் செலவு + தேறிய வெளிநாட்டு முதலீடு – சர்வதேச நன்கொடைகளினதும் மாற்றங்களினதும் தேறிய பெறுகைகள்.
- மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு = மொத்த உள்நாட்டுச் செலவு + பொருட்களினதும் காரணியல்லா சேவைகளினதும் ஏற்றுமதிகள் – பொருட்களினதும் காரணியல்லா சேவைகளினதும் இறக்குமதிகள்.

...ம்புத் தமிழ்ச் சங்க நூலகத்துக்கு
... நன்கொடையாக அளித்தது

- மொத்தத்தேசிய உற்பத்திமீதானசெலவு = மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு+ வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம்
- மொத்த மூலவளங்கள் = மொத்த உள்நாட்டு உற்பத்தி + பொருட்களினதும், காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள்.
- மூலவளங்களின் பயன்பாடு = மொத்த நுகர்வு + மொத்த உள்நாட்டு மூலதனஆக்கம் + பொருட்களினதும் காரணியல்லா சேவைகளினதும் ஏற்றுமதிகள்
- உள்நாட்டு சேமிப்புக்கள் = மொத்த முதலீடுகள் – பொருட்களினதும் காரணியல்லா சேவைகளினதும் தேறிய இறக்குமதிகள்
- தேசிய சேமிப்புக்கள் = உள்நாட்டு சேமிப்புக்கள் + வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம் + வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் மாற்றல்கள்.
- உள்நாட்டு சேமிப்பு விகிதம் = $\frac{\text{உள்நாட்டு சேமிப்புக்கள்}}{\text{சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி}} \times 100$

பா. சிவாஜி

## குறிப்பிட்ட சில நாடுகளின் சனத்தொகை (மில்லியனில்) – 1992

| | |
|---|---|
| உலகம் | 5420 |
| வளர்முக நாடுகள் | 4197 |
| வளர்ச்சியடைந்த நாடுகள் | 1224 |
| 1. இந்தியா | 882.6 |
| 2. நேபாளம் | 19.9 |
| 3. பங்களாதேஷ் | 111.4 |
| 4. பாகிஸ்தான் | 121.7 |
| 5. இலங்கை | 17.6 |
| 6. சீனா | 1165.8 |
| 7. இந்தோனேசியா | 184.5 |
| 8. பிலிப்பைன்ஸ் | 63.7 |
| 9. வியட்னாம் | 69.2 |
| 10. எதியோப்பியா | 54.3 |
| 11. நைஜீரியா | 90.1 |
| 12. எகிப்து | 55.7 |
| 13. சூடான் | 26.5 |
| 14. மெக்சிக்கோ | 87.7 |
| 15. பிறேசில் | 150.8 |
| 16. ஈரான் | 59.7 |
| 17. சவூதிஅரேபியா | 16.1 |
| 18. அவுஸ்திரேலியா | 17.8 |
| 19. கனடா | 27.4 |
| 20. ஐக்கிய அமெரிக்கா | 255.6 |
| 21. பிரான்ஸ் | 56.9 |
| 22. ஐக்கிய இராச்சியம் | 57.8 |
| 23. சுவீடன் | 8.7 |
| 24. சுவிற்சலாந்து | 6.9 |
| 25. இத்தாலி | 58.0 |
| 26. ஜேர்மனி | 80.6 |

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
12 SEP 2003
நூலகம்

Source: World Population Data Sheet (1992), Washington, D.C.